
15 ஜனவரி [illegible] ரூ. 3.00
www.padippakam.com

தன்னுரிமைக்கு தமிழினம் இனி யாரை நம்புவது?

# புதிய ஜனநாயகம்

## ஏழைநாடுகள் ‘டங்கலு’க்குப் பெருந்தீனி!



P RAYA
87 RUE DE COLOMBES
92600 AS SUR
SEI FRANCE

படிப்பகம்

www.padippakam.com



# தோழர் மாவோ நூற்றாண்டு விழா: மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடிப்போம்!

டிசம்பர் 26, 1993 — உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவர்களில் ஒருவரான, தோழர் மாவோவின் நூறாவது பிறந்த நாள்.

மாபெரும் தலைவர் ஸ்டாலினுக்குப் பிறகு மார்க்சிய - லெனினியப் பதாகையை உயர்த்திப் பிடித்து, அதன் புரட்சிகர உள்ளடக்கத்தை காத்து வளர்த்து, 60-களிலும் 70-களிலும் உலகமெங்கும் புதிய, புரட்சிகர உற்சாகத்தை ஊட்டிய மாபெரும் சித்தாந்த வாதியாகத் திகழ்ந்தவர்தான் தோழர் மாவோ.

ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் தூக்கியெறிந்த மாபெரும் சீன ஜனநாயகப் புரட்சியின் ஒளி விளக்காகவும், பிற பின்தங்கிய விவசாய நாட்டு புரட்சிகர இயக்கங்களுக்கு புதிய பாதையைக் காட்டிய கலங்கரை விளக்கமாகவும் திகழ்ந்தவர்தான் தோழர் மாவோ.

காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய - அரை நிலப்பிரபுத்துவ விவசாய நாடுகளுடைய புரட்சியின் தன்மை புதிய ஜனநாயகம் என்ற வரையறுப்பை முதன் முதலில் முன் வைத்தவர் மாவோ. பாட்டாளி வர்க்கத் தலைமையிலான விவசாயப் புரட்சியை அச்சாணியாகக் கொண்டதே புதிய ஜனநாயகப் புரட்சி என்று அவர் வரையறுத்து வழிகாட்டினார். இந்நாடுகளில் உள்ள பெருமுதலாளித்துவப் பிரிவினர் தரகு முதலாளிகள் என்று விளக்கமளித்த மாவோ, தேசிய முதலாளிகளுடன் புதிய ஜனநாயகப் புரட்சி கட்டத்தில் ஐக்கிய முன்னணி அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நடைமுறைப்படுத்திக் காட்டினார். இந்த நாடுகளில் விடுதலைக்கான பாதையாக மக்கள் யுத்தப் பாதை எனும் இராணுவ யுத்த தந்திரத்தை வகுத்து வழிகாட்டி, மார்க்சிய - லெனினியத்தை வளப்படுத்தினார்.

''முரண்பாடு பற்றி'', ''நடைமுறை பற்றி'', ''முரண்பாடுகளைச் சரியாகக் கையாளுவது பற்றி'' — ஆகிய கட்டுரைகள் மூலம் இயக்க இயல் பொருள்முதல்வாதத்தைச் செழுமைப் படுத்தி, சித்தாந்தத் துறையில் மார்க்சிய - லெனினியத்தை உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்தெடுத்தார். மக்கள் திரளைச் சார்ந்திருத்தல், அதிகார வர்க்கப் பாணியையும் மேட்டுக் குடித்தனத்தையும் ஒழித்தல், வர்க்கப் போராட்டத்தை கேந்திரக் கண்ணியாகக் கொள்ளுதல், உற்பத்தியைப் பெருக்குதல், விஞ்ஞானத்தை வளர்த்தல் என்ற கொள்கைகளை பொருளாதாரத் துறையில் செயல்படுத்தி மார்க்சிய - லெனினியத்திற்கு மேலும் உரமூட்டினார். சர்வதேச அளவில் எழுந்த குருச்சேவ் பாணி நவீன திரிபுவாதத்தை எதிர்த்து மாபெரும் விவாதம் நடத்தி மார்க்சிய - லெனினியத்தைப் பாதுகாத்து வளர்த்தார்.

எப்போதும், எதற்கும் மக்களைச் சார்ந்திருப்பது என்ற நடைமுறையினால் வெற்றியும், மக்கள் திரளின் ஆதரவையும் தொடர்ந்து பெற்றார். கட்சிக்குள் தோன்றிய வலது, இடது விலகல்களுக்கு எதிராக எப்போதும் விழிப்புடனிருந்து விட்டுக் கொடுக்காமல் சளையாது போராடி வந்தார்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது; அடுத்தடுத்து கலாச்சாரப் புரட்சிகள் என்ற பாதையில்தான் முதலாளித்துவ மீட்சிக்கான முயற்சிகளை முறியடித்து, கம்யூனிசத்தை நோக்கி முன்னேற முடியும் என்ற மாசேதுங்கின் கோட்பாட்டையும் நடைமுறையையும் முன்னாள் சோசலிச நாடுகளின் அனுபவங்கள் எதிர்மறையில் நிரூபித்துக் காட்டிவிட்டன. ஏழை நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களையும், தேசிய விடுதலை யுத்தங்களையும் உற்சாகப்படுத்தி ஐக்கியப்படுத்தி வளர்த்த மாவோவின் மேல்நிலை வல்லரசுகள் பற்றிய ஆய்வுரைகள் இன்று சரியானதென நிரூபித்துக் காட்டியுள்ளன.

எஃகுறுதி, எளிமையான வாழ்வு, கடின உழைப்பு என்பதையே பண்புகளாகக் கொண்ட அம்மாபெரும் தலைவரை, பாலியல் வக்கிரம் பிடித்தவராக இன்று ஏகாதிபத்தியவாதிகள் கீழ்தரமாக அவதூறு செய்து வருகிறார்கள். போலிக் கம்யூனிஸ்டுகளோ அவரை, இடது தீவிரவாத தவறிழைத்து, சர்வதேச கம்யூனிச இயக்கத்தைப் பிளவுபடுத்திய குற்றவாளி என சாடி வருகிறார்கள். மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடிப்பதன் மூலம், ஏகாதிபத்தியவாதிகள் - திருத்தல்வாதிகளின் அவதூறுகளையும் புரட்டல்களையும் முறியடிக்க தோழர் மாவோவின் நூறாவது பிறந்த நாளில் சூளுரைப் போம்! பருண்மையான நிலைமைக்கேற்ப மார்க்சியத்தைப் பருண்மையாகப் பிரயோகித்து வெற்றி கண்ட தோழர் மாவோவின் வழியில், இந்திய புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல இந்நாளில் உறுதியேற்போம்!

தோழர் மாவோவின் புகழ் நீடூழி வாழ்க!

மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனை தழைத்தோங்குக!

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

ஒன்பதாம் ஆண்டு

3-4

16 டிசம். '93 - 15 ஜன. '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும் மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# வங்கி-பங்குச் சந்தை மோசடியும் கூட்டு விசாரணை மோசடியும்

வரலாறு காணாத வங்கி - பங்குச்சந்தை மோசடியைப் போலவே அதனை விசாரிக்க அமைக்கப்பட்ட கூட்டுப் பாராளுமன்றக் குழுவின் விசாரணையும் இன்னுமொரு மோசடி என்பதை அதன் முடிவுகள் தெளிவாக்கிவிட்டன. ஏறத்தாழ 16 மாதங்கள் நடந்த விசாரணையில், யார் குற்றவாளி என்பதை நாடாளுமன்ற விசாரணைக் குழு தெளிவுபடுத்தவே இல்லை. பிரதமர் நரசிம்மராவுக்கு பங்குச் சந்தை தரகரான அர்ஷத் மேத்தா, ஒரு கோடி ரூபாய் ''நன்கொடை''யாகக் கொடுத்த விவகாரத்தைப் பற்றி விசாரணைக் குழுவின் அறிக்கை கறாராக முடிவைச் சொல்லாமல் மழுப்புகிறது. பங்குச் சந்தை தரகர்களான அர்ஷத் மேத்தா, பூபேன் தலால், ஹிதேன் தலால் ஆகியோர் மீது குற்றம் சாட்டிய போதிலும், பிரதமர் ராவ் மகன் பிரபாகர் ராவின் கோல்டு ஸ்டார் நிறுவனத்துக்கு ஹிதேன் தலால் கொடுத்த ரூ. 2 கோடி லஞ்சம் ஆகியன பற்றி அறிக்கை திட்டவட்டமாக எதுவும் குறிப்பிடவில்லை. இவற்றை இந்திய பங்கு பத்திர மற்றும் பங்குச் சந்தைக் கழகம் (SEBI) மேற்கொண்டு விசாரணை செய்யுமாறு அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, வங்கி - பங்குச் சந்தை மோசடியில் ரிசர்வ் வங்கி கவர்னரான வெங்கிடரமணனின் பங்கு, நிதியமைச்சரின் பங்கு, அரசு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பங்கு ஆகியன பற்றி விசாரணைக் குழுவின் அறிக்கை யாரையும் குற்றம் சாட்டவில்லை. அரசு நிறுவனத்துறையின் செயலாளரான சுரேஷ் குமார் பொதுவாக விமர்சிக்கப்பட்டுள்ளார். ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை கவர்னர்களான ஜானகிராமன் மற்றும் அமிதாப் கோஷ் ஆகியோர் குறைபாடுகளை முறையாக சோதித்தறியவில்லை என்று அறிக்கை விமர்சிக்கிறதே தவிர, வங்கித்துறையும் அரசுத்துறையும் ஊழல் - மோசடிக்கு உடந்தையாகச் செயல்பட்டதைக் குற்றம் சாட்டவில்லை. இதே ஜானகிராமன்தான் வங்கி - பங்குச் சந்தை மோசடிகளை விசாரிக்க ரிசர்வ் வங்கி நியமனக் குழுவின் தலைவராக உள்ளார். மோசடியில் ஈடுபட்ட நிதி நிறுவனங்கள் மீது கம்பெனிகள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிக்கை பரிந்துரைத்துள்ளதே தவிர, எந்தெந்த நிறுவனங்கள் என்று குறிப்பிடவேயில்லை. அரசு நிதியை எடுத்துப் பங்குச் சந்தையில் சூதாடி ஏப்பம்விட்ட மத்திய மந்திரி சங்கரானந்த் போன்றவர் மீது வெறுமனே கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளதே தவிர, அவரது பதவியைப் பறித்து சிறையிலடைத்து அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்யுமாறு விசாரணைக் குழு கோரவில்லை. மேலும் பங்குச் சந்தை மோசடியில் சிக்கி அம்பலப்பட்டு பதவியை ராஜினாமா செய்த மத்திய மந்திரிகள் பற்றி அறிக்கை எதுவும் குறிப்பிடவில்லை.

கடைசியாக, வரலாறு காணாத இம் மோசடிக்கு தார்மீகப் பொறுப்பேற்று நிதியமைச்சர் மன்மோகன்சிங் பதவி விலக வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கொண்டு வந்த இணைப்பும் அறிக்கையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. விசாரணைக் குழு வாக்கெடுப்புகளின் போது, பாசிச ஜெயா கட்சியின் பிரதிநிதி பி.ஜி.நாராயணன் தலைமறைவாகி ஆளும் காங்கிரசின் ஊழல் பெருச்சாளிகள் தப்பித்துக் கொள்வதற்கு உதவினார். விசாரணைக் குழுவில் அங்கம் வகிக்கும் மணிசங்கர் அய்யர், முரளி தியோரா ஆகியோர் குழுவில் உள்ள இதர நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விருந்துகள், பரிசுகள் கொடுத்து எதிர்த்தரப்பினர் கொண்டு வந்த திருத்தங்களைச் சரிகட்டிவிட்டனர். 1991-92 ல் நடந்த வங்கி - பங்குச்சந்தை மோசடியை 1986-லிருந்தே தொடர்வதாகக் கூறி நிதியமைச்சரைத் தப்பிக்க வைத்துவிட்டனர்.

ஊழலை ஒழிக்க முடியாது; சாமர்த்தியம் இருந்தால் நீயும் சுருட்டிக் கொள்; இல்லையேல் அதற்கு இசைவாக நடந்து கொள் என்பதுதான் காங்கிரசுப் பெருச்சாளிகள் இதன் மூலம் போதிக்கும் உபதேசம். ஊழல் சர்வவியாபகமாகிவிட்ட நிலையில், விசாரணைக் கமிஷன்கள் வெறும் கண்துடைப்பு நடவடிக்கைதான் என்பதை வங்கி - பங்குச் சந்தை மோசடி விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது. ●

படிப்பகம்

www.padippakam.com

# தமிழினம் இனி யாரை நம்புவது?

**தமிழினத் தன்னுரிமையைத் தனது இலட்சியமாகக் கொண்டில்லாத திராவிடக் கட்சிகளையோ, அதற்கு வால் பிடிக்கும் தமிழினவாதக் குழுக்களையோ தமிழினம் இனி நம்ப முடியாது.**

தமிழினத்தின் பெயரால் இயங்கும் நூற்றுக்கும் மேற்பட்ட குழுக்களில் எதுவும் தமிழினத்தின் நம்பிக்கையைப் பெற்றவையாக வளரவே இல்லை. தேர்தல் முடிவுகளை மட்டுமே வைத்துப் பார்த்தால் தமிழினத்தின் நம்பிக்கையைக் கணிசமான அளவு பெற்றவை திராவிடக் கட்சிகள் தாம். அவையும் தமிழினத்தின் எதிரியோடு ''மோதும்'' அளவு உண்மையில் ஒருபோதும் துணிந்ததில்லை. இக்கட்சிகள் எதிரியுடன் சமரசம் செய்து கொண்டு துரோகம் செய்வதும், கோழைகளாகித் தமிழினத்தை நட்டாற்றில் கைவிடுவதும் புதிதல்ல.

பின், ''தமிழினம் இனி யாரை நம்புவது?'' என்ற கேள்வி ஏன் இப்போது எழுகிறது? ''என்னை நம்பு, என்னை நம்பு'' என்று சொல்லி, தமிழினத்தின் தலைமைக்குப் போட்டிபோடுவோர் கூச்சல் இப்போது ஏராளமாகி விட்டது. எனவேதான் இந்தக் கேள்வி தமிழினத்திற்கு முக்கியமாகிவிட்டது.

இப்படிப் பெருங்கூச்சல் போடுவோரில் இனியாரை நம்புவது என்று முடிவு செய்யும் முன் தமிழினம் தனது அடிப்படை தேவை, நலன் என்னவென்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தீர்மானம் எதுவுமில்லாததால்தான் தமிழினம் பல துரோகிகளை நம்பி ஏமாந்து போவதே இதன் வரலாறாகிவிட்டது.

தமிழர்கள் தம் அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமைகளைப் பெறுவதும், அவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுவதும் தமிழினத்தின் அடிப்படையான தேவையாக உள்ளது. ஆனால் இப்படிச் சொல்வதும் கூட மிகவும் பொதுவானது; கறாராக வரையறுக்கப்படாததும்தான்.

''தன்னுரிமை - சுயநிர்ணய உரிமை'' அதாவது பிரிந்துபோகும் உரிமை உட்பட எப்படிப்பட்ட அரசியல், பொருளாதார, பண்பாட்டு அமைப்பை வைத்துக் கொள்வது என்பதைத் தமிழினமே தீர்மானித்துக் கொள்ளும் உரிமைதான் அதன் அடிப்படைத் தேவை. இதுதான் தமிழர் தம் அனைத்து உரிமைகளைப் பெறவும், அவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளவுமான கறாரான, குறிப்பான வரையறுப்பு.

அதுமட்டும் போதாது, தமிழினம் தன்னுரிமை பெறுவதற்கு யார், யார் தடையாக, எதிராக உள்ளார்கள்; இந்த எதிரிகளை எந்த முறையில் முறியடித்துத் தன்னுரிமை பெற வேண்டும் என்பதையும் தமிழினம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

அந்நிய ஏகாதிபத்தியம், அதன் பங்காளிகளும் அடிவருடிகளுமான தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்கள் - இந்த சக்திகள் தான் தமிழினத்தின் எதிரிகள். இவர்கள்தாம் தமது சுரண்டல் நலன்களுக்காகத் தமிழினம் மட்டுமல்ல, பிறதேசிய இனங்களையும் அடக்கி, ஒடுக்கி இந்தியக் ''கூட்டமைப்பு'' என்னும் சிறையில் பூட்டிவைத்துள்ளார்கள். இவர்களுக்குத் தலைமையேற்கும் சக்தியாக பார்ப்பனீய - பனியா பாசிச கும்பலும், இவர்களின் அரசியல் பிரதிநிதியாகவே காங்கிரசு, பாரதீய ஜனதா, சிவசேனா, அ.தி.மு.க. ஆகிய கட்சிகளும் அவற்றின் துணை அமைப்புகளும் உள்ளன.

தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணிக் கட்சிகள் அவ்வப்போது மாநிலங்களின் கூடுதல் அதிகாரம், ஜனநாயக உரிமைகள் பற்றிப் பேசினாலும் இப்போதைய அகில இந்தியக் ''கூட்டமைப்பை''ப் பாதுகாப்பதிலும், மேற்கண்ட எதிரிகளின் நலன்களுக்குமே இறுதியில் பாடுபடுகின்றன. இன்றைய அரசியல் அமைப்புக்குள்ளாகவே தேசிய இனங்கள் தமது உரிமைகள், தேவைகள், நலன்களை அடைந்துவிட முடியும் என்று மோசடி நாடகமாடும் அதேசமயம், இந்த தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணியும் இந்த நாட்டில் தேசிய இனப் பிரச்சினை இருப்பதாகவே அங்கீகரிப்பதில்லை. ஆகவே தேசிய இனங்களின் கோரிக்கைகள், இயக்கங்களை மறைமுகமாகவும், நெருக்கடி முற்றும் போது பகிரங்கமாகவும் ஒடுக்குவதற்கே இந்தக் கட்சிகள் நிற்கின்றன. ஆகவே இவை இன்னொரு வகை எதிரிகளாகவே உள்ளன.

**வை.கோ: தி.மு.க.வின் தலைமை பீடம்தான் குறி.**



இந்த நாடு வேற்றுமையில் ஒற்றுமை கொண்டது என்று பசப்பப்படுகிறது; ஆனால் இந்து (இந்துத்துவம்) - இந்தி - இந்தியா என்பதே ஆதிக்கம் வகிக்கிறது. இந்திய அரசியல் ''கூட்டமைப்பு''த் தத்துவ அடிப்படையிலானது என்று பீற்றிக் கொள்ளப்படுகிறது; ஆனால் மாநிலங்களுக்கு சட்டப்படியே உள்ள உரிமைகளைக் கோரினால் கூட மறுக்கப்பட்டு, பறிக்கப்படுகிறது; தேசிய இனங்களின் உரிமை கோரி முணுமுணுத்தால் கூட பிளவுவாத, பயங்கரவாத முத்திரை குத்தி ஒடுக்கப்படுகிறது. ஏற்கனவே நாட்டின் ஏழு மாநிலங்களில் இராணுவ ''ஆக்கிரமிப்பு'' ஆட்சிதான் நடக்கிறது. ஆகவே, ஏற்கனவே உள்ள அரசியல் அமைப்புக்குள், நாடாளுமன்ற - சட்டபூர்வ வழிமுறையில் எந்த தேசிய இனமும் தனது தன்னுரிமை - சுயநிர்ணய உரிமையைப் பெற்றுவிட முடியாது. அண்டை நாட்டிலுள்ள ஈழமக்கள் சுயநிர்ணய உரிமை பெறுவதையே கூட அனுமதியாது, ஆக்கிரமித்து இன விடுதலைப் போரை ஒடுக்குகிற அரசின் கீழ் தமிழினம் மட்டுமல்ல, வேறு எந்த இனமும் சுய நிர்ணய உரிமை பெறுவது வெறும் கற்பனையே! எனவே தன்னுரிமைக்கு உண்மையாகப் போராடும் எந்தவொரு இயக்கமும், இன விடுதலையே வழிமுறையாகக் கொண்டிருக்கவும் வேண்டும்.

தமிழினத்தின் உரிமைப் பிரச்சினையில் அக்கறையுடைய கட்சிகள், குழுக்கள், அவற்றின் இயக்கங்களை மேற்கண்ட விளக்கங்கள், வரையறுப்புகளின் அடிப்படையில் எடைபோட்டால் பொதுவில் மூன்று பிரிவுகள், போக்குகள் நிலவுவதைக் காணலாம்.

முதலாவது வகையாக, இந்தப் பிரச்சினையை நீண்டகாலமாக எழுப்பி வரும் திராவிடக் கட்சிகள். இவை தமிழினத்தின் அடிப்படை உரிமை, தன்னுரிமை - சுயநிர்ணய உரிமைதான் என்கிற கறாரான வரை



படிப்பகம்

www.padippakam.com

யறுப்பை மறுத்தும், நிராகரித்தும் வருபவை. தமிழினத்தின் உரிமைகள் என்பதற்கு மிகமிக மேலோட்டமான, பொதுவான விளக்கங்கள் கொடுத்து வருபவை. தமிழினத்தின் எதிரிகளுடன் மாறிமாறி சமரச சரணடைவும், கூட்டும் வைத்துக் கொள்பவை. எதிரிகளுடன் தீர்க்கமான போராட்டத்தை நிராகரித்து, நாடாளுமன்ற - சட்டவாத வழிமுறைகளுக்குள் தமிழினத்தை முடக்கவும், மீறினால் காட்டிக் கொடுத்துத் துரோகம் செய்யவும் தயங்காதவை.

இரண்டாவது வகையாக, தமிழினத்தின் தன்னுரிமையே தமது இலட்சியம் என்று கூறிக்கொள்ளும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழினவாதக் குழுக்கள். இவற்றில் பலவும் கடந்த பத்தாண்டுகளில் தோன்றியவை. இவற்றில் சில தம்மைக்கட்சி, கழகம் என்று கூறிக்கொண்டாலும் அவை குழுக்களாகவே உள்ளன. தமிழினத் தன்னுரிமை என்பது இன விடுதலை, தனி நாடு, சுதந்திர அரசு அமைப்பதுதான் என்கிற வரையறுப்பையே தமிழினவாதக் குழுக்கள் கொண்டுள்ளன. ஆனால் தமிழின தன்னுரிமைக்கு, இன விடுதலைக்குத் தடையாக, எதிராக இருக்கும் சக்திகள், வர்க்கங்கள் பற்றியும் தமது இலட்சியத்தை அடைவதற்கான வழிமுறையை வகுப்பதிலும் இவற்றிடையே ஒற்றுமை இல்லை என்பது மட்டுமல்ல; எந்தக் குழுவும் தெளிவான, இறுதியான முடிவுக்கும் வரவில்லை; பரிசீலனை, ஆய்வு என்ற நிலையிலேயே இப்பிரச்சினையை வைத்துக் கொண்டுள்ளன. அதேபோல தமிழினத்துக்குள் யார் யார் (எந்தெந்த சாதியினர்) அடங்குவர் என்பதிலும் இக்குழுக்கள் தெளிவற்ற நிலையிலேயே உள்ளன. எனவே, தமிழரைத் திரட்ட முடியாத குழுக்களாகவும், எதிரியைத் தாக்க முடியாத வாய்ச்சவடால் போராளிகளாகவும் தான் இருக்கின்றன. ஈழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பதன் மூலம் மட்டுமே பெரும்பாலான குழுக்கள் சூடேற்றிக் கொள்கின்றன. ஓரிரு குழுக்கள் புலிகளைப் பார்த்து சூடுபோட்டுக் கொள்ளும் பூனைகளாகி குண்டுவெடிப்புகள் மூலம் தமிழினப் படை கட்டும் முயற்சியில் உள்ளன.

மூன்றாவது வகையாக, போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளின் திரிபுவாதப் பாதையில் இருந்து முறித்துக் கொண்டு வெளியேறிய காலத்தில் இருந்தே நாட்டிலுள்ள எல்லா தேசிய இனங்களுக்கும் தன்னுரிமை - சுய நிர்ணய உரிமை வேண்டும் என்று கூறித் தமது திட்டத்தின் ஒரு பகுதியாக அதைக் கொண்டுள்ள மார்க்சிய - லெனினியக் குழுக்கள் உள்ளன. தமிழினத்தை அடக்கி, ஒடுக்கிச் சுரண்டும் அதன் தன்னுரிமைக்கு எதிரியாய் இருக்கும் ஏகாதிபத்தியம், தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்களையும், அவர்களின் அரசு அமைப்பையும் புரட்சியின் மூலம் தூக்கி எறிந்து ஒரு புதிய ஜனநாயக அரசமைப்பதே இக்குழுக்களின் திட்டமாக உள்ளது. அப்புரட்சியிலும், அரசிலும் ஓர் அங்கமாகத் தன்னுரிமைப் போரும், சுயநிர்ணய உரிமை பெற்ற தமிழின ஆட்சியும் அமைக்கப்படும். திராவிடக் கட்சிகளைப் போல சந்தர்ப்பவாத - சமரச பாதையினையோ, தமிழினவாதக் குழுக்களைப் போல வெற்றுச் சவடாலோ அடிக்காமல் இதற்கான போராட்டத்திலும் மார்க்சிய - லெனினியக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

இனி, இம்மூவகைப் பிரிவுகளில் தமிழினம் எதை நம்புவது என்று பரிசீலிப்போம். தமிழினத்தின் நம்பிக்கையைப் பெறும் தகுதியைத் திராவிடக் கட்சிகள் எப்போதோ இழந்துவிட்டன. தமிழினத் தன்னுரிமை பற்றி அவர்கள் மறந்தும் பேசுவதில்லை. அப்படிப் பேசுவோர்களைக் கட்சியில் இருந்து வெளியேற்றுவதும், காட்டிக் கொடுக்கும் துரோகம் செய்வதும், அதிகாரத்தில் இருந்தால் தானே அடக்கி ஒடுக்குவதும் கூட செய்கின்றனர்.



வீரமணி, கருணாநிதி: கொள்கையைக் காற்றில் பறக்கவிட்ட 'சூரர்'கள்.

திராவிடக் கட்சிகள் விடாது பற்றி நிற்கும் ஒரு பாரம்பரியம் உண்டு: ஒரு நெருக்கடி, அடக்குமுறை என்று வந்தால் உயிரையும் தியாகம் செய்து கொள்கை, இலட்சியத்தில் ஊன்றி நிற்பதற்குப் பதிலாக, தம்மையும் அமைப்பையும் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கொள்கை, இலட்சியத்தைப் பலியிடுவது; அதையே பெருமையாகப் பீற்றிக் கொள்வதும்தான். ருசியாவுக்குப் போய் வந்த பெரியார் பொதுவுடமை சித்தாந்த அடிப்டையில் ஒரு ஐந்து அம்ச சுயமரியாதைக் கொள்கையை வெளியிட்டார். ஆனால் காலனிய அரசு கம்யூனிஸ்டுகள் மீது தாக்குதல் தொடுக்கத் தொடங்கியது; பெரியாரின் பத்திரிக்கை, அதன் ஆசிரியரும் பெரியாரின் சகோதரருமான கிருஷ்ணசாமி மீதும் வழக்குப் போட்டது. இவற்றுக்கு அஞ்சிய பெரியார் சுயமரியாதைத் திட்டத்தை நீர்த்துப் போகச் செய்து, வெறும் சீர்திருத்தமாக மாற்றி விட்டார். பெரியார் தொடர்ந்து நீதிக் கட்சியிலும் இணைந்தார். இயக்கம், அமைப்புதான் முக்கியம்; அதைக் காப்பதற்கு கொள்கை, இலட்சியத்தைக் கைவிட வேண்டியுள்ளது என்றார் பெரியார்.

அதேபோல, தி.மு.க.வின் உயிர் நாடியான கொள்கையாக இருந்தது ''திராவிட நாடு திராவிடருக்கே'' என்ற கொள்கை. ''அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு'' என்றும், ''எல்லாரும் போய்விட்டால் கூட காஞ்சிபுரத்தில் என் வீட்டு திண்ணையில் படுத்துக் கொண்டாவது திராவிட நாடு கோரி முழக்கமிடுவேன்'' என்றும் சொன்னார் அண்ணாதுரை. ஆனால் 1962-இல் பிரிவினைத் தடைச் சட்டம் வருவதாக மிரட்டியதும் திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்டு மாநில சுயாட்சியாக மாற்றிக் கொண்டார். கொள்கை, இலட்சியத்தைக் கைவிட்டும் இயக்கம், அமைப்பைக் காத்துவிட்டதாகவும், 1967 தேர்தலில் வென்றதாகவும், அதைப்பற்றி ஆய்வு செய்ய அமெரிக்காவின் குடியரசுக் கட்சிப் பிரதிநிதிகளே வந்ததாகவும்

''தி.மு.க.வின் வரலாறு'' பீற்றிக் கொள்கிறது.

அதே சமயம் தேர்தல் அரசியல் சூதாட்டத்தில் பதவியைப் பிடிப்பதற்கான துருப்புச் சீட்டாகத் தமிழின பாசத்தைத் திராவிடக் கட்சிகள் பயன்படுத்துகின்றன. ஆனால் கொஞ்ச நஞ்சமுள்ள தமிழின நலன்கள் உரிமைகளைக் கூட (பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்காக) அக்கட்சிகள் பலியிடுகின்றன. இதைத் தமிழர்களும், அக்கட்சிகளில் உள்ள சில புதிய, இளைய அணிகளைத் தவிர அனைவரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இங்கே திராவிடக் கட்சிகள் என்று சொல்லும்போது வீரமணி தலைமையிலான திராவிடர் கழகத்தையும் உள்ளிட்டுத்தான் குறிப்பிடுகிறோம். அடுத்தடுத்து ஆட்சிக்கு வருபவர்களை ஆதரித்து ஆதாயம் அடையும் தி.க., தான் ஒரு அரசியல் கட்சி அல்ல, சமூக, பண்பாட்டு இயக்கம்தான் என்று கூறிக் கொள்கிறது. இது ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் பயன்படுத்தும் ஒரு தந்திரம்தான். அதாவது, தமது ஆதரவு பெற்ற அரசியல் கட்சி வெற்றி பெறும்போது உரிமை பாராட்டி ஆதாயம் அடைவது; அக்கட்சி லஞ்ச ஊழல் போன்ற பல தவறுகள் செய்து அம்பலப்படும்போது தான் மட்டும் விலகிநின்று தப்பித்துக் கொள்வது என்கிற தந்திரம். கேட்டால், அரசியல் என்று போனால் சமரசம் - சந்தர்ப்பவாதம், லஞ்ச - ஊழல் போன்ற தவறுகள் வரும் என்று சமாதானம் கூறுகிறார்கள். அரசியல் என்றாலே நாடாளுமன்ற - சட்டமன்ற அரசியல் மட்டும்தான் தி.க.வின் கண்ணுக்குத் தெரிகிறதா? தம்மையும் தமது சொத்துக்களையும் பர்துகாத்துக் கொள்வதே இவர்களது கொள்கை, இலட்சியம் எல்லாம். இதனால் சட்டவாதமே புரிகின்றனர். தமிழின தன்னுரிமை போன்றவை அடிப்படையில் அரசியல் கோரிக்கைள்; அதில் உறுதியும் தெளிவும் இருப்பின் யுத்தம் என்பது அரசியலின் நீடிப்பு என்கிற முறையில் ஈழம், பாலஸ்தீன, ஐரீஷ் போராளிகளைப்போல மாற்று அரசியல் வழிமுறைகளைத் தெரிவு செய்ய முடியும்.

ஆனால் தி.க. தமிழின தன்னுரிமைக் கோரிக்கையை எப்போதோ கை கழுவிவிட்டது. தி.க.வின் அதிகார பூர்வ ஏடான ''விடுதலை''யின் முகப்பிலே முன்பு ''திராவிட நாடு திராவிடருக்கே'' என்றும் பின்பு ''தமிழ்நாடு தமிழருக்கே'' என்ற முழக்கம் தவறாது இடம் பெறும். இப்போது திருட்டுத்தனமாக அதை அகற்றிவிட்டார்கள். மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் மீது தி.க. எழுதிய அவதூறுகளை மறுத்து நாம் எழுதியபோது ''தமிழினத் தன்னுரிமை தனது இலட்சியம் என்று தி.க. பிரகடனம் செய்யுமா? என்று கேட்டிருந்தோம். தி.க.வோ பிறகு மூச்சுவிடவே இல்லை.



கிட்டுவுடன் புலிகளின் தமிழக பினாமிகள்: பழ. நெடுமாறன், பெ. மணியரசன்

இட ஒதுக்கீடு, பார்ப்பன எதிர்ப்பு என்று சில அம்சங்களில் உடன்பாடுகள் இருப்பினும் இனம், மொழி, தேசியம், மதம் ஆகிய பல்வேறு பிரச்சனைகளிலும் பெரியாரிசமும் அம்பேத்காரிசமும் முரண்பாடுகள் நிறைந்தவை

ஆகவே தமிழினத் தன்னுரிமையைத் தமது இலட்சியமாகக் கொண்டில்லாத திராவிடக் கட்சிகளைத் தமிழினம் இனி நம்பமுடியுமா? அவர்களது வெற்று வாய்ச்சவடாலை நம்பி ஏமாந்து போகலாமா? கூடாது. தி.மு.க.வில் இருந்து வெளியேற்றப்பட்ட வை.கோபால்சாமி தமிழின நலன்களுக்காகப் போராடும் வீரதிர மிக்க புதிய தலைவர் என்று திராவிடக் கட்சிகளில் உள்ள ஒருபகுதி இளைய தலைமுறையினரும், தமிழினவாதக் குழுக்களும் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடுகின்றனர். ஆனால் அவரோ, கட்சியின் தலைமை இடத்துக்குத் தான் முன்னேறவிடாமல் தடுத்து ஓரங்கட்டப்பட்டது, தி.மு.க. தலைமைக்கு மு.க.ஸ்டாலின் உயர்த்தப்படுவது, அக்கட்சி கருணாநிதியின் குடும்பச் சொத்தானது, தனக்கு எதராக அக் குடும்பத்தினர் செய்த சதி, கடைசியாக வை.கோ. மீது கொலை பழி சுமத்தப்பட்டது இவைப்பற்றித்தான் பேசுகின்றார்.

வை.கோ. தனது கொள்கை அண்ணாவினுடையது, தி.மு.க. வினுடையதுதான்; அதில் மாற்றமில்லை என்று திரும்பத் திரும்பக் கூறுகிறார். அக்கொள்கையை கருணாநிதி அமுலாக்கியதில் கூட தவறு நேர்ந்துவிட்டதாகக் கூறவில்லை. கட்சிக்குள் நடந்த பதவிப் போட்டிகளில் கருணாநிதியால் வஞ்சிக்கப்பட்ட ஒரு கூட்டத்தின் தலைவர் என்பதற்கு மேல் வை.கோ.விடம் வேறு புதுமை ஏதும் கிடையாது. நாடாளுமன்ற - சட்டமன்ற அரசியலுக்கேற்ற இன்னொரு கவர்ச்சிவாத, பிழைப்புவாதத் தலைவர்தான் வை.கோ. என்பதில் துளியும் சந்தேகம் வேண்டாம். அந்த அளவுக்குத் தயாரான ஆதரவாளர்களையே அவர் பெற்றுள்ளார். ஒருவேளை அந்த அரசியலில் ஒரு குறிப்பிட்ட இடத்தை வை.கோ. பிடித்துவிட்டாலும் அதனால் இன்னொரு கருணாநிதிதான் கிடைப்பாரே தவிர, தமிழினத்துக்கு அதனால் பயன் ஏதும் இல்லை. தமிழினத் தன்னுரிமை பற்றித் தவறியும்கூட, அவர் வாய் திறப்பதில்லை. இனி, இராமதாசைப் போல அவரும் வாய்ச் சவடால் அடிக்கலாம். ஆனால் நாடாளுமன்றத்திலும், பொதுக்கூட்டங்களிலும் வீரதீர சவடால் அடிப்பதும், புலிகளின் உடுப்புகளைப் போட்டுக் கொண்டு புகைப்பட ''போஸ்'' கொடுப்பதும் ஒருவரைத் தன்னுரிமைப் போராளியாக்கிவிட முடியாது.

இருப்பினும் வை.கோவின் ரசிகர்களைப் போலவே பல தமிழினவாதக் குழுக்களும் அவர்மீது நம்பிக்கை வைக்கின்றன. வை.கோ. இப்படிச் செய்ய வேண்டும், அப்படி

www.padippakam.com

நடக்க வேண்டும் என்று தமது எதிர்பார்ப்பைப் பட்டியலிடுகின்றன. தாமே போய் அவரோடு ஒட்டிக் கொள்கின்றன. அதேசமயம் இராமதாசை ஊதிப்பெருக்கி தமிழினத் தலைவராக்கிய சிறது காலத்திலேயே அவர் காற்றுப்போன பலூனாகிவிட்டதைக் கண்டு அதிர்ச்சியுற்ற அக்குழுக்கள், வை.கோ. விவகாரத்தில் சற்று எச்சரிக்கையோடு அணுகுகின்றன. தமது சொந்த முயற்சி, உழைப்பை வைத்து, தமிழின மக்களைத் திரட்டும் துணிவும் திராணியும் இல்லாத இத்தமிழன வாதக் குழுக்கள் இராமதாசு, வை.கோ. போன்ற திடீர் தலைவர்களை ஊதிப் பெருக்கி அவர்களது நிழலில் அரசியல் நடத்துவதே வழக்கமாகிவிட்டது. சீரழிந்த சில மார்க்சிய - லெனினியக் குழுக்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

மார்க்சியம் - லெனினியம் - மாவோ சிந்தனையும், பெரியாரிசம் - அம்பேத்காரிசமும் அடிப்படையில் மாறான சித்தாந்தங்கள். இட ஒதுக்கீடு, பார்ப்பன எதிர்ப்பு என்று சில அம்சங்களில் உடன்பாடுகள் இருப்பினும் இனம், மொழி, தேசியம், மதம் ஆகிய பல்வேறு பிரச்சினைகளிலும் பெரியாரிசமும் அம்பேத்காரிசமும் முரண்பாடுகள் நிறைந்தவை. ஆனால் இந்த மாறுபாடுகளையும், முரண்பாடு களையும் மூடிமறைத்து ஒன்றுடன் ஒன்று சமரசம் செய்து கொண்டு, இந்த மூன்று சித்தாந்தங்களையும் பல்வேறு அளவுகளில் செயற்கையாக இணைத்துக் கொண்டுள்ளன இத் தமிழினவாதக் குழுக்கள். தமிழின தன்னுரிமை, தனிநாடு, இன விடுதலை தமது இலட்சியம் என்று கூறிக்கொண்டாலும் அதற்குத் தடையாய் உள்ள எதிரிகளையும், அவர்களுக்கு எதிரான போராட்ட வழிமுறைகளையும் முடிவு செய்யாது, நிரந்தரப் பரிசீலனையில் வைத்துள்ளன. பார்ப்பன எதிர்ப்பு, இட ஒதுக்கீடு போன்ற சில உடன்பாடான பிரச்சினைகளில் அமைப்புக்கு ஐந்துபேர் கூட கூடாத கூட்டு நடவடிக்கைகளும், புலிகள் ஆதரவும், எதிரிகள் முத்திரை குத்தி தலையெடுக்கவிடாமல் தடுப்பதும் தான் இவர்களுக்கிடையே உள்ள ஒற்றுமை. மேலும், இக்குழுக்கள் தங்களுக்கிடையிலான முரண் பாடுகளைப் பகிரங்கமான வாதப்பிரதிவாதங்கள், விமர்சனங்களுக்கு உட்படுத்தாமல் ஒன்றுக்கொன்று முதுகு சொறிந்து கொண்டு நாடகமாடுகின்றன. ஆனாலும் இக்குழுக்களின் தான்தோன்றித்தனம், தற்புகழ்ச்சி தற்பெருமை, தன்னகங்காரம் ஆகியவை மேலோங்கி நிற்பதால் இவை எந்தவொரு திட்டம், நடைமுறை அடிப்படையிலும் ஐக்கியப்பட முடியாமல் தடுக்கின்றன. இவற்றின் தலைமை முழுவதும் சொந்த வாழ்க்கையைப் பேணுவதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளதால் இவை இலட்சியத்திற்காக எந்தத் தியாகமும் செய்யத்துணிவற்றவையாக உள்ளன. ராஜீவ் கொலையைத் தொடர்ந்து வந்த நாட்களில் இவர்களின் கோழைத்தனம் அம்பலப்பட்டுப் போனது. ஆகவே தமிழினத் தன்னுரிமை இவர்களின் கனவு களில் இருப்பதே இவர்களுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் அளிக்கிறது. அது நடைமுறைக்கு வருவதைக் கண்டு இவர்களே



தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில்
ராமதாஸ், பெருஞ்சித்தரனார்;
ஒருவரின் முதுகை ஒருவர் சொறிந்து
கொள்வதில் சலிப்பதேயில்லை

அஞ்சுகின்றனர். இப்படிப்பட்டவர்களைத் தமிழினம் எப்படி நம்புவது?

தமிழினத் தன்னுரிமையைத் தமது இலட்சியமாக அறிவித்துக் கொண்டுள்ள தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சிகள், தமிழ்நாடு மா-லெ கட்சிகள் என்று சில குழுக்களும் உள்ளன. இவை பிற தமிழினவாதக் குழுக்களின் நிலைப்பாடுகளுக்கே மார்க்சிய - லெனினிய சாயம் பூசிக் கடை விரித்துள்ளனவே தவிர, அச்சித்தாந்தத்துக்கும் இவர்களுக்கும் சம்பந்தமே கிடையாது. இக்குழுக்கள் ஒன்று அவற்றின் தலைமையின் நேர்மை, நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாகி பிறகட்சிகளில் இருந்து தூக்கி எறியப்பட்டவை; அல்லது தமது சீரழிவு, பிழைப்புவாத, சந்தர்ப்பவாத அரசியலுக்கு வசதியாகத் தமிழினத் தன்னுரிமைக் கோரிக்கையை வரித்துக் கொண்டவை.

மேற்கண்ட தமிழினவாதக் குழுக்களில் சிலவும், பொதுவுடமை பெயர் கொண்ட சில தமிழினவாதக் குழுக்களும் ஈழ விடுதலைப்புலிகளின் பினாமி அமைப்புகள் என்கிற உண்மையும் மறுக்க முடியாததாகும். இவை உலகில் வாழும் ஏழு கோடி தமிழர்களும் ஒரே தேசிய இனம், அவர்களுக்குத் தனிநாடு வேண்டும் என்கிற பிற்போக்கான இலட்சியத்தையே பரப்புகின்றனர். ஏனென்றால், பூர்வகுடிப்பிறப்பு அடிப்படையில் திராவிட மொழி பேசும் அனைவரும் திராவிட இனத்தவரே, இவர்களுக்கு ஒரு தனிநாடு என்பது எப்படிப் பிற்போக்கானதோ, அதேபோன்றதுதான் உலகத் தமிழினம் என்கிற கருத்தாகும்.

''உலகத் தமிழினம்'' என்கிற கருத்து சரியானதென்றால் ''உலகத் தெலுங்கினம்'', ''உலக கன்னட இனம்'', ''உலக மலையாள இனம்'', ''உலக (உருது) இசுலாமிய இனம்'', ''உலக (அரபு) இசுலாமிய இனம்'' என்பவையும் சரியானதாகிவிடும். அப்படியானால் தமிழ்நாட்டில் வாழும் தெலுங்கு, கன்னட, மலையாள, உருது பேசும் மக்கள் தமிழினத்தில் அடங்க மாட்டார்களா? அவர்களின் நிலை என்ன? போன்ற கேள்விகள் எழும். பினாமி அரசியல் நடத்தும், வெறும் வாய்ச்சவடால் அடிக்கும் இனவாதக் குழுக்களுக்கு இதுபற்றி அக்கறை கிடையாது.

தமிழினத் தன்னுரிமைப் பிரச்சினையின் மீது முரணற்ற, அறிவியல் பூர்வமான, நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் உறுதியான, தெளிவான நிலைப்பாடும், நடைமுறையும் கொண்டிருப்பவை மார்க்சிய - லெனினியக் குழுக்கள். அதைத் தமது தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு அங்கமாகக் கொண்டு தமிழினத் தன்னுரிமைக்குச் சமரசமின்றிப் போராடுகின்றன. அதேசமயம், தமது தலைமையில் இல்லாதபோதும், நேர்மையாகவும், நியாயமாகவும், தன்னுரிமைக்குப் போராடும் சக்திகளை உறுதியோடு ஆதரித்து வருகின்றன. இதன் பொருட்டு அடக்குமுறைகளைக் கண்டஞ்சி தன்னுரிமை உட்பட எந்தக் கோரிக்கைகளையும் கைவிடுவதில்லை. ஆகவே மார்க்சிய - லெனினியப் புரட்சிக் குழுக்களைத் தவிர தமிழினம் வேறு யாரை நம்புவது?



படிப்பகம்

www.padippakam.com

# டிசம்பர்-6 கறுப்புநாள் இயக்கம் ஆர்.எஸ்.எஸ். பங்காளியின் அடக்குமுறை

## ஜெயா ஆட்சியில் அரசு எந்திரம் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு விசுவாசமாகத் தொடுக்கும் தாக்குதல் அதிகரித்து வருகிறது.

பழமையான வரலாற்றுச் சின்னம் - பாபர் மசூதி, ஆர்.எஸ்.எஸ். இந்துமதவெறி காலிகளால் இடிக்கப்பட்ட நாள் - டிசம்பர் 6. இந்துவெறி பாசிஸ்டுகளுக்கு எதிரான பல அமைப்புகள், கட்சிகள் இந்தியாவெங்கும் கறுப்பு நாளாக அறிவித்து கண்டனம் தெரிவித்தன. இந்து வெறியர்களின் விசுவாசியான காங்கிரசு கும்பல் முக்கியமாக வட மாநிலங்களில் இந்துமத ஆலயங்கள், நிறுவனங்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்தும் முஸ்லீம்கள் பலரை முன்கூட்டியே கைது செய்தும் தனது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன - பாசிச பங்காளியான ஜெயா கும்பலோ ஜனநாயக மற்றும் புரட்சிகர அமைப்புகள் எடுத்த ''கறுப்பு நாள்'' இயக்கத்தை அடக்கி ஒடுக்கியது. பிரச்சார உரிமை பறிப்பு, கைது, வழக்கு, சிறை, தாக்குதல், தேடுதல் வேட்டை, மிரட்டல் என பல வகையான அடக்குமுறைகளை மீறி எடுக்கப்பட்ட இவ்வியக்கம் பரவலாக மக்களிடையே வரவேற்பை பெற்றது.

இந்துவெறியர்களை பகிரங்க ஆதரித்துப் பேசியது, அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது, சுதந்திரமாக செயல்பட அனுமதித்தது, சலுகை கொடுத்தது, எல்லாவற்றிற்கும் மேலாக மசூதியை இடிக்கவே கட்சிக்காரர்களை அனுப்பியது முதலியவை ஜெயாவின் இந்துவெறி விசுவாசத்திற்கு உதாரணங்கள் என்றாலும் காவிரி நீர்ப் பிரச்சினை, இட ஒதுக்கீடு போன்ற விவகாரங்களில் ''அதிரடி நடவடிக்கைகள்'' மூலம் தனது கோர முகத்தை மறைத்துக் கொள்கிறார். போதாததற்கு எதிர்கட்சிகளில் கோஷ்டிப்பூசலை கைக்கூலிகள் மூலம் உருவாக்கி வெற்றியும் பெற்றுள்ளார். எதிர்க்கட்சிகளும் காவிரிநீர், இட ஒதுக்கீடு போன்ற குறிப்பிட்ட பிரச்சினையில் மட்டும் ஆதரவு என 'ஜெ' எதிர்ப்பை நீர்த்துப்போக வைக்கின்றன. இவற்றை சாதமாக்கிக் கொண்டு ஜெயா ஆட்சியில் ஊழல்களும் விலையேற்றமும் போலீசின் கொலை-கற்பழிப்புகளும், ரெளடிகளின் தாக்குதல்களும் பெருகி வருவதைப் போன்றே அரசு எந்திரம் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு விசுவாசமாக தொடுக்கும் தாக்குதலும் அதிகரித்து வருகிறது. காயல்பட்டினம். கோவை - கோட்டைமேடு பகுதி முஸ்லீம்களின் மீதான தாக்குதல்களும் ''கறுப்பு நாள்'' அடக்குமுறையும் இதையே உறுதிப்படுத்துகின்றன.

**திருச்சி**யில் மக்கள் கலை இலக்கிய கழகமும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியும் இணைந்து கறுப்புநாள் இயக்கத்தை மேற்கொண்டன. பிரசுரங்கள், சுவரெழுத்து, சுவரொட்டி என நகரில் பரவலாக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டு பீதியுற்ற பார்ப்பனக் கும்பலும் போலீசு கும்பலும் கூட்டு சேர்ந்து அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. 3.12.93 அன்று எடத்தெரு, 4-ந்தேதி காட்டூர், 6-ந்தேதி புத்தூர் ஆகிய இடங்களில் பொதுக்கூட்டமும் 6-ந்தேதி பிரபாத் திரையரங்கு அருகிலிருந்து தெப்பக்குளம் வரை ஊர்வலம் மற்றும் ஆர்ப்பாட்டம் எனவும் திட்டமிட்டு பிரச்சாரம் செய்து முறையாக அனுமதியும் கோரப்பட்டது. கடைசி நேரத்தில் போலீசு அனுமதி மறுத்ததோடு, பு.மா.இ.மு. அலுவலகத்திலிருந்த தோழர்கள் சூரியமதி, சங்கர், பாபு, வாசு, மதியழகன், ரமேஷ் ஆகியோரை 2.12.93 அன்று சட்டவிரோதமாக கைது செய்தது. மறுநாள் ரயில்வே ஓர்க்கர்ஸ் யூனியன் (RWU) பொதுச் செயலாளர் தோழர் முருகானந்தத்தையும் அவரது வீட்டில் கைது செய்தது. ம.க.இ.க. தோழர் கபிலன் கடைக்கு வந்து அவரில்லாததால் பணிபுரியும் ஊழியர்களை கைது செய்ய முயன்று, எதிர்ப்பு தெரிவிக்கவே போலீசார் பின்வாங்கினார்கள்.

மேலும் ம.க.இ.க. தோழர்கள் யாரும் கிடைக்காததால் இரவு பகலாக வலைவீசி தேடி அலுத்துபோனபின் அப்பாவிகளைக் கைது செய்யத் தொடங்கினர். ஒரு போலீசு நிலையத்திற்கு தலா 15 பேர் என இலக்கு வைத்து அப்பாவிகளை ம.க.இ.க. பெயரில் கைது செய்தனர். பலரிடம், இருந்த பணத்தையும் பிடுங்கிக் கொண்டனர். அழுகிற குழந்தைக்குப் பால் வாங்க வந்த போது வாமடம் பகுதியில் ஒருவர் கைது செய்து இழுத்துச் செல்லப்பட்டார். கேரளாவில் ஒரு காண்டிராக்டரிடம் வேலை செய்து, கொடுமை தாங்காமல் தங்களது சொந்த ஊரான ஜெயங்கொண்டம் திரும்பும் வழியில் - சமயபுரத்தில் - 3 பேர் கைது செய்யப்பட்டனர். ராமகிருஷ்ணா திரையரங்கு அருகே தினமும் வேலைக்காக காத்துநிற்கும் சித்தாள், கொத்தனார்களும் கைது செய்யப்பட்டனர். தஞ்சையிலிருந்து ஈரோட்டுக்கு வேலைக்குச் சென்ற ஒருவர் பேருந்து நிலையத்தில் கைது செய்யப்பட்டதோடு அவரிடமிருந்த பணத்தையும் போலீசு பிடுங்கிக் கொண்டது. காந்தி மார்க்கெட்டில் ஒரு காய்கறி வியாபாரியை கைது செய்து, அவரிடமிருந்த பணம் ரூ. 800/ஐ அபகரிக்க முயன்றனர். சினிமாவிற்குச் சென்றவர்கள், ஆட்டோ டிரைவர்கள், பிராந்தி கடையில் வேலை செய்தவர்கள், சிறு கேடிகள், சாராய வியாபாரிகள் என மொத்தம் 135 பேரை கைது செய்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எனும் பிரிவில் பதிவு செய்து சிறையிலடைத்தனர். ரயில் மறியல் செய்த சிவக்குமார் உட்பட முற்போக்கு மாணவர் சங்கத்தைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டு தனியாக வழக்கு போட்டு சிறையிலடைத்தனர். இதுதவிர நாகூரிலிருந்து 6 பேரும் நாகப்பட்டிணத்திலிருந்து 9 பேரும் சிறை வைக்கப்பட்டிருந்தனர். கைதை கண்டித்து ம.க.இ.க.வினர் திருச்சி நகரில் பரவலாக சுவரொட்டி ஒட்டினர்.

திருச்சி மத்திய சிறையில் தோழர் முருகானந்தம் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டது. டிசம்பர் 6-க்குப் பிறகு கைதானவர்களை விடுதலை செய்யக் கோரியும், 7-ம் பிளாக்கிலிருந்து மாற்றப்பட்ட 3 பேரை திரும்ப அழைப்பது, கழிப்பறை வசதி, மழையின் போது ஒழுகியதால் வேறு பாதுகாப்பான இடம், சுத்தமான உணவு, மருத்துவ வசதி, கைதிகளை மரியாதையாக நடத்துதல் உள்ளிட்ட 12 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து சுமார் 200 பேர் சிறையில் உண்ணாவிரதம் இருந்தனர். இதை தமிழக அரசுக்கு தெரிவிக்காமல் சிறைத்துறை இருட்டடிப்பு செய்தபோது, தோழர்கள் கடுமையாக எதிர்த்ததால் பிறகு அரசுக்குத் தெரிவித்தனர். மூன்று நாட்கள் உண்ணாவிரதம் தொடர்ந்ததால் சிறை நிர்வாகம் பணிந்தது; சில கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

வெளியில் தடைசெய்யப்பட்ட கறுப்புநாள் ஊர்வலத்தை சிறையில்



படிப்பகம்

www.padippakam.com

நடத்துவதற்கு திட்டமிட்டபோது மூன்று தோழர்களை தனித்தனி அறைக்கு மாற்றி வெளியில் விடாமல் அடைத்து வைத்தது, சிறை நிர்வாகம். தோழர்கள் அங்கும் உண்ணாவிரதப் போராட்டத்தை உறுதியோடு தொடர்ந்தனர். சிறையில் நடந்த கூட்டத்தில் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் சதித்திட்டத்தையும் அதை வீழ்த்த வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி முருகானந்தம் உரையாற்றினார். சிறீரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம், அதன் அவசியம் பற்றி புதுக்கோட்டையைச் சேர்ந்த பா.ம.க. பிரமுகரும், தி.க. (ரா) அனுதாபி ஒருவரும் சிறப்பாகப் பேசினர். போலீசின் அடக்குமுறை, டங்கல் திட்ட அபாயம் பற்றி மு.மா.ச. தோழர் ரவி பேசினார்.


பொதுவாக ஓட்டுக்கட்சி, பிழைப்புவாத தலைவர்களையே பார்த்து வந்தவர்களுக்கு, ம.க.இ.க. தோழர்களின் அணுகுமுறையும் போராட்ட உறுதியும் அரசியல் கருத்துக்களும் நல்ல மதிப்பை உருவாக்கியது. ம.க.இ.க.வின் வழக்கறிஞர்கள் பெரிதும் முயற்சி எடுத்து அனைவரையும் விடுவித்தனர். தோழர்கள் பிணையில் விடுதலையானபோது சிறை உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டனர். பகுதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோதும், இவ்வியக்கத்திற்கு பொது மக்கள் தாராளமாக நிதியளித்து தமது ஆதரவைக் காட்டினர்.

**மதுரை**யில் ம.க.இ.க., பு.மா.இ.மு. சார்பாக பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அனுமதி கோரப்பட்டது. தோழர்களை இழுத்தடித்த போலீசு கடைசி நேரத்தில் 5-ம் தேதி அனுமதி மறுத்தது. எனினும் சுவரொட்டி, பிரசுரம், சுவரெழுத்து வாயிலாக பிரச்சாரம் பரவலாக மேற்கொண்டனர். பொதுக்கூட்ட அனுமதி மறுப்பைக் கண்டித்தும் சுவரொட்டி ஒட்டப்பட்டு இருந்தது.

இதுதவிர பல்வேறு அமைப்பினரும் ''கறுப்புநாள்'' இயக்கத்தை மேற்கொண்டதால் ''சுவரொட்டி மழை'' பெய்ததுபோல் மதுரை நகரெங்கும் இந்துமத வெறியர்களை எச்சரித்த சுவரொட்டிகள் காணப்பட்டன. முற்போக்கு இளைஞர் அணி மற்றும் மாணவர் அணியினர் 3 பேர் கூடல் நகரில் ரயில் மறியல் செய்து கைதாகினர். பா.ம.க.வினர், சமூகவிரோதி அத்வானியின் கொடும்பாவியை எரித்து 60பேர் கைதாகி விடுவிக்கப்பட்டனர். எஸ்.ஐ.எம். என்ற இஸ்லாமிய மாணவர் அமைப்பு, முஸ்லீம்கள் குடியிருப்பு பகுதிகளில் கறுப்பு கொடிகளைப் பறக்கவிட்டு கண்டனம் தெரிவித்தது. தனிநபர்கள் பலரும் தாமாக கறுப்புக் கொடி கட்டியும் எதிர்ப்பு தெரிவித்தனர். தமிழக இளைஞர் இயக்கம், தலித் சிறுத்தைகள், சதாம் உசேன் நற்பணி மன்றம் முதலிய அமைப்பினரும் சுவரொட்டி ஒட்டியிருந்தனர். 5-ம் தேதி சுவரொட்டி ஒட்டியவர்களில் பலர் கைது செய்யப்பட்டது நடந்தது.

**உசிலம்பட்டி**யில் சுவரொட்டி ஒட்டியபோது விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர்கள் ராஜன், சேகர் ஆகியோர் போலீசால் கைது செய்யப்பட்டனர். இதேப்போல பலரும் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றத்தில் நீதிபதி ஒருவர் தாமாக முன்முயற்சியெடுத்து அனைவரையும் பிணையில் வெளியே எடுக்க உதவினார்.

**கரூர்** - பசுபதிபாளையத்தில் டிசம்பர் 1-ந் தேதியன்று பொதுக்கூட்டம் நடத்துவதற்கு 15 நாட்களுக்கு முன்பே புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் போலீசிடம் எழுதிக் கொடுத்தனர். பிறகு நவம்பர் 29-ந் தேதி கரூரில் ஆட்டோ பிரச்சாரம் செய்



வதற்காக டி.எஸ்.பி.யிடம் அனுமதி வாங்கச் சென்ற போது பொதுக்கூட்டம் பற்றி பதிவு நோட்டில் பதிவு ஆகாததைக் கண்டனர். பகுதி போலீசு நிலையத்தில் பு.மா.இ.மு.வினர் காரணம் கேட்டனர். அதற்கு எஸ்.ஐ. கிருஷ்ணன் ''நீங்கள் கொடுத்த மனு தொலைந்துவிட்டது; வேறு எழுதி கொடுங்கள், ஆவண செய்கிறேன்'' என்று கூறினார். எழுதிக் கொடுத்து விட்டு மீண்டும் சென்று கேட்டபோது எஸ்.ஐ. அனுமதி மறுத்தார். போலீசை கண்டபடி திட்டுகிறீர்கள்; அதனால் அனுமதியில்லை என்றார். அதை எழுதி கொடுக்கும்படி தோழர் கேட்டதற்கு, ''தடியடி, கண்ணீர் புகை, துப்பாக்கிச்சூடு கூடத்தான் நடத்துகிறோம்; காரணம் எழுதிக் கொடுத்து விட்டா செய்கிறோம்'' என்று திமிராகக் கேட்டு மறுத்தார், எஸ்.ஐ.

**மானாமதுரை - திருப்புவனத்**தில் பு.மா.இ.மு.வினர் கறுப்பு நாள் இயக்கத்திற்காக சுவரொட்டி சுவரெழுத்துப் பிரச்சாரம் போலீசின் மிரட்டலை மீறி செய்தனர். பஸ் கட்டண உயர்வை எதிர்த்து, புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து, டங்கல் திட்டத்தை எதிர்த்து, ஊரில் வைகைப் பாலம் உடைந்து பாதிக்கப்பட்டதை சரிசெய்யக் கோரியும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கக் கோரியும், இதற்காகப் பஸ் மறியல் செய்த பகுதிமக்களை ஆதரித்தும் என தொடர்ந்து நகரில் பு.மா.இ.மு. சுவரொட்டி ஒட்டியது. நகரெங்கும் பு.மா.இ.மு. சுவரொட்டியே கண்ணில் தென்பட்டதால் 'கியூ' - உளவுப் பிரிவு போலீசு தோழர்களை தேடுவதிலும் மிரட்டுவதிலும் மும்முரமாக உள்ளது. இதைமீறி கறுப்புநாள் இயக்கம் எடுக்கப்பட்டது.

**கோவை**யில் ம.க.இ.க., கரும்புக் கடை மைதானம், சீரணி கலை அரங்கம் ஆகிய இடங்களில் நடத்த திட்டமிட்டிருந்த ''கறுப்பு நாள்'' - பொதுக்கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதோடு தோழர் நசீம் இக்மத்

> பல்வேறு அடக்குமுறைகளை மீறி எடுக்கப்பட்ட இவ்வியக்கம், பெருவாரியான மக்கள் ஆதரவுடன் இந்துமத வெறியர்களுக்கு பலத்த அடிகொடுத்தது.

சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டார்.

**தர்மபுரி**யில் காட்டுமிராண்டி போலீசின் அடக்குமுறைக்கு மு.மா.ச., மு.இ.அ. அமைப்பினர் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் சிறந்த உதாரணம். தர்மபுரி பி-1 போலீசு, பொதுக்கூட்டத்திற்காக அனுமதி கேட்டு வந்த மேற்கண்ட அமைப்புத் தோழர் சுரேஷ், ஜோசப் ஆகியோரை அடாவடித்தனமாக கைது செய்தது. தர்மபுரியில் டி.வி. ஒளி பிரதிபலிப்பு நிலையத்தை குண்டு வைத்துத் தகர்க்க முயன்றதாகவும், தேசவிரோதம், அரசை கவிழ்க்கச் சதி என பல பொய் வழக்குகள் போட்டு சிறையிலடைத்துள்ளனர். ஜாமீனும் அடாவடித்தனமாக மறுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கொடிய அடக்குமுறைகளை மீறி தமிழகத்தில் பல அமைப்பினர் எடுத்த இவ்வியக்கத்திற்கு பெருவாரியான மக்கள் ஆதரவு தந்தது இந்துமத வெறியர்களுக்கு விழுந்த பலத்த அடியாகும். ●



படிப்பகம்

www.padippakam.com



## காகித ஒப்பந்தத்தால் கனவு நனவாகாது

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்துக்கும் இடையே கடந்த செப். 13-ம் நாளன்று ஏற்பட்ட அமைதி ஒப்பந்தம் இன்று கழிப்பறைக் காகிதமாகிவிட்டது. ஒப்பந்தப்படி, டிசம்பர் 13-ம் தேதிக்குள் காசாமுனை, ஜெரிகோ



தலைவர்கள் துரோகம் இழைத்தாலும் போராட்டம் ஓயாது; இஸ்ரேலியப் படையினரைத் தாக்கும் பாலஸ்தீனிய சிறுவர்கள்

பிராந்தியத்திலிருந்து இஸ்ரேலியர்களும், இஸ்ரேலிய ராணுவமும் வெளியேறவில்லை. இப் பிராந்தியங்களில் பாலஸ்தீனியர்கள் சுயாட்சி நிர்வாகம் செய்வதும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. மாறாக, இஸ்ரேலிய இனவெறி அரசு ஒப்பந்தத்தை கிடப்பில் போட்டுவிட்டு பாலஸ்தீனியர்களை நரவேட்டையாடுவதும், பி.எல்.ஓ. இயக்கத் தலைவர்கள் மீண்டும் சமரசப் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்வதுமாக தீராத நெருக்கடி இன்னமும் தொடர்கிறது.

குறிப்பாக, ஜெரிகோ பிராந்தியத்திலிருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறாததை எதிர்த்து பாலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியபோது இஸ்ரேலிய ராணுவம் கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்துகிறது. கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 29 பாலஸ்தீனியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதுதவிர, ஒப்பந்தத்தை எதிர்க்கும் ஹமாஸ் பிரிவின் படைத்தளபதியான இமாத் அகில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஒப்பந்தத்துக்கு ஆதரவாக நின்றவரும், யாசிர் அராபத்தின் வலதுகரமாகத் திகழ்ந்தவருமான அகமது அபு·ரீஷ் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இக்கொலைகளைச் செய்த இஸ்ரேலிய இனவெறியர்கள், வன்முறையில் இறங்கியதாகக் கூறி அப்பாவி பாலஸ்தீனியர்களை கைது செய்வதும், சிறையிலடைத்து சித்திரவதை செய்வதும் தொடர்கிறது. மேலும் ஒப்பந்தத்துக்கு முரணாக ஜெரிகோவில் 30 சதுர கி.மீ. அளவுக்கே சுயாட்சி உரிமை அளிக்கப்படும் என்று இஸ்ரேல் கொக்கரிக்கிறது. இன்டிபதா எழுச்சியின் போது, கைதாகி சிறையில் வாடும் 12,000 பாலஸ்தீனியர்களை விடுதலை செய்ய மறுத்து, புதிய நிபந்தனைகளை விதிக்கிறது.

எகிப்திலுள்ள செங்கடல் பிராந்திய உல்லாச நகரமான தபாவில் கடற்கரையில் கையிலே மதுக் கோப்பைகளுடன் பி.எல்.ஓ. தலைவர்கள் இஸ்ரேலிய அரசு அதிகாரிகளுடன் ரகசிய பேச்சுவார்த்தை நடத்தி முன்னேற்றம் கண்டுள்ளதாக ஒருபுறம் கூறுகிறார்கள். மறுபுறம், இஸ்ரேல் முதுகில் குத்தி விட்டதாகப் புலம்புகிறார்கள். பி.எல்.ஓ. தலைவர்களின் துரோகமும், அமைதி என்ற பெயரிலான மாய்மாலங்களும் பாலஸ்தீனியர்களிடம் மேலும் அம்பலப்பட்டுப் போயுள்ளது. அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மூன்று முக்கிய தலைவர்களில் ஒருவரான முகம்மது அப்பாஸ், யாசிர் அராபத் குழுவின் சமரசப் போக்கை எதிர்த்து பி.எல்.ஓ.வின் செயற்குழு கூட்டத்தையே அண்மையில் புறக்கணித்துள்ளார். மேலைக்கரை பிராந்தியத்திலுள்ள பிர்ஜியத் பல்கலைக் கழக மாணவர் சங்கத் தேர்தலில் அராபத் ஆதரவுக்குழு படுதோல்வி அடைந்துள்ளது.

பி.எல்.ஓ. என்பது பாலஸ்தீனிய விடுதலைக்காகப் போராடிவரும் பல்வேறுபட்ட போராளிக் குழுக்களின் கூட்டமைப்புதான். அதிலே அராபத்தின் ''அல்பத்தா'' மற்றும் சில குழுக்களின் துரோகத்துக்கு பாலஸ்தீனிய மக்கள் ஒருபோதும் பலியாக மாட்டார்கள். சுதந்திரமான தாய்நாடு கிட்டும் வரை அவர்களின் போராட்டம் தொடரவே செய்யும் என்பதையே நிலைமைகள் உணர்த்துகின்றன.

## டெல்லி-ரயில் குண்டு வெடிப்புகள் இந்துவெறி பாசிசத்தின் எதிர்விளைவு

பாபர் மசூதியை இந்துவெறி பாசிஸ்டுகள் இடித்துத் தரைமட்டமாக்கிய ஓராண்டு நிறைவு நாளான டிசம்பர் 6-ம் நாளன்று 5 விரைவு ரயில்களில் குண்டு வெடித்துள்ளன. பெரிய கட்டிடங்கள், விமான நிலையம், பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். அலுவலகங்களில் இது போன்ற தாக்குதல்கள் நடக்கலாம் எனக் கருதிய உளவுத்துறை போலீசார் முன்கூட்டியே பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக டெல்லியைச் சுற்றியும், பம்பாயிலும் ஆந்திராவிலும் விரைவு ரயில்களில் குண்டு வெடிப்புகள் நடந்துள்ளன. ஹெளரா - டெல்லி விரைவு ரயிலில் கடைசி நேரத்தில் குண்டு இருப்பது கண்டறியப்பட்டு உடனடியாக அகற்றப்பட்டுள்ளது.

இக்குண்டு வெடிப்பில் சிக்கி ஒருவர் மரணமடைந்துள்ளார். ஏறத்தாழ 20 பேர் படுகாயமடைந்துள்ளனர். வீரியம் குறைந்த நாட்டு வெடிகுண்டுகளாக இருந்ததால் சேதம் பெரிய அளவில் இல்லை என்றாலும், பம்பாய் குண்டு வெடிப்பு பயங்கரத்தைப் போன்றதொரு நிலைமை ஏற்படுமோ என்கிற அச்சமும் பீதியும் நாட்டையும் மக்களையும் அச்சுறுத்தியது.

பாபர் மசூதியை இடித்து, நாடெங்கும் சிறுபான்மை முஸ்லிம்களை நரவேட்டையாடிய இந்துவெறி பாசிசத்தின் எதிர் விளைவாக சில முஸ்லிம் தீவிரவாதிகளாலேயே இக் குண்டுவெடிப்புகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் பாகிஸ்தான் உளவுபடையான ஐ.எஸ்.ஐ. மீது பழிபோட்டு ஆதாயம் தேடுவதில் ஆட்சியாளர்களும் இந்துவெறியர்களும் குறியாக உள்ளனர். நாட்டைத் துண்டாட பயங்கரவாத சதிகளில் ஈடுபட்டு வருவதாக தேசிய வெறியையும் இந்து வெறியையும் மேலும் கிளறிவிடுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



இந்து வெறி பாசிசத்துக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையாக இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை சிறுபான்மை முஸ்லிம்களும் புரட்சிகர சக்திகளும் ஆதரிக்க முடியாது. இந்துவெறி பாசிசத்தை இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகளால் வீழ்த்திடவும் முடியாது. புரட்சிகர அமைப்புகளின் தலைமையின் கீழ் மதச்சார்பற்ற - ஜனநாயக இயக்கங்களின் சக்திவாய்ந்த மக்கள் திரள் போராட்டங்களின் மூலமே இந்துவெறி ஓநாய்களை முறியடிக்க முடியும்.

## டங்கல் அறிக்கையை எதிர்த்து விவசாயிகளின் போர்க்குணம்



''காட்'' (GATT) எனப்படும் சர்வதேச வணிக மற்றும் காப்பு வரிக்கான பொது ஒப்பந்தத்தில் டிசம்பர் 15-ம் தேதிக்குள் கையெழுத்திடாத நாடுகள் சர்வதேச வாணிபத்தில் புறக்கணிக்கப்படும் என்று ஏகாதிபத்தியங்கள் மிரட்டியதைத் தொடர்ந்து இந்தியா உள்ளிட்டு 117 நாடுகள் இதில் கையெழுத்திட்டுள்ளன. இதன் மூலம் ஏழைநாடுகளின் பெயரளவிலான சுதந்திரத்தையும் - சுயாதிபத்தியத்தையும் பறித்து, மேல்நிலை வல்லரசுகள் நேரடியான மறுகாலனி ஆதிக்கம் செலுத்தக் கூடிய ஒரு புதிய உலக ஒழுங்கு முறையைக் கொண்டு வந்து விட்டன.

இதன் விளைவாக, ஏழை நாடுகளுக்கு தேவை இருக்கிறதோ, இல்லையோ உணவு தானியங்களை ஏகாதிபத்தியங்களிடமிருந்து கட்டாயமாக இறக்குமதி செய்ய வேண்டும். விவசாயப் பொருட்களுக்கு விலைநிர்ணயம் செய்யும் அதிகாரத்தை அரசாங்கம் இழந்து, ஏகபோக நிறுவனங்களால் அவை தீர்மானிக்கப்படும். தாவரங்கள், விலங்குகள், பறவைகள் என அனைத்து உயிரினங்களும் அறிவுச் சொத்துரிமை - வடிவுரிமையின் கீழ் பதிவு செய்யப்பட்டு, ஏகாதிபத்திய வேளாண் - தொழில் கழகங்கள் நிர்ணயிக்கும் அதி உயர்ந்த விலையில், அவற்றிடமிருந்துதான் ஒவ்வொரு முறையும் வாங்கிட வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் ஏழை நாடுகளின் விவசாயமும் விவசாயிகளும் இதனால் நாசமாக்கப்படுவர்.

''காட்'' அமைப்பின் முன்னாள் பொது இயக்குநரான சர் ஆர்தர் டங்கல் தயாரித்துள்ள இந்த ஒப்பந்தத்தால் ஏற்படும் பாதிப்புகளை உணர்ந்தள்ள ஏழை நாடுகளின் மக்கள் இதை எதிர்த்து போர்க்குணத்தோடு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

- டங்கல் அறிக்கையின்படி, விதை, உரம், பூச்சி மருந்துகளுக்கும், விவசாய உள்ளீடுகளுக்கும் அரசு வழங்கும் மானியம் நிறுத்தப்படும் என்பதால், ஐரோப்பிய, ஜப்பானிய விவசாயிகள் 5000 பேருக்குமேல் திரண்டு ஜெனிவாவிலுள்ள ''காட்'' தலைமை நிலையத்திற்கு முன்பாக கடந்த டிசம்பர் 4-ம் தேதியன்று மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பீதியடைந்த போலீசார் விவசாயிகள்மீது தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டு வீசியும் அவர்களை விரட்டினர்.

- அமெரிக்காவின் நவகாலனி நாடுகளுள் ஒன்றான தென்கொரியாவில் கடந்த டிசம்பர் 12-ம் நாளன்று 10,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் டங்கல் அறிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அமெரிக்க கொடிகளையும் டங்கல் கொடும்பாவியையும் எரித்த விவசாயிகள், அமெரிக்கத் தூதரகத்தையும், அரசு கட்டிடங்களையும் தாக்கினர். ''காட்'' ஒப்பந்தப்படி அரிசி இறக்குமதியானால், ஒரு கோடி விவசாயிகளின் வாழ்வே நாசமாகும் என்று மாணவர்களும் இப்போராட்டத்தில் குதித்துள்ளனர். கொரிய மக்களின் போர்க்கோலத்தைக் கண்டு அஞ்சிய அந்நாட்டின் பிரதமர் தனது பதவியை ராஜினாமா செய்து விட்டார்.

- தென் அமெரிக்க நாடுகளுள் ஒன்றான பொலிவியாவில், ''காட்'' ஒப்பந்தத்தை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் டிசம்பர் 14-ம் நாளன்று ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இந்த ஒப்பந்தத்தின் விளைவாக, பொலிவியாவில் 'கோகோ' பயிர் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதால், கோகோ விவசாயிகள் போர்க்குணத்தோடு ஆர்ப்பாட்டங்களை நடத்தி அமெரிக்கக் கொடிகளை எரித்துள்ளனர். இப்போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், பொலிவியாவின் ராணுவத்தை ஏவி ஆட்சியாளர்கள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.



டங்கல் ஒப்பந்
எ
தென்
விவசாயி
போர்க்கே
ப
ஒப்பந்த
அழியப்பே
ப
வாஞ்சை
கையில் பிடி
கதறும் பொ
வி

- ''காட்'' ஒப்பந்தத்தை ஏற்றால், தமது நாட்டின்

படிப்பகம்

www.padippakam.com



விவசாயமே பாதிக்கப்படும் என்று, ஏகாதிபத்திய நாடான ஜப்பானிலேயே விவசாயிகள் ஆயிரக்கணக்கில் திரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். குறிப்பாக, ''அரிசி இறக்குமதியை ரத்து செய்! வடிவுரிமைச் சட்டத்தை ரத்து செய்!'' என்று தமது ஆடு, மாடுகளுடன் வந்து ஆர்ப்பாட்டம் செய்த விவசாயிகள் அமெரிக்கக் கொடிகளை எரித்தனர். பெருகிவரும் விவசாயப் போராட்டங்களின் விளைவாக, ''காட்'' ஒப்பந்தத்தில் அரிசி இறக்குமதிக்கு மட்டும் ஜப்பானுக்கு தற்காலிகமாக விலக்கு அளிக்குமாறு ஜப்பானிய கூட்டணி அரசு; பேரம் பேசிக் கொண்டிருக்கிறது.

● இவை தவிர தைவான், பிலிப்பைன்ஸ், பிரேசில் முதலான நாடுகளிலும் விவசாயிகளது போராட்டங்கள் பெருகி வருகின்றன. இந்தியாவில், போலிக் கம்யூனிஸ்டுகள் - தேசிய முன்னணிக் கூட்டணிக் கட்சிகள் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து கூச்சலிட்டதோடு, சம்பிரதாயமாக டங்கல் அறிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ததோடு அடங்கி விட்டன. இதே காரணங்களுக்காக பாரதீய ஜனதா கட்சியினர் காங்கிரசு அரசுமீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தால் நாங்கள் ஆதரிக்க மாட்டோம் என்று ராவ் அரசுக்கு முட்டுக் கொடுக்க 'மார்க்சிஸ்டுகள்' கிளம்பிவிட்டார்கள். ''காட்'' ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு நாட்டை அடகு வைத்துவிட்ட ''ராவ்'' அரசோ, இதனால் எந்தப் பாதிப்பும் வராது என்று மாய்மாலம் செய்கிறது. இந்திய விவசாயிகள் இந்த உண்மைகளைப் புரிந்துகொண்டு, உரிமைகளைக் காப்பாற்றப் போராட வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

## ரஷ்ய தேர்தல் முடிவுகள் அச்சுறுத்தும் புதிய அபாயம்

மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறான வகையில் ரஷ்யாவில் அண்மை



...வாழ்த்துக் கூறும் ...ணுவச் சீருடை அணிந்த ...தரவாளருடன் ...ஷ்ய வலதுசாரி ...சிசக் கட்சியின் தலைவர் ...ரினோவ்ஸ்கி; ...சுறுத்தும் புதிய அபாயம்

யில் நடந்த தேர்தலின் முடிவுகள் அமைந்துவிட்டன. ரஷிய அதிபர் யெல்ட்சினின் சர்வாதிகாரப் பிடியின்கீழ் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில், அவரது ஆதரவு பெற்ற கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. மற்ற கட்சிகளை விட அதிபரின் ஆதரவு பெற்ற ''ரஷிய விருப்பக் கட்சி'' மயிரிழையில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. அதேசமயம் வலதுசாரி பாசிசவாதிகளின் கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சி, அச்சுறுத்தும் அபாயமாக இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. வீழ்த்தப்பட்ட பிரஷ்னேவின் வாரிசுகளான போலிக் கம்யூனிஸ்டுகள் மூன்றாவது இடத்தையே பெற்றுள்ளனர்.

யெல்ட்சினின் சர்வாதிகார புதிய அரசியல் நிர்ணய சட்டத்தை எதிர்த்து பல்வேறு கட்சிகளும் குழுக்களும் மக்களும் இத்தேர்தலைப் புறக்கணித்துள்ளனர். நாடு தழுவிய அளவில் சராசரியாக 52% மக்களே வாக்களித்துள்ளனர். சில இடங்களில் தேர்தல் புறக்கணிப்பின் காரணமாக வெறும் 5% மக்களே வாக்களித்துள்ளனர்.

தமது சர்வாதிகார சட்டத்துக்கு இத்தேர்தல் மூலம் ஒப்புதல் பெற்று தற்காலிகமாக யெல்ட்சின் கும்பல் நெருக்கடியிலிருந்து தப்பித்துள்ள போதிலும், அதன் கொள்கைக்கும் ஆட்சிக்கும் தொடர்ந்து அபாயம் நீடிக்கவே செய்கிறது. ஏனெனில் 25% வாக்குகளைப் பெற்று வலுவான கட்சியாக உருவாகியுள்ள லிபரல் ஜனநாயகக் கட்சி கடைந்தெடுத்த பாசிசக் கட்சியாகும். ஜிரினோவ்ஸ்கி என்பவரைத் தலைவராகக் கொண்ட இக்கட்சியானது, அகண்ட பாரத நோக்கம் கொண்ட இந்து வெறி பாசிஸ்டுகளின் ரஷ்யப் பதிப்பாகும். பிரிந்து சென்ற ரஷிய தேசிய இனக் குடியரசுகளை வலுக்கட்டாயமாக சேர்த்து வல்லரசாக உருவாக வேண்டும்; ரஷ்யாவின் விவகாரங்களில் எந்த நாடு தலையிட்டாலும் அணு ஆயுதப் போரை ரஷியா நடத்த வேண்டும் என்று தேசிய வெறி - போர் வெறி கொண்ட இக்கட்சி ஜெர்மனியின் நவீன நாஜிக் குழுக்களுடன் நெருக்கமான தொடர்பு வைத்துள்ளது. யெல்ட்சின் கும்பலின் அரசியல் - பொருளாதாரக் கொள்கைகளின் தோல்வியைச் சாதகமாக்கிக் கொண்டு, கவர்ச்சிவாத சொல்லடுக்குகளின் பின்னே பாசிசக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்து கொண்டு அச்சுறுத்தும் புதிய சக்தியாக இக்கட்சி வேரூன்றி வருகிறது.

முதலாளித்துவ ஜனநாயகம்தான் உன்னதமானது என்று மார்தட்டிய ஏகாதிபத்தியவாதிகள் யெல்ட்சினின் சர்வாதிகார சதிராட்டத்தை வெட்கமின்றி நியாயப்படுத்தினார்கள். இப்போது அதையும் விஞ்சுவதாக பாசிச சக்திகள் பலம் பெற்று வருவதை எப்படி நியாயப்படுத்துவது என்று புரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள்.

## ''அம்பேத்கார் பெயரே கூடாது!'' — சாதிவெறியர்களின் கொட்டம்

மகாராஷ்டிராவில் உள்ள மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்காரின் பெயரைச் சூட்டுவதென அம் மாநில சட்டசபையில் 1978-லேயே ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், இன்றுவரை அம்பேத்காரின் பெயர் சூட்டப்படவில்லை. மரத்வாடா பிராந்தியத்தின் மேல் சாதி இந்து வெறியர்களின் மிரட்டல் நிர்பந்தங்களுக்குப் பணிந்து காங்கிரசுப் பெருச்சாளிகள் இன்னமும் இழுத்தடித்து வருகின்றனர்.

1978-ல் அம்பேத்கார் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டப்படுவதென சட்டசபைத் தீர்

www.padippakam.com



மானம் நிறைவேற்றப்பட்ட உடனேயே, மேல் சாதி இந்து வெறியர்கள் நடத்திய கொலைவெறித் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட தாழ்த்தப் பட்ட மக்கள் பலியாகினர்; 15,000-க்கும் மேலா னோர் வீடிழந்து நின்றனர். அதன் பிறகு கடந்த 15 ஆண்டுகளில் தாழ்த்தப்பட்டோரின் கட்சிகள், அமைப்புகள் 6000-க்கும் மேற்பட்ட ஊர்வலம் - ஆர்ப்பாட்டங்கள் செய்தும்கூட பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. அதேசமயம், தாழ்த்தப்பட் டோர் அமைப்புகள் போராட்டம் நடத்தும் ஒவ் வொரு சமயத்திலும் மேல்சாதி வெறியர்கள் தாக் குதலைக் கட்டவிழ்த்துவிட்டனர். 1993-ம் ஆண் டில் மட்டும் இதுவரை 1023 சம்பவங்களில் தாழ்த் தப்பட்டோர் மீது கொலைவெறித் தாக்குதல்கள் நடந்துள்ளன.

அம்பேத்காரின் நூற்றாண்டு நிறைவு நாளை யொட்டி, கடந்த ஆண்டிலிருந்தே தாழ்த்தப்பட் டோர், அம்பேத்காரின் பெயரைப் பல்கலைக்கழ கத்துக்குச் சூட்டக் கோரி சிறியதும் பெரியதுமான போராட்டங்களை நடத்திவருகின்றனர். தாழ்த்தப் பட்டோரின் நிர்பந்தம் காரணமாக, மகாராஷ்டிர காங்கிரசு கூட்டணி மந்திரி சபையில் கேபினட் மந்திரியாக உள்ள குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ராம்தாஸ் அவதால் பதவியை ராஜினாமா செய்யப் போவதாக எச்சரித்தார். அம்பேத்காரின் பெயரைச் சூட்டக்கோரி கடந்த மாதத்தில் கௌதம் எனும் தாழ்த்தப்பட்ட இளைஞரும், அண்மையில் சுஹா சினி எனும் மாணவியும் தீக்குளித்து மாண்டுபோ யுள்ளனர்.

தாழ்த்தப்பட்டோரின் போராட்டம் தீவிரம டையத் தொடங்கியதும் மராத்தா மேல்சாதி வெறி யர்களும், சிவசேனாவும் அம்பேத்கார் பெயரைச் சூட்டக்கூடாதென எதிர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கடந்த டிசம்பர் 18-ந் தேதி யன்று மரத்வாடாவின் 7 மாவட்டங்களில் சிவசே னாவும் சாதிவெறியர்களும் நடத்திய கடை யடைப்புப் போராட்டம் வன்முறையில் முடிந் துள்ளது. காங்கிரசு கட்சியில் ஒரு பிரிவினர் ஓட்டு வங்கியை இழந்துவிடாதிருக்க, மேல் சாதியின ருக்கு ஆதரவாக நிற்கின்றனர்.

நடந்து முடிந்த இடைத் தேர்தலில் உ.பி.யி லுள்ள தாழ்த்தப்பட்டோர் காங்கிரசுக்கு எதிராக வாக்களித்துள்ளதால் பீதியடைந்துள்ள காங்கிரசு, ஓட்டு வங்கியை இழந்துவிடாதிருக்க வேறுவழி யின்றி மரத்வாடா பல்கலைக்கழகத்துக்கு அம் பேத்கார் பெயரைச் சூட்டுவதென இப்போது தீர் மானித்துள்ளது. இதே காரணங் களுக்காக இந்து வெறி பாரதீய ஜனதா உள்ளிட்டு எதிர்க்கட்சிகளும் இம் முடிவை ஆதரித்துள்ளன. இதனால் ஆத்திரம டைந்துள்ள மேல்சாதி வெறியர்கள், கிராமப்புறங் களில் தாழ்த்தப்பட்டோரை நரவேட்டையாடுவ தற்கான அபாயம் இன்னமும் நீடிக்கவே செய்கி றது. அரசியல் சட்டத்தை வகுத்துத் தந்ததற்காக மேல் சாதியினர் அம்பேத்காரை ஏற்றுக் கொள்கி றார்களே தவிர, அவரது சாதிய எதிர்ப்பு சமூக சீர்திருத்தங்களை ஒருபோதும் அங்கீகரிக்க வில்லை என்பதையே இது நிரூபிக்கிறது.

## பி.ஜே.பி. தலைவர்கள் கைது: காங்கிரசின் மாய்மாலம்

வட மாநிலங்களில் பாரதீய ஜனதா அடைந்த தேர்தல் தோல்வியைச் சாதகமாக்கிக் கொண்டு, முடங்கிக் கிடந்த பாபர் மசூதி இடிப்பு வழக்கைத் தூசுதட்டி, மத்திய உளவுத் துறையின் சிறப்பு விசா ரணை நீதிமன்றத்தின் உத்திரவுப்படி பாரதீய ஜன தாவின் முன்னணித் தலைவர்களை லக்னோவில் டிசம்பர் 7-ந் தேதியன்று நரசிம்மராவ் அரசு கைது



செய்துள்ளது. சொந்தப் பிணையில் விடுதலையாக வாய்ப்பிருந்தும் கூட பாரதீய ஜனதா தலைவர்கள் அதை மறுத்துவிட்டதால், டிசம்பர் 20-ந் தேதி வரை அவர்கள் காவலில் வைக்கப்பட்டனர். சிறை சென்ற தியாகிகளாகக் காட்டி மக்களிடம் அனுதாபம் தேடுவது, பிரபலமடைவது என்னும் குறுகிய நோக்கங்கள் காரணமாகவே பாரதீய ஜனதா தலைவர்கள் பிணையில் வெளிவர மறுத் துள்ளனர். இதைப் புரிந்து கொண்ட காங்கிரசு அரசும் அவர்களை அரசு சுற்றுலா மாளிகையில் அனைத்து வசதிகளுடன் விருந்தினர்களைப் போல நடத்தி, பின்னர் விடுதலை செய்துள்ளது.

தமது தலைவர்களைக் கைது செய்ததைக் கண் டித்து நாடாளுமன்றத்தில் கூச்சல் போட்டு வெளிந டப்பு செய்த பாரதீய ஜனதா, பின்னர் நாடாளுமன் றக் கூட்டத்தையே புறக்கணித்தது. பாபர் மசூதி இடிப்பு வழக்கே மோசடியானது பொய்யானது என்று சாடிய பாரதீய ஜனதா, வட மாநிலங் களில் ஒரு நாள் கடையடைப்புக்கு அறைகூவல் விடுத் தது. ஆனால் இப்போராட்டம் மக்களிடம் எடுப டாமல் பிசுபிசுத்துப் போனதால், நாடாளுமன்றப் புறக்கணிப்பைக் கைவிட்டு மீண்டும் கூட்டங்க ளில் பங்கேற்க முடிவு செய்துள்ளது.

அரசியல் லாபம் கருதி பாரதீய ஜனதா தலை வர்களைக் கைது செய்து நாடகமாடும் காங்கிரசு, இதன் மூலம் இந்துவெறியர்களுக்கு எதிராக உறுதி யாகச் செயல்படுவதாகக் காட்டிக் கொள்ள முயற் சிக்கிறது. ஆனால், நாடாளுமன்றத்திலேயே உள் துறை அமைச்சர் சவாண், அயோத்தியில் இடிக்கப் பட்ட மசூதிக்குப் பதிலாக புதிய மசூதி கட்டித்தரு வதாக பிரதமர் ஒருபோதும் கூறவேயில்லை என்று இந்து வெறியர்களுக்கு ஆதரவாகவே பேசியுள் ளார். ஓராண்டு காலமாக, புதிய மசூதி கட்டித்தரு வதாக மாய் மாலம் செய்து வந்த காங்கிரசு பெருச் சாளிகள், இந்து வெறியர்களுக்கு ஆதரவாக அதை யும் கைகழுவிவிட முடிவு செய்துவிட்டனர். அரசி யல் ஆதாயம் கருதி பாரதீய ஜனதா தலைவர்கள் கைது செய்யப்பட்டனரே தவிர, காங்கிரசு துரோகி களின் இந்துவெறித்தன்மை ஒருபோதும் மாறிவி டவில்லை என்பதையே இச்சம்பவம் மீண்டும் உணர்த்துகிறது.

குற்ற உணர்
கிஞ்சித்தும் இ
மகிழ்ச்சியுட
லக்னோ கோ
வளாகத்தில்
இந்துவெறி
தலைவர்கள்

www.padippakam.com

# தொற்று நோய்க்கு அரசே கிருமி!

## மலேரியா, பிளேக், காசநோய் ஆகியவற்றை அரசு கட்டுப்படுத்தக்கூடவில்லை. புதிய பல தொற்றுநோய்களும் பரவிவருகின்றன.

மலேரியா நோய் கண்டு 1953-ல் பலியான இந்திய மக்கள் 7.5 லட்சம் பேர். இதற்குப் பின்னே சிறிதே கவனம் செலுத்தி மலேரியாவை ஒழிக்க முயன்ற அரசு, 65-ல் முற்றிலும் ஒழித்து விட்டதாக தம்பட்டம் அடித்தது. ஆனால் தற்போது உலக சுகாதார நிறுவனம் (WHO) வெளியிட்டுள்ள செய்தி அதிர்ச்சியளிக்கக் கூடியதாக உள்ளது. 80 லட்சம் பேர் நடப்பாண்டில் மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கிறது. இது உலகிலேயே முதலாவது இடத்திலிருக்கும் ஆப்பிரிக்காவிற்கு அடுத்த நிலை. பம்பாயில் மட்டும் கடந்த ஆண்டில் 11,800 பேரும், நடப்பாண்டில் 6000 பேரும் மலேரியாவில் இறந்துள்ளனர்.

இந்நோய் அனோபிலஸ் (Anopheles) எனும் பெண் கொசுக்கள் மூலமே பரவுகிறது. இக்கொசுவின் உடலிலும், மனித உடலிலும் இயல்பாக இருக்கும் மருந்து எதிர்ப்பு சக்தி, இந்நோய் விரைவாக பரவுவதற்கு வாய்ப்பாக உள்ளது; நமது உடலில் இருக்கும் நோய் எதிர்ப்பு சக்தியின்மையும் இதற்கு அடிப்படையாக உள்ளது. இப்பெண் கொசு மூலம் நமது ரத்தத்தில் புகுந்த மலேரியா நோய்க்கிருமி சிவப்பணுக்களை அழித்து பலமடங்கு பெருகி ஈரல் மற்றும் சிறுநீர்ப்பிரிப்புறுப்பை உடனடியாக தாக்குகின்றன. இக் கிருமி வளர்ந்து பெருமூளையைத் தாக்கும் போது மலேரியாவின் உயர்ந்த அபாய நிலைக்குப்போய் (Cerebral Malaria) விரைவில் ஆளையே கொல்லுகிறது. இந்நோய்க்கிருமியை ஒழிப்பதற்காக உள்ள ''க்ளோரோகுயின்'' மருந்து செயலிழந்து வருவதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இதனால் அமெரிக்கா, சைனா முதலிய நாடுகளில் மாற்று மருந்துகளையும் கண்டுபிடித்து நடைமுறைப் படுத்தி வருகிறார்கள். ஆனால் இந்தியாவில் மிகுத்த பயனளிக்காத ''க்ளோரோகுயின்'' மருந்துதான் மலேரியாவிற்கு மாற்றாக பரவலாக நடைமுறையில் உள்ளது.

காசநோயின் மருந்தான ''ஸ்ட்ரெப்டோமைசின்'' 1960-ன் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பின்னால் சில வருடங்களில் உலக நாடுகளைப் போலவே இந்திய அரசும் காசநோயை கட்டுப்படுத்திவிட்டதாகக் கூறியது. ஆனால் இன்றைய நிலையிலும் லட்சக்கணக்கில் அதிகரித்து பரவி வருவதைத்தான் பார்க்கிறோம். அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளில் 40-லிருந்து 50 சதவிகிதத்தினர் காசநோயாளிகள் என்று தெரிவிக்கிறது ஒரு புள்ளி விவரம். ஒரு நிமிடத்திற்கு ஏழு பேர் வரை காசநோயாளிகள் உருவாகிறார்கள். இந்தியாவில் வருடந்தோறும் காசநோயால் 4 லட்சத்திலிருந்து 6 லட்சம் வரை மக்கள் மடிந்து கொண்டுள்ளனர் என்கிறது உலக சுகாதார நிறுவனம். 1970-களில் எய்ட்ஸ் நோய்க் கிருமியான ஹெச்.ஐ.வி. கண்டுபிடிப்புக்குப் பின் எல்லோரது கவனமும் இதில் குவிந்து காசநோயை மறந்தார்கள். 1987-ல் காசநோயை முற்றிலுமாக பின்னிலைக்குத் தள்ளிவிட்டனர். மருத்துவ ஆராய்ச்சியாளர்களும் மருந்து கம்பெனிகளும் காசநோய் பற்றிய ஆராய்ச்சியையும், மருந்து தயாரிப்பையும் 'காலாவதியான லாபமற்ற நோய்' என கடந்த 20 வருடங்களாக புறக்கணித்து வருகின்றனர். இதன் விளைவு; இன்று இந்நோய் பூதாகரமாக வடிவெடுக்கச் செய்தது. ஏற்கனவே வெகுவாக பரவிவந்த காசநோய், எய்ட்ஸ் நோய் வரவுக்குப் பின்னே பலமடங்காகப் பெருகியது. எய்ட்ஸ் கிருமி தாக்கப்பட்டவர்களுக்கெல்லாம் காசநோயும் தொற்றியது. இதனளவு அமெரிக்காவில் 100 சதவிகிதமாகவும் ஆப்பிரிக்காவில் 300 சதவிகிதமாகவும் இந்தியாவில் 70 சதவிகிதமாகவும் உள்ளது.

உடல் சத்துக்குறைவால் நிமோனியா நோய் கண்ட சுனிதா; அரசின் கொடுமையால் எலும்புக் கூடுகளாக எதிர்காலத் தலைமுறையினர்.



காசநோயின் கிருமி நாம் உட்கொள்ளும் திரவம், காற்று மூலமாக எளிதாகப் பரவும் தன்மை பெற்றது. ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களை தாக்கி அழித்து பெருகிக் கொள்ளும் இக்கிருமி நமது நுரையீரலில் நிரந்தரமாக குடியிருந்து மெல்ல சாவை நோக்கி அழைத்துச் செய்கிறது. இதற்கான சிகிச்சை பல நாட்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தாலும் உரிய முறைகள் மூலம் எளிதாக குணப்படுத்த முடியும். இதற்காக ஒருவருக்கு 2000 முதல் 2500 ரூபாய் வரையே செலவாகும். ஆனால், அரசு மருத்துவமனைகளில் உள்ள மருந்து பற்றாக்குறை, சுகாதாரமற்ற முறை மூலமே இந்நோய் பலருக்கு பரவி மடிவது யதார்த்தமாக உள்ளது. இந்தியாவில் 150 லட்சம் பேருக்கு காசநோய் பாதிக்கப்பட்டிருந்தும் 40 லட்சம் பேருக்கே எச்சில் சோதனை மூலம் நோயை உறுதிப்படுத்தியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். காசநோய் ஒழிப்புத் திட்டத்திற்காக உலக வங்கி ஒதுக்கி வந்த நிதியும் குறைக்கப்பட்டுவிட்டது. இந்தியாவும் தனது திட்டத்தில் 20 சதவிகிதத்தை குறைத்துவிட்டது.

பிளேக் நோய் இந்தியாவில் இல்லவே இல்லை என்று 1960-களில் அரசு உரக்க பிரச்சாரம் செய்தது. ஆனால் அதற்குப் பிறகு ஆங்காங்கே இருந்து கிடைத்த செய்திகள் நமக்கு அதிர்ச்சியளித்தன. சென்னையில் 1986-ல் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்லாமல் அவர்க



படிப்பகம்

ளுக்கு சிகிச்சையளித்த மருத்தவர்களும் பணியாளர்களும் உட்பட 60 பேர் இறந்துபோனார்கள். அண்மையில் கடந்த ஆகஸ்டு மாதம் கூட கேரளாவில் 35 பேரும் மஹாராஷ்டிரா - தானேயில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களும் பிளேக் நோய் கண்டு மாண்டார்கள். பிளேக் நோய்க்கும் மஞ்சள் காமாலைக்கும் இனம் கண்டுகொள்வதற்கான வேறுபாடுகள் குறைவு என்பதால் மருத்துவர்கள் பலர் பிளேக் நோயை மஞ்சள்காமாலை என்றே முடிவு செய்து சிகிச்சையளிப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். கிராமப்புறங்களிலோ பிளேக் நோயை பல பெயர்களில் (Mud fever - சேறு காய்ச்சல், Seven days fever - ஏழுநாள் காய்ச்சல், flood fever - வெள்ள நோய், rice field fever - வயகாட்டு காய்ச்சல் முதலிய பெயர்களில்) அழைக்கிறார்கள். இதனால்தான் பிளேக் நோய் பாதிக்கப்பட்டோர் மற்றும் இறந்தோரின் புள்ளி விவரங்கள் குறைவாகத் தெரிகின்றன. காலராவைப் போலவே விரைவாகவும் பரவலாகவும் தொற்றக்கூடிய அபாயமான நோய்தான் இதுவும்.

இந்நோய்க் கிருமி விலங்குகளின் உடலில் தங்கி பெருகி அதன் ரத்தம், சிறுநீர் மூலம் வெளியேறி மனிதர்களுக்கு தொற்றுகிறது. குறிப்பாக எலிதான் இந்நோயை மனிதர்களுக்கு தரும் கொடையாளி. எலி கடித்தாலோ, எலியின் ரத்தமும் சிறுநீரும் தண்ணீர் அல்லது புண்கள் மூலம் ரத்தத்தில் கலந்தாலோ நம்மை பிளேக் நோய்க்கிருமி எளிதாக தொற்றிக்கொள்கிறது. மழை மற்றும் வெள்ளம் வரும் காலங்களில் இதன் பரவும் தன்மை அதிகம். இக் கிருமி நமது உடலில் புகுந்து ஈரல் மற்றும் சிறுநீர் பிரிப்புறுப்பை செயலிழக்கச் செய்து பல நாள் படுக்கையில் தள்ளி கொல்லுகிறது. கிராமப்புறங்களில் வயல்வெளிகளில் பெருத்துத் திரியும் எலிகளால் தான் பிளேக் நோய் பரவி வந்தது. தற்போது நகர்ப்புறங்களிலும் எலிகள் பெருகி பிளேக் நோய்க்கு ஆளாகுவோரின் எண்ணிக்கை பெருகி வருகிறது. தண்ணீர் தொட்டியில் எலி செத்து கிடந்ததால் கொச்சின் துறைமுகத் தொழிலாளர்கள் பலருக்கு இந்நோய் வந்து சிலர் இறந்துபோனது அண்மையில் நடந்த சம்பவம்.

மூளைக்காய்ச்சலுக்கு தமிழ்நாட்டையே சிறந்த உதாரணமாகக் காட்டலாம். திருச்சியருகே அரியலூர், பெரம்பலூர் பகுதிகளில் பலர் சாவது நிகழ்கிறது. அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்கள் என்றாலே இப்பகுதிவாழ் மக்களிடையே மூளைக்காய்ச்சல் பீதி தொற்றிக்கொள்கிறது. கடந்த ஆண்டு 33 பேர் இறந்தார்கள்; இந்த



தொற்று நோய் கண்டு சாலைவாசிகள் இறந்தாலும் இறுதிச்சடங்கு செய்ய பிச்சையெடுக்கும் கொடுமையே நிலவுகிறது.

ஆண்டில் 25-க்கும் மேற்பட்டோர் பலியானார்கள்.

எலிகள் மூலம் பிளேக் நோய் பரவுவது போலவே, பன்றிகள் மூலம் இந்நோய் பரவுகிறது. இக்கிருமி மூளையையும் தண்டுவடத்தையும் தாக்கி செயலிழக்கச் செய்து ஆளை எளிதாகக் கொல்லுகிறது. காசநோய் பெரும்பாலும் முதியவர்களைக் கொல்லுகிறது என்றால் மூளைக்காய்ச்சலின் இலக்கு குழந்தைகளாக உள்ளனர். மேலும் பிளேக் நோயைப் போலவே இதுவும் இனங்கண்டு கொள்ளப்படாமல் மருத்துவர்கள் தவறாக தண்டுவட நோய் (Meningitis) என மதிப்பிட்டு, சிகிச்சை அளிப்பதுதான் கிராமப்புறங்களில் பரவலாக உள்ளது. உரிய சிகிச்சை, எச்சரிக்கை மற்றும் பன்றிகளை கட்டுப்படுத்தி தனியே பராமரிப்பது மூலம் இந்நோயை ஒழிக்க முடியும். ஆனால், பன்றிகள் குழந்தைகளோடு சாக்கடையில் விளையாடுகிற சமூக அவலநிலைமைதான் நீடிக்கிறது. ''பன்றிகளை ஒழிக்கிறேன்'' என அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கையும் பன்றி வளர்ப்புத் தொழிலில் இருப்பவர்களுக்கு மாற்று ஏற்பாடு - வழி இல்லாததால் அம்மக்களுக்கு தொல்லையாகவும் முடிகிறது.

●○●

தொற்று நோய்களில் முக்கியமான மலேரியா, பிளேக், காசநோய் ஆகியவற்றை முற்றிலும் ஒழித்துவிட்டோம் என்பதுதான் 1960-லிருந்து இந்திய மற்றும் மாநில அரசுகளின் நிலையான கருத்தாகவும் பிரச்சாரமாகவும் உள்ளது. ''பெரியம்மையை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு சன்மானம் உண்டு'' எனப் பெருமிதமாக தனது அம்மை ஒழிப்பு சாதனையைப் பறைசாற்றுவதைப் போன்றே அரசு, இந்நோய்களுக்கும் பிரச்சாரம் செய்கிறது. ஆனால் இம்மூன்று நோய்களும் பூதாகரமாக பரவி, மக்களை கொத்து கொத்தாக அள்ளிச் செல்வதைத்தான் பார்க்கிறோம். அரசு, இந்நோய்களை ஒழிக்கவில்லை என்பது மட்டுமல்ல, கட்டுப்படுத்தக் கூட நடவடிக்கை எடுக்கவில்லை என்றே நிரூபணமாகிறது. இதுபோன்ற பழைய ஆட்கொல்லி நோய்கள் ஒழிக்கப்படாத அதே நிலையில் மூளைக்காய்ச்சல், காலா ஆசார், எயிட்ஸ் போன்ற புதிய தொற்று நோய்களும் வந்து பரவுகிற கொடுமைதான் உள்ளது. இதுதவிர காலரா, நிமோனியா, வாயு - வயிற்றுப்போக்கு முதலிய 'சாதாரண' நோய்களால் கூட ஏராளமானோர் பாதிக்கப்படுவதும் பலர் மடிவதும் நாம் அருகருகே காணும் நிகழ்ச்சியாக உள்ளன.

இத்தகைய தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டு அநியாயமாக மடிபவர்கள் சாதாரண உழைக்கும் மக்களே - வறுமைக் கோட்டிற்கு கீழிருக்கும் 65 சதவிகிதத்தைச் சேர்ந்தவர்களே! நடுத்தர மக்கள் ஓரளவிற்கு தற்காலிகமாக தப்பித்துக் கொள்கிறார்கள். வசதி படைத்த மேட்டுக்குடி கும்பலோ பன்றிகளுக்கும், எலிகளுக்கும், கொசுக்களுக்கும் அப்பாற்பட்ட தனிக்குடியிருப்புகளில் பாதுகாப்பு தேடிக் கொள்கிறார்கள். அதை மீறி வந்தாலும் (பெரும்பாலும் ஒழுக்கக் கேடு தொடர்பாக வருகின்றன) ஐந்து நட்சத்திர மருத்துவமனைகளை நாடி உயிரைப் பாதுகாத்துக் கொள்ள முடிகிறது.

சுற்றுப்புற சூழலின் சுகாதாரம் நோய் தடுப்புக்கு ஒரு முக்கிய விசயம். 'உட்கார்ந்து சாப்பிடும்' மேட்டுக்குடி கும்பலுக்கு சுற்றுப்புற சுகாதாரக் கேட்


www.padippakam.com
படிப்பகம்



குப்பை பொருக்கி நகரை சுத்தம் செய்தாலும் படுத்துறங்க குப்பைத் தொட்டிகளும் தெருவோரங்களும்தான் கதி!

டினால் நோய் வருவதில்லை. கொழுப்பு அல்லது சதை சம்பந்தமான நோயோ், மூட்டுவலி, முழங்கால் வலி, கோமா போன்றவைகளோதான் வருகின்றன. விவசாயிகளும் தொழிலாளர்களும் வேர்வை சிந்த உழைப்பதால் இவ்வகை வியாதிகள் மிகவும் குறைவு. உழைக்குமிடமும் ஒய்வை வெடுக்குமிடமும் சுகாதாரக் கேடாக இருப்பதால் தொற்றிக் கொள்ளும் நோய்களால் அவர்கள் அநியாயமாக உயிர்விடுவதுதான் அதிகம் நிகழ்கிறது. வானுயர கட்டிடம் கட்டுபவன், கழிவுநீர்க் குழாய்களில் முக்கி வாழ்க்கை நடத்துபவன், நகர்ப்புற குப்பைகளிலும் சாக்கடை குழிகளிலும் தெருவோரங்களிலும் குடியிருந்தால் வேறு என்ன நிகழும்? ஆலை முதலாளியின் கழிப்பறை குளிர்ப்பதனப் பெட்டிக்கும் காசு சம்பாரித்துக் கொடுத்துவிட்டு வரும் தொழிலாளியின் குடும்பம் ஆலையின் கழிவுநீர் தேங்கும் பகுதியில் வாழ்ந்தால் வேறு என்ன நிகழும்? ஆட்டுப்பட்டியிலும் மாட்டுக் கொட்டகைகளிலும் மலக் காட்டிலும் வாழும் விவசாயிகளுக்கு வேறு என்ன நிகழும்?

'சுத்தமான' வீடிருந்தும் தெருவில் வழிந்தோடும் நகராட்சியின் சாக்கடை நீரைக் கண்டுகொள்ளாமல் ஒதுங்கி வாழும் நடுத்தர வர்க்கத்தினரும் தொற்றுநோயின் பலியிலிருந்து தப்பமுடியவில்லை. நெல் மூட்டைகளின் இடுக்கில் இருட்டு சந்தில் ஊறும் எலியைப்போல சந்து, பொந்து, குகை கூண்டு வீடுகளில் வாழும் சாதாரண மக்களை வசதியாக கொத்துகொத்தாக அள்ளிப் போகின்றன, தொற்று நோய்கள். அதிகாரிகளின் மேட்டுக்குடியினரின் குடியிருப்பு பகுதிகளில் அவர்கள் வீட்டு நாய்க்குட்டிகளின் கழிவுப் பொருளையும் பொறுக்கி சுத்தம் செய்யும் நகராட்சி, சாதாரண மக்களின் குடியிருப்பு பகுதிகளில் மாடு செத்துக் கிடந்தாலும், மனிதன் செத்துக் கிடந்தாலும், மலம் குவிந்து கிடந்தாலும் கண்டு கொள்வதே இல்லை.

ஆலை முதலாளிகள், தொழிலதிபர்கள், வியாபாரப் பெரும்புள்ளிகள், நிலப்பிரபுக்கள், ஏகாதிபத்திய கம்பெனிகளின் லாபவெறியால் நமது பாரம்பரிய நிலமும், நீரும், காற்றும் மாசுபடுகின்றன; விஷமாக மாறிவருகின்றன. பெருவீத அளவிற்கு சுற்றுப்புறத்தை

**நோயை உற்பத்தி செய்யும் கிருமிகள், பரப்பும் பூச்சிகள் - விலங்குகள் முதலியவற்றை ஒழிப்பதில்தான் தொற்று நோயிலிருந்து நிரந்தர பாதுகாப்புள்ளது. எரிகிற வீட்டில் பிடுங்கி ஆதாயம் தேடும் இன்றைய ஆட்சியாளர்கள் நிச்சயம் இதைச் செய்யமாட்டார்கள்.**

மாசுபடுத்தும் இக்கும்பல் மீது நடவடிக்கை எடுக்காத அரசு, சுற்றுப்புற சீர்கேட்டிற்கு, குந்தவே வழியற்று தவிக்கும் பாமரனை குற்றவாளியாக காட்டுகிறது.

நோய் வந்தாலும் அதை எதிர்த்துப் போராடும் சத்தாவது நமது உடலில் இருக்க வேண்டும். உயிர் சத்துக்காகவே போராடிக் கொண்டிருப்பவன் உடல் சத்துக்கு எங்கே போவான்? சத்துக் குறைவால்தான் பாதிநோய்கள் வருகின்றன. கண்களில் உயிர் வைத்துக் கொண்டிருக்கும் நோஞ்சான் குழந்தைகள் இந்தியாவில் அதிகரித்து வருவதும் பட்டினிச்சாவின் விளிம்பில் எண்ணற்ற விவசாயிகளும் நெசவாளர்களும் தொழிலாளர்களும் நிற்பதும் தானே யதார்த்தம்? ஆட்சியாளர்களின் ஓட்டுப்பொறுக்கும் நோக்கம் கொண்ட சில திட்டங்கள், நடவடிக்கைகள்கூட - உதாரணத்திற்கு எம்.ஜி. ஆரின் சத்துணவு திட்டம், அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் சத்துக் கிடைக்கத்தானே பயன்படுகின்றன?

'வாழ்வோடும் நோயோடும் போராடுவது நமது விதி' என நொந்து கொண்டு பாமரமக்கள் அரசிடம் சிகிச்சைபெற அணுகினாலும் உயிர்காப்பாற்றிக் கொள்ள உத்திரவாதமில்லை. நகராட்சி மற்றும் அரசு மருத்துவமனைகளில், பஞ்சாயத்து, ஊராட்சி மற்றும் பேரூராட்சி மருத்துவமனைகளில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுகாதாரமும் இல்லை; மருந்தும் இல்லை; மருத்துவரும் இல்லை. தனியார் மருத்துவர், தனியார் மருந்து கம்பெனிகளின் கொள்ளைக்கு ஈடுகொடுக்க முடிகிறவரை அப்பாவி மக்களால் உயிர் வாழ முடிகிறது. சென்னையில் கால்பந்து, கூடைப்பந்து விளையாட்டரங்குகளைப் புதுப்பித்தும் கோவையில் 'டிஸ்னிலேண்ட்' (குழந்தைகளுக்கான கேளிக்கைப் பூங்கா) அமைத்தும் ஜெயலலிதாவைப் போல் சுய விளம்பர - புகழ் தேடிக் கொள்ளத் தான் ஆட்சியாளர்கள் முயல்கிறார்களே ஒழிய, அவற்றிற்காக கொட்டியிரைக்கும் கோடிகளின் அளவிற்கு கூட அரசு மருத்துவமனைகளின் மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்குவதில்லை.

அமெரிக்கா மற்றும் உலக வங்கியின் நிபந்தனைக்கேற்ப சேவைத்துறையை எல்லாம் தனியாருக்கு தாரை வார்த்து ஆட்சியாளர்கள் கொள்ளையடிப்பதில் மருத்துவதுறையும் அடக்கம். தற்போது ''டங்கல்'' திட்டம் மூலம் நமது பாரம்பரிய நோய் எதிர்ப்பு மருந்துகளுக்கும் அமெரிக்கா உரிமை கொண்டாடி அவற்றை அழித்து வியாபாரமாக்குகிற அபாயம் வந்துள்ளது. அரசு அடிப்படை மருந்துகளின் (Basic - Bulk durgs) உற்பத்தியைக்


படிப்பகம்

www.padippakam.com

கூட முடக்கிக் கொண்டு ஏகாதிபத்திய, தரகுமுதலாளித்துவ கம்பெனிகளுக்காக விட்டுக் கொடுத்துவிட்டது. பல நாடுகளில் தடை செய்யப்பட்ட மருந்துகள், பக்கவிளைவு கொண்ட மருந்துகளையே லாபம் கருதி உற்பத்தி செய்யும் இம்முதலாளிகள், அத்தியாவசிய - அடிப்படை மருந்து உற்பத்தியைப் புறக்கணித்து வருகிறார்கள்.

புதிய மருந்து கண்டுபிடிப்புகளோ, புதிய மருத்துவ விஞ்ஞான கருவிகள் கண்டுபிடிப்புகளோ இந்திய அரசிடமும் தனியார் கம்பெனிகளிடமும் இல்லை என்பதோடு அதற்கான முயற்சியும் இல்லை. அவற்றை தமது கொள்ளை லாபத்திற்காக இறக்குமதி செய்வதிலும் பயன்படுத்துவதிலுமே குறியாக உள்ளனர். மேலும், இறக்குமதி செய்யப்படும் நவீன மருந்துகளும், கருவிகளும், சோதனை முறைகளும் நகராட்சி, ஊராட்சி மருத்துவமனைகளை எட்டிப்பார்ப்பதில்லை என்பது பல ஆண்டுகால வரலாறு.

நோயை உற்பத்தி செய்யும் கிருமிகள், பரப்பும் பூச்சிகள், விலங்குகள் முதலியவற்றை ஒழிப்பதில்தான் நிரந்தர பாதுகாப்பு இருக்கிறது. எரிகிற வீட்டில் பிடுங்கி ஆதாயம் தேடும் இன்றைய ஆட்சியாளர்கள் நிச்சயம் இதை செய்ய மாட்டார்கள். சுற்றுப்புறத்தை சாக்கடையாக்கி கிருமியை உற்பத்தி செய்யும் ஆலை முதலாளிகளின் லாபம் பாதிக்கும்; கொசு, ஈ முதலான மனித விரோத பூச்சிகளை, எலி போன்ற விலங்குகளை ஒழித்தால் கொசு மருந்து, பூச்சு மருந்து எலி மருந்து மட்டுமல்ல; பொதுவாக அனைத்தும் மருந்துத் துறை உற்பத்தியாளர்கள், வியாபாரிகளின் கொள்ளை பாதிக்கும்; இவர்களோடு உறவுள்ள ஆட்சியாளர்களின் வருமானமும் பாதிக்கும் என்பதால் நிரந்தர தீர்விற்குள் போகமாட்டார்கள்.

கொசு மருந்து அடிப்பது, எலி வேட்டை நடத்துவது எனவும் ''தேசிய மலேரியா ஒழிப்பு திட்டம்'' (NMEP), ''காசநோய் ஒழிப்புத் திட்டம்'' ''நுண்கிருமி கட்டுப்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்'' அமுலாக்கத்திற்கு எனவும் அரசு ஏராளமான நிதியை ஒதுக்குகிறது. இவையெல்லாம் அதிகாரிகளின் பையை நிரப்பத்தான் பயன்படுகின்றன. கண்துடைப்புக்காக எடுக்கப்படும் சில நடவடிக்கைகளிலும்கூட கொசுவோ, நோய்பரப்பும் நுண் கிருமிகளோ சாகாது. ஏனெனில் அவை கொசுவையோ, கிருமியையோ அழிக்காத பழைய மருந்து - பழைய முறை.

சாதாரண மக்களையும் இந்நோய்கள் பாதிக்காமல் இருக்க வேண்டுமானால் சுற்றுப்புற சுகாதாரம் எங்கும் பேணப்பட வேண்டும்; சத்தான உணவுகள் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை இயற்கையாகப் பெற்று எல்லோரும் ஆரோக்கியமாக வாழ வேண்டும்; வியாபார முறையற்ற சிகிச்சை மற்றும் நவீன - உடனடி சிகிச்சை முறைக்கான உரிய ஏற்பாடுகள் நிறுவன, நிர்வாக ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் செய்யப்படுவதோடு அனைத்து தரப்பு மக்களுக்கும் பயனளிக்கும் வண்ணம் அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்; இவற்றிற்கெல்லாம் மேலாக நோய்க்கிருமிகளின் மூலத்தையும் அதாவது அதன் முட்டை, லார்வா, புழுக்களையும் இதைப் பரப்பும் பூச்சிகள், விலங்குகளையும் ஒழிக்க வேண்டும். இன்றைய அவல நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இது வெறும் கற்பனையாகத்தான் தெரியும்.



நிற்கவே இடமில்லாத அரசு மருத்துவமனையில் சுகாதாரத்திற்கு ஏது வழி?

அமெரிக்கா மற்றும் உலக வங்கி நிபந்தனைக்கேற்ப மருத்துவ துறையையும் தனியாருக்கு தாரைவார்த்து ஆட்சியாளர்கள் கொள்ளையடிக்கிறார்கள். தற்போது ''டங்கல்'' திட்டம் மூலம் நமது பாரம்பரிய நோய் எதிர்ப்பு மருந்துகளையும் வியாபாரமாக்கி அழிக்கப் போகிறார்கள்.

ஆனால் கற்பனையல்ல; நினைவுலகில் இருந்த உண்மை. மாவோவின் மக்கள் சீனத்தில் நிழ்ந்தது; நடைமுறையில் இருந்தது. ''கொசுவின் லார்வாவும் முட்டையும் சீனாவில் மிகப் பெரிய பற்றாக்குறை'' என்று முதலாளித்துவ அறிஞர்களே கிண்டலடிக்கும் வண்ணம் நோய்க்கிருமி ஒழிப்பில் சாதனைப் படைத்தது, சோசலிச சீனா. கொசு, ஈ, கரப்பான் முதலான பயனற்ற பூச்சி வகைகளை முற்றிலும் ஒழித்துக் கட்டினார்கள். காசநோயை மிகவும் கட்டுப்படுத்தி உலகிலேயே முன்னுதாரணமான நாடாக ஆக்கினார்கள். இதை சீன மக்களால் செய்ய முடிந்ததற்கு காரணம், மருத்துவ - நோய்க்கிருமிகளை ஒழிப்பதற்கு தடையாக இருந்த வர்க்க சமுதாயத்தின் நோய்க்கிருமிகளை ஒழித்துக் கட்டினார்கள். கொசுக்களைப் போல் மக்களின் ரத்தத்தை உறிஞ்சும் ஆதிக்க சக்திகளை ஒழித்துக் கட்டினர். பெருச்சாளிகளைப் போல் ஊழலில் மக்கள் விரோத நடவடிக்கையிலிருந்த அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் அரசு உறுப்புகளை ஒழித்தார்கள். பன்றிகளைப் போல் மக்களின் துரோகிகளை இனம்பிரித்து ஓரங்கட்டி கட்டுப்படுத்தினர். இவற்றை யெல்லாம் இந்திய மக்கள் விட்டு வைத்திருப்பதனால்தான் சமுதாய நோயும் மனித நோயும் தொடர்கின்றன. ● சப்பு

www.padippakam.com

# நம்பூதிரியாரின் மார்க்சியப் புரட்டல்

**''ஜூனியர் போஸ்ட்'' வார இதழுக்கு அளித்த பேட்டியின் மூலம் தான் ஒரு காந்தீய - காங்கிரசு - பார்ப்பனவாதி என்பதை 'மார்க்சிஸ்டு' தலைவர் நம்பூதிரிபாடு ஒப்புக் கொள்கிறார்.**

தலைவர்களின் துரோகங்களும் புரட்சிகர அணிகளின் தியாகங்களும் நிறைந்தது - இந்தியக் கம்யூனிச இயக்க வரலாறு.

இதிலே டாங்கேயா, நம்பூதிரி பாடா, ராமமூர்த்தியா, ஜோதி பாசுவா? என்று நீண்டுகொண்டே போகும் இந்தத் துரோகிகளின் பட்டிய லில் யாருக்கு முதலிடம்?

முடிவு செய்ய முடியாத அள வுக்கு ஒருவரையொருவர் விஞ்சி நிற் கிறார்கள். இருப்பினும் துரோகிகளின் வரிசையில் தனிச்சிறப்பான இடத்தை வகிக்கும் திருவாளர் நம்பூதிரிபாடு, அதை மீண்டும் நிரூபிக்கும் வகையில் ''ஜூனியர் போஸ்ட்'' எனும் வார ஏட் டிற்கு *(19.11.93 மற்றும் 26.11.93)* பேட் டியளித்தள்ளார். கம்யூனிசப் போர் வையில் ஒளிந்து கொண்டிருக்கும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் முதுபெரும் தலைவர்களில் ஒருவரான நம்பூதிரி பாடு, கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதி; அடிப்படையில் தான் ஒரு காந்தீய - காங்கிரசு - பார்ப்பனவாதி என்பதை ஒப்புக் கொள்வதாகவே அவரது பேட்டி அமைந்துள்ளது. கம்யூனிசத் துரோகிகளுக்கே உரித்தான மழுப்பல், வரலாற்றைத் திரித்துப் புரட்டுவது, அண்டப்புளுகு, உளறல்கள் முதலா னவை அவரது பேட்டியில் நிரம்பி வழிகிறது. நம்பூதிரிபாடு மட்டுமல்ல; அவரது வாரிசுகளைக் கொண்ட 'மார்க்சிஸ்ட்' கட்சியும் திருத்தல்வாதி களின் கூடாரம்தான் என்பதை இப் பேட்டியின் மூலம் அவர் நிரூபித்துள் ளார்.

### இதுவும் சோசலிசம் அதுவும் சோசலிசம்

போலி சோசலிச நாடுகளாகச் சீர ழிந்துவிட்ட, ''சீனாவிலும் வியட்நா மிலும் மார்க்கெட் பொருளாதார முறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று பர வலாகப் பேசப்படுகிறதே!'' என்று பேட்டியாளர் கேட்கிறார்.

(மார்க்கெட்) சந்தை பொருளாதா ரம் என்பதே முதலாளித்துவத்தின் அடிப்படை; அதை எந்த வகையில் வளர அனுமதித்தாலும் அது சோசலி சத்தைச் சீரழித்து விழுங்கிவிடும் என் பது மார்க்சிய அரிச்சுவடி. ஆனால் திரு வாளர் நம்பூதிரியார் என்ன சொல்கி றார் தெரியுமா? ''சோசலிசப் பொரு ளாதாரத்தின் கீழ் மார்க்கெட் பொரு ளாதாரமுறை அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது என்பதுதான் சரி. அங்கு சோச லிசப் பொருளாதார முறைதான் தொடர்கிறது. தொழில்துறை அரசின் வசம்தான் உள்ளது. ஆனால் முன்பு சீனாவிலும் வியட்நாமிலும் சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பிய நாடு களிலும் மார்க்கெட் பொருளாதார முறை முற்றாக ஒழிக்கப்பட்டிருந்தது. இப்போது சீனாவிலும் வியட்நாமி லும் சோசலிசப் பொருளாதாரத்தின் கீழ் இந்த மார்க்கெட் பொருளாதார முறை அறிமுகப்படுத்தப்பட்டுள் ளது'' என்கிறார்.

நம்பூதிரியாரின் கருத்துப்படி சீனாவிலும் வியட்நாமிலும் சோசலி சப் பொருளாதாரம் நிலவுகிறது; அவை சோசலிச நாடுகள்! அது ஒரு புறமிருக்கட்டும். முன்பு ஒழிக்கப் பட்ட முதலாளித்துவ சந்தைப் பொரு ளாதாரத்தை இந்நாடுகள் ஏன் அறிமு கப்படுத்த வேண்டும் என்பதுதான் கேள்வி. முன்பு இந்நாடுகளில் சந் தைப் பொருளாதார முறை ஒழிக்கப் பட்டிருந்தது; அதுவும் சோசலிசம்! இப்போது அது மீண்டும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது; இதுவும் சோசலி சம்தான் என்கிறார் நம்பூதிரியார். இந்த உளறலுக்கு சித்தாந்த விளக்கம் வேறு அளிக்கிறார். சீனாவிலும் வியட்நா மிலும் ''ஒரு மாபெரும் பரிசோதனை நடந்து கொண்டிருக்கிறது. மார்க்சிய - லெனினியமானது பழைய சோசலிசத் தின் பலன்களைத் தக்கவைத்துக் கொண்டு, குறைபாடுகளைப் போக் கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது'' என் கிறார்.



அதாவது லெனினும், ஸ்டாலி னும் மாவோவும் கட்டியமைத்தது 'பழைய' சோசலிசம். முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை அறிமுகப் படுத்தாததால் அதிலே 'குறைபாடு கள்' இருந்தது. இக்குறைபாட்டைப் போக்கும் வகையில், சீனாவிலும் வியட்நாமிலும் ஏகாதிபத்தியங்களின் கட்டுப்பாடற்ற கொள்ளைக்கும் ஆதிக் கத்துக்கும் கதவை அகலத் திறந்து விட்டு 'மாபெரும் பரிசோதனை' நடத் துகிறார்கள். இதுதான் புதிய சோசலி சம் என்கிறார் நம்பூதிரியார். மேலும் முன்னாள் போலி சோசலிச நாடுக ளான ரஷியாவிலும் கிழக்கு ஐரோப் பாவிலும் மீண்டும் (புதியவகை) சோச லிசத்தை நிறுவ முயற்சிகள் நடந்து வருகின்றன என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்.

நம்பூதிரியார் பெருமையுடன் குறிப்பிடுவது ரஷியாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் உள்ள மார்க்சிய - லெனினிய புரட்சிகர குழுக்களை அல்ல. குருச்சேவ் - பிரஷ்னேவின் வாரிசுகளான போலிக் கம்யூனிஸ்டு கள், போலி சோசலிஸ்டுகளைத்தான் அவர் குறிப்பிடுகிறார். போலந்தில் மீண்டும் போலிக்கம்யூனிஸ்டுகள் கூட் டணி சேர்ந்து அதிகாரத்துக்கு வந்துள் ளதையும், ரஷியாவில் வீழ்த்தப்பட்ட போலிக்கம்யூனிஸ்டுகள் இன்னமும் ஒரு சக்தியாக நீடிப்பதையும் தான் அவர் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார். அதுசரி! சோசலிசம் என்பதற்கு வரை யறை என்ன?

வீழ்த்தப்பட்ட முதலாளித்துவத் துக்கு எதிரான பாட்டாளி வர்க்க சர்வா திகாரம்தான் சோசலிசம் என்று பிரகட னப் படுத்துகிறார் தோழர் லெனின். ஆனால் நம்பூதிரியார், தொழில்துறை அரசின் வசம் இருந்தால் அதுதான் சோசலிசம் என்னும் அடிமுட்டாள்தன மான அரிய கண்டுபிடிப்பைச் செய் துள்ளார். இந்த அளவுகோலை வைத்து சீனாவிலும் வியட்நாமிலும் சோசலிசம் நிலவுகிறது என்னும் அபத் தமான முடிவுக்கு வந்து தனது கட்சி அணிகளையும் மக்களையும் ஏய்க்கி றார். அரசு அதிகாரம் எந்த வர்க்கத்தின் கையில் இருக்கிறது என்பது முக்கிய மல்ல; தொழில் துறை அரசின் பொறுப்பில் இருந்தால் போதும்; அது வும் சோசலிசம் என்பதுதான் நம்பூதிரி யாரின் நிலைப்பாடு. அவரது அளவு

www.padippakam.com

கோலை வைத்துப் பார்த்தால், தொழில்துறை அரசின் வசமுள்ள, இராணுவ சர்வாதிகார கொடுங்கோலாட்சி நிலவும் பர்மாவை (மியான் மாரை)யும் சோசலிச நாடாகக் கருத வேண்டும்.

### ஆளும் வர்க்கத்தின் கொள்கையே நம்பூதிரியாரின் கொள்கை

''பிரிந்து போகும் உரிமை உட்பட சுயநிர்ணய உரிமை என்பதை எல்லா நாடுகளுக்கும் லெனின் சொல்லவில்லை. 'கம்யூனிஸ்ட் அகிலம்' என்ற சர்வதேச அமைப்பில் இந்தியாவின் போராட்டச் செயல் திட்டம் பற்றி இந்தியத் தோழர்களுடன் லெனின் விவாதித்தார். அப்போதுகூட 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இந்தியாவின் சுயநிர்ணய உரிமை' பற்றித்தான் அவர் கூறினாரே தவிர, இந்தியாவுக்குள்ளேயே உள்ள தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை, பிரிந்து போகும் உரிமை பற்றி அவரோ, கம்யூனிஸ்ட் அகிலமோ பேசவில்லை'' என்கிறார் நப்பூதிரியார்.

இதைவிட அண்டப் புளுகு வேறெதுவும் இருக்க முடியாது. லெனின் காலத்தில் இந்தியா, பிரிட்டனுக்கு எதிராக தேசவிடுதலைப் போரில் ஈடுபட்டிருந்ததால் தேசிய விடுதலை பற்றியே அவர் குறிப்பாக விவாதித்தார். இந்தியாவில் தேசிய இனப் பிரச்சினையே கிடையாது; தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை இந்தியாவுக்குப் பொருந்தாது என்று தோழர் லெனினோ, கம்யூனிஸ்ட் அகிலமோ ஒருபோதும் குறிப்பிடவேயில்லை.

மாறாக, ''...இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தேசிய இனங்களின் அரசியல் சுயநிர்ணயக் கோட்பாடு அல்லது பிரிந்து போகும் உரிமை கிழக்கு ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் தேவையற்றது என்று கம்யூனிஸ்ட் அகிலம் கருதலாம் என்பது இதன் பொருளா? இப்படிப் பொருள் கொள்வது மடமையின் உச்சநிலையில் இருக்கும்'' என்று நம்பூதிரிபாடுகளை அன்றே சாடிய லெனின், 1896-ம் ஆண்டில் அகிலம் வகுத்தளித்த தீர்மானத்தையும், பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளையும் விளக்குகிறார். (பார்க்க: தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, லெனின், மாஸ்கோ பதிப்பு, பக்கம் 69-70)

மேலும், ''...சோஷல் டெமாகிரட்டுகள் (கம்யூனிஸ்டுகள்) தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை, அதாவது ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனம் தனியே பிரிந்து செல்லும் உரிமையை மறுப்பார்களானால்... அவர்கள் பாட்டாளி வர்க்கக் கொள்கையிலிருந்து வழுவியவர்கள் ஆவார்கள்'' என்றும்,

''நமது அரசியல் கிளர்ச்சியில் பிரிந்துபோகும் உரிமை பற்றிய கோஷத்தை முன்வைத்து ஆதரித்துப் பேசத் தவறினால் நாம் பூர்ஷ்வாக்களின் (முதலாளிகளின்) நோக்கத்துக்கே உதவுவோம்'' என்றும் தெளிவாகவே விளக்குகிறார். ஆனால் இந்த உண்மைகளை வசதியாக மூடி மறைத்துவிட்டு நம்பூதிரியும் அவரது கட்சியினரும் ஆளும் வர்க்கங்களின் நோக்கங்களுக்கு விசுவாசமாகச் சேவை செய்யும் கம்யூனிசத் துரோகிகளாகவே உள்ளனர்.

### நம்பூதிரியாரின் புரட்டல்

மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டி தகிடுதத்தங்களைச் செய்வதையே தொழிலாகக் கொண்ட நம்பூதிரியார், மார்க்சிய - லெனினியத்தின் அடிப்படைகள் என்று மூன்று கொள்கைகளைக் கண்டுபிடித்துள்ளார். அவை 1. ''முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறுவதற்கான புரட்சியை தொழிலாளி வர்க்கம் நிறைவேற்ற வேண்டும். 2. விவசாயிகள் உள்பட உழைக்கும் மக்களின் அனைத்துப் பிரிவினருடன் சேர்ந்து செய்ய வேண்டும். 3. இந்தப் புரட்சிக்கு கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்க வேண்டும்.''



''வன்முறையில்லாத புரட்சிதான் மக்கள் ஜனநாயகப் புரட்சி'' என்கிறார் நம்பூதிரிபாடு. வேடிக்கை என்னவென்றால் காங்கிரசு கூடத்தான் இதையே தனது கொள்கையாகக் கூறிக் கொள்கிறது.

இதைவிட அப்பட்டமான புரட்டல் வேறெதுவும் இருக்க முடியாது. மார்க்சிய - லெனினியத்தின் அடிப்படை என்பது வெறுமனே சோசலிசத்தை நிறுவுவதல்ல; பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர கடமை சோசலிசத்தோடு முடிவடைவதும் அல்ல. சோசலிசத்தையும் தாண்டி கம்யூனிசத்தை - அதாவது வர்க்கங்களற்ற சமுதாயத்தை நிறுவுவதுதான் என்று கம்யூனிஸ்ட் அறிக்கையில் ஏறத்தாழ நூறாண்டுகளுக்கு முன்பே மார்க்சும் எங்கெல்சும் பிரகடனப் படுத்தியுள்ளனர். ஆனாலும் நம்பூதிரியார் சோசலிசத்துக்கு மாறுவதற்கான புரட்சிதான் மார்க்சியத்தின் அடிப்படைக் கொள்கை என்று கூசாமல் புளுகுகிறார்.

ஐரோப்பிய பாணி போலி சோசலிசக் கட்சிகளைப் போல தங்களையும் தரம்தாழ்த்தி மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான் இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகளின் நோக்கமாக உள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரைக் கூட மாற்றிவிடலாம் என்று ஈராண்டுகளுக்கு முன்பு வலதுகள் தமது தேசிய கவுன்சில் கூட்டத்தில் விவாதித்தனர். நம்பூதிரியாரோ, கட்சியின் பெயரை மாற்றாமலேயே, இந்த நோக்கத்தை ஈடேற்றக் கிளம்பி விட்டார். அதனால்தான் சோசலிசத்தை அடைவதுதான் மார்க்சியத்தின் அடிப்படை என்று வெட்கமின்றிப் புளுகுகிறார்.

### நம்பூதிரியாரின் நாற்காலி புரட்சி!

'மார்க்சிஸ்ட்' கட்சியினர் ''மக்கள் ஜனநாயகப் புரட்சி'' செய்யப் போவதாக அடிக்கடி பிதற்றி வருகின்றனர். ஆனால் மக்கள் ஜனநாயகப் புரட்சி என்றால் ஏதோ ஆளும் வர்க்கங்களுக்கு எதிரான வன்முறைப் புரட்சி என்று யாரும் பயப்பட வேண்டாம் என்கிறார் நம்பூதிரியார். ''இந்தியாவைப் பொறுத்தவரை சுதந்திரத்தைப் பாதுகாப்பது, ஜனநாயகத்தை வளர்ப்பது, பொருளாதாரத்திலும் கலாச்சாரத்திலும் விரைவான முன்னேற்றத்தை ஏற்படுத்துவது என்பதைத்தான் மக்கள் ஜனநாயகக் கட்டம் என்கிறோம்'' என்று வெளிப்படையாகவே அறிவித்து விட்டார். வேடிக்கை என்னவென்றால் காங்கிரசு கட்சி கூடத்தான் இதையே தனது கொள்கையாக கூறிக் கொள்கிறது. அப்புறம் எதற்காக போலிகள் இப்படியொரு கட்சியைக் கட்டி வைத்துள்ளார்கள் என்று புரியவில்லை.

''மேலும் இப்போதைய நிலைமைகளை உள்ளது உள்ளபடி பார்த்தால் ஆயுதம் தாங்கிய புரட்சி இப்போது உடனடிப் பிரச்சினையாக இல்லை. இன்றைய பிரச்சினை நாடாளுமன்ற போராட்டம், நாடாளுமன்றம் அல்லாத போராட்டங்களின் மூலமாக மக்களைத் திரட்டுவதுதான்'' என்கிறார். அதோடு, ''மே. வங்கம், திரிபுரா, கேரளாவில் மார்க்சிஸ்ட் கட்சி


படிப்பகம்

www.padippakam.com

# மீனுக்குத் தலை; பாம்புக்கு வால் நம்பூதிரியாரின் பூணூல் புரட்சி!

திருவாளர் நம்பூதிரிபாட் 1932-ம் ஆண்டில் வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட போது, காங்கிரசுத் தலைவர்களில் ஒருவரும் பார்ப்பனருமான சத்திய மூர்த்தி, ''நீ ஏன் பூணூல் போடவில்லை?'' என்று கேட்டாராம். அவரை வருத்தப்படுத்த வேண்டாம் என்பதற்காக தனது ''பூணூல் தொலைந்து விட்டது'' என்று நம்பூதிரியார் கூறினாராம். உடனே சத்திய மூர்த்தி ஒரு பூணூலை நம்பூதிரியாரிடம் கொடுத்து போட்டுக் கொள்ளச் சொன்னாராம். ஆனால் நம்பூதிரியார் அதை அணிந்து கொள்ளாமல் தனது மேசை மீது வைத்துவிட்டாராம். பின்னர் அவருடன் சிறையிலிருந்த ரெட்டி சாதியைச் சேர்ந்த ஒருவர் அப்பூணூலை எடுத்துப் போட்டுக் கொண்டு சத்திய மூர்த்தியின் முன்பாக நடந்து போனார். அதன் பிறகு சத்தியமூர்த்தி ''நீ பிராமணன் என்று தவறாக நினைத்து பூணூலைக் கொடுத்துவிட்டேன்'' என்றாராம்.

இந்தச் சம்பவத்தை ''ஜூனியர் போஸ்ட்'' (26.11.93) வார இதழுக்கு அளித்த பேட்டியில் நினைவு கூறும் நம்பூதிரியார், ''பூணூல் அணிந்து கொள்வதற்காக அவர்களை (பார்ப்பனர் உள்ளிட்ட மேல் சாதியினரை) குறை கூற மாட்டேன். அவர்கள் பூணூல் அணிந்து கொண்டே சமூக, அரசியல் போராட்டத்தில் கலந்து கொண்டால் அவர்களை நான் ஒதுக்க மாட்டேன்'' என்கிறார்.

பூணூல் அணிந்து கொள்வதே வர்ணாசிரம அடிப்படையில் நான் மேல் சாதி என்று காட்டிக் கொள்வதற்காகத் தான்; சாதிய அமைப்பைப் கட்டிக் காப்பதற்காகத்தான்! அப்படியிருக்க, பூணூல் போட்டுக் கொண்டு சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான சமூகப் போராட்டங்களில் ஈடுபடுவேன் என்று கூறுபவன் கடைந்தெடுத்த பித்தலாட்டப் பேர்வழியாகத்தான் இருக்க முடியும். அப்படி பூணூல் அணிந்த பார்ப்பனர்கள் எத்தனைபேர் இதுநாள் வரை சமூகப் போராட்டங்களில் பங்கேற்றுள்ளார்கள் என்று நம்பூதிரியாரைத்தான் கேட்க வேண்டும்.

அதைவிட, நம்பூதிரியாரின் பச்சையான சந்தர்ப்பவாதம்தான் இங்கே பளிச்சிடுகிறது. சத்தியமூர்த்தி பூணூலைக் கொடுத்து போட்டுக் கொள்ளச் சொன்னபோது, ''நான் வர்ணசிரம சாதிய அமைப்பு முறைக்கு எதிரானவன்; நான் பூணூலைக் கழற்றி எறிந்த கம்யூனிஸ்டு'' என்று அவரிடம் வெளிப்படையாக நம்பூதிரியார் கூறவில்லை. அப்படிச் சொன்னால் அது சத்தியமூர்த்தியை வருத்தப்படுத்தி விடுமாம். எனவே அவரிடம் பூணூல் தொலைந்துவிட்டது என்று மழுப்பி, வர்ணாசிரம தருமத்தைக் காக்கும் பார்ப்பனராக நடிக்கிறார். மறுபுறம் சத்திய மூர்த்தி கொடுத்த பூணூலைப் போட்டுக் கொள்ளாமல் புரட்சியாளனாகவும் காட்டிக் கொள்கிறார்.

பாம்பும் சாகக் கூடாது; தடியும் நோகக் கூடாது — இதுதான் திருவாளர் நம்பூதிரியாரின் சந்தர்ப்பவாத சித்தாந்தம்! எப்படியிருக்கிறது போலிக் கம்யூனிஸ்டுத் தலைவரின் பூணூல் புரட்சி!

யும் அதன் அணியும்தான் முதல் பெரும் அரசியல் சக்தியாக வளர்ந்துள்ளன... இது கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வெற்றியைக்காட்டுகிறது'' என்கிறார்.

அதாவது 'மார்க்சிஸ்ட்' கட்சி கூறும் மக்கள் ஜனநாயகப் புரட்சி என்பது நாடாளுமன்ற, நாடாளுமன்றம் அல்லாத (ஆளும் கட்சிகளுடன் ஓட்டுக்கும் 'சீட்'க்கும் ரகசிய பேரம் நடத்துவது) போராட்டங்களின் மூலம் ஆட்சியைப் பிடிப்பதுதான். மற்றபடி ஆளும் வர்க்கங்கள் அஞ்சி நடுநடுங்க ஆயுதப்புரட்சியை நடத்துவதல்ல என்பதுதான் நம்பூதிரி கும்பலின் நிலைப்பாடு.

ஆளுங்கட்சிகளுடன் மாறிமாறி கூட்டுச் சேர்ந்து நாற்காலி சுகம் காண்பதே. போலிகளின் புரட்சிகர கொள்கையாகிவிட்டது. அந்தக் கண்ணோட்டத்திலேயே சாதிய - வகுப்புவாதப் பிரச்சினைகளுக்கு அடிமுட்டாள்தனமான தீர்வு கூறுகிறார் நம்பூதிரியார். ''ஆளும் வர்க்கங்களை எதிர்த்து ஆளப்படும் வர்க்கங்கள் போராட வேண்டும். அப்போது சாதிகளும் வகுப்புகளும் செயல்பாட்டுக்கு வரும். அப்போது அவற்றை உரிய வகையில் பயன்படுத்த வேண்டும்'' என்கிறார்.

ஆளும் வர்க்கங்களை எதிர்த்த போராட்டம் என்றால் ஒரு மார்க்சியவாதியைப் போல் நீங்கள் கற்பனை செய்தால் அது விபரீதமாகிவிடும். தேர்தலில் ஓட்டுக்கும் சீட்டுக்கும் ஆளும் கட்சிகளுடன் கூட்டணி கட்டுவதைத்தான், ஆளும் வர்க்கங்களுக்கு எதிரான மாபெரும் போராட்டமாக இங்கே நம்பூதிரியார் சித்திரிக்கிறார். இத்தகைய தேர்தல் கூட்டணிக்கான பேரம் நடத்தும்போது 'மார்க்சிஸ்ட்' கட்சி சாதிய, வகுப்புப் பிரச்சினைகளை ''உரிய வகையில் பயன்படுத்தியதை''ப் பற்றி அவரே பெருமையுடன் கூறுகிறார்.

''இந்திரா காந்திக்கு எதிராக மொரார்ஜி தேசாய் ஆட்சிக்கு வருவதற்காக நாங்கள் ஜனசங்கத்தை (அன்றைய பாரதிய ஜனதா) பயன்படுத்தினோம். தமிழ்நாட்டில் 1952-ம் ஆண்டில் நடந்த தேர்தலின்போது காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பிராமணரான பி.ராமமூர்த்தியை திராவிடர் கழகத் தலைவர் ஈ.வெ.ரா. (பெரியார்) ஆதரித்தார். பி.ராமமூர்த்தி பார்ப்பனரல்ல என்று அப்போது அவர் கூறினார். அதுதான் அரசியல்'' என்கிறார் நம்பூதிரியார். சாதியத்துக்கும் வகுப்புவாதத்துக்கும் எதிராகப் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் போலிகளின் லட்சணம் எப்படியிருக்கிறது பாருங்கள்!

நம்பூதிரியாரின் பேட்டியை முழுக்கவும் எடுத்து ஆராய்ந்தால் அதிலே வரிக்குவரி தகிடுதத்தங்களும், சந்தர்ப்பவாத மழுப்பல்களும், பொய்களும், புரட்டும் பொங்கி வழியும். அதற்குப் பக்கங்கள் போதாது என்பதால் இத்துடன் சுருக்கிக் கொள்கிறோம். கம்யூனிசப் போர்வைக்குள் ஒளிந்து கொண்டுள்ள இத்தகைய ஆளும் வர்க்க ஏஜெண்டுகளை 'மார்க்சிஸ்ட்' கட்சியிலுள்ள புரட்சிகர அணிகள் இனியும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. இக்கம்யூனிசத் துரோகியின் மோசடிகளை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். கம்யூனிசப் புரட்சியாளர்களுடன் இணைந்து மார்க்சிய - லெனினியத்தைப் பாதுகாக்கும் இன்றைய மகத்தான பணிக்கு தோள் கொடுக்க வேண்டும்.

கட்சியின் பெயரை மாற்றாமலேயே ஐரோப்பிய பாணி சோசலிச கட்சிகளைப் போல் சீரழிவை ஈடேற்ற முடியும் என்று கிளம்பிவிட்டார், நம்பூதிரியார். அதனால்தான் சோசலிசத்தை அடைவதுதான் மார்க்சியத்தின் அடிப்படை என்று மார்க்சியத்தையே புரட்டுகிறார்.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

● '1940 முதல் 50 வரையிலான பத்தாண்டு கால கட்டத்தில் அமெரிக்க அரசு சுமார் 600 மனிதர்களைக் கொண்டு 800 விதமான கதிரியக்கப் பரிசோதனைகளை நடத்தியுள்ளது. அதோடு 18 பேரின் உடலுக்குள் மிகுந்த கதிரியக்கத் தன்மை வாய்ந்த புளூட்டோனியத்தைச் செலுத்தியும், ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. தற்பொழுது இந்த 18 பேரும் உயிருடன் இல்லை. இவர்கள் அனைவருக்கும் 'தாங்கள் எந்தவிதமான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறோம்' என்பது தெரியாமலேயே இவ்வளவும் நடந்தேறியுள்ளன' — இந்த இரகசிய உண்மைகளை முதன்முறையாக இப்பொழுதுதான் வெளியுலகுக்கு அறிவித்துள்ளது அமெரிக்க அணு ஆராய்ச்சித் துறை. மேலும் இது போன்ற இரகசியங்கள் அடங்கிய 3 கோடி பக்கங்கள் கொண்ட கோப்புகள் பாதுகாப்புடன் இத்துறையின் வசம் உள்ளனவாம்.

● யுனூஸ் சர்க்கார் — மே.வங்க மாநில 'மார்க்சிஸ்ட்' கட்சி சட்டசபை உறுப்பினர். இவர் கல்கத்தா பல்கலைக்கழகம் நடத்திய பட்ட மேல்படிப்பு வங்க மொழித் தேர்வில் காப்பியடித்துத் தேர்வு எழுதியதைக் கண்காணிப்பாளர்கள் கையும் மெய்யுமாகப் பிடித்து வெளியே அனுப்பியுள்ளனர். 'திட்டமிட்டு என்னைப் பழிவாங்குகிறார்கள்' என இவர் சபைக் கட்டு கட்டியதை யாரும் காதில்கூட போட்டுக் கொள்ளவில்லை. ஜெயலலிதாவுக்கு சிவபதி எம்.எல்.ஏ. என்றால், ஜோதிபாசுக்கு யுனூஸ்!

● பாபர் மசூதி தகர்ப்புத் தொடர்பாக விசாரித்து வந்த மக்கள் விசாரணை மன்றம் தனது தீர்ப்பை வெளியிட்டுள்ளது. 'ஆர்.எஸ்.எஸ். சங்க குடும்ப அமைப்புகளின் நன்கு திட்டமிடப்பட்ட சதிச் செயல் இதுவென்றும், மைய அரசு தெரிந்தே சுய விருப்பத்துடனேயே தனது கடமைகளைச் செய்யாமல் புறக்கணித்துள்ளது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது. கல்யாண்சிங் அரசாங்கத்திற்கும், பைசாபாத் மாவட்ட அதிகாரிகளுக்கும் 'மூன்று - நான்கு நாட்களுக்கு முன்பே என்ன நடக்கப் போகிறது எனத் தெரியும்' என்பதற்கு அநேக நேரடி ஆதாரங்கள் இத்தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அதோடு மைய அரசின் வெள்ளை அறிக்கையை இத்தீர்ப்பு 'போலித்தனமானது' எனச் சாடியுள்ளது.

● கம்போடியாவில் ஐ.நா. அமைதிப் படையில் பணிபுரிந்த பல்கேரிய வீரர்களில் சுமார் 60 பேர் பழைய குற்றவாளிகள் என்பது தற்பொழுது அம்பலமாகியுள்ளது. 'சிறையில் இடப் பற்றாக்குறையினால் அவர்களை விடுதலையாகும் சமயத்தில் அனுப்பி வைத்ததாக' பல்கேரிய அரசும் ஒப்புக் கொண்டுள்ளது. தற்பொழுது பணியில் இருக்கும் பல்கேரிய வீரர்கள் விலங்குகளைத் தங்கள் நாட்டுக்கு கடத்துவதிலும் இதுபோல் போஸ்னியாவில் உக்ரேனிய வீரர்கள் கள்ளச் சந்தை விற்பனையிலும், தாய்லாந்தில் ஆயுதக் கடத்தலில் மாலி நாட்டு வீரர்களும் நீண்ட நாட்களாக ஈடுபட்டு வந்துள்ளனர்.

● 'இந்தியா மிகப் பரந்த, விரிவான அளவில் ஆரம்பக் கல்வி முறையை நடைமுறைப்படுத்துகிறது; ஆரம்பக் கல்வி கற்கும் பெண்களின் சதவீதம் எட்டு மடங்கு அதிகரித்துள்ளதுடன், படிப்பைப் பாதியில் நிறுத்திவிடும் சதவீதம் குறைந்துள்ளது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை ஐந்து மடங்கு கூடுதலாக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்விக்கு ஒதுக்கப்படும் நிதியை 128 மடங்கு அதிகரித்துள்ளோம்' — இவையெல்லாம் ''ஜி-15'' நாடுகள் கலந்துகொள்ளும் 'அனைவருக்கும் கல்வி' எனும் கருத்தரங்கை ஒட்டி மைய அரசு வெளியிட்டுள்ள புளுகு மூட்டைகள்!

● மேற்கு வங்க விளையாட்டுத்துறை மந்திரி சுபாஷ் சக்ரவர்த்தி 16 லட்ச ரூபாய் அளவுக்கு லஞ்ச-ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக வருமான வரித்துறை அதிகாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். கல்கத்தாவைச் சேர்ந்த இரு பெரிய தொழிலதிபர்களின் வீடுகளில் சோதனை நடத்திய பொழுது, சக்ரவர்த்தி போன்ற பல அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் லஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனாலும் ஜோதிபாசு இந்த அமைச்சரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காரணம் ஓரிரு மாதங்களுக்கு முன்பாக இது போன்ற குற்றச்சாட்டுகளைப் பகிரங்கமாக எழுப்பியதால் ஜோதிபாசுவால் ஓரங்கட்டப்பட்ட முன்னாள் மந்திரி புத்த தேவ் பட்டாச்சார்யாவுக்கு எதிரான தனது கைத்தடி இவர் என்பதுதான்!

● அரியானா அரசு, 'பஞ்சாப் மாநிலத்தில் வழங்குவதைப் போல் தங்களுக்கும் சம்பளம் வழங்கப்பட வேண்டும்' எனக் கோரி 9 நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தனது ஊழியர்களை ஒடுக்கியதில் புதிய சாதனையே படைத்துள்ளது. 12000 ஊழியர்கள் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டனர்; 2438 ஊழியர்களை அத்தியாவசியப் பணி சட்டத்தின் கீழ் கைது செய்தது பஜன்லால் அரசு. சாதாரண வழக்குகளின் கீழ் 1532 அலுவலர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்; இதோடு 16298 பணியாளர்கள் மீது பல்வேறு விதமான 1296 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

● 'தக்காணம் மிக எளிதில் பூமி அதிர்வுகள் தாக்கக்கூடிய பகுதி எனப் பல அறிக்கைகள் சுட்டிக் காட்டியதை ஆள்வோர் யாரும் கண்டு கொள்ளவில்லை; பல சிறிய நில அதிர்வுகள் ஏற்பட்ட பின்னும் கூட அரசு மெத்தனமாக நடந்து கொண்டுள்ளது; அப்பகுதியில் கட்டப்படும் வீடுகள் நில அதிர்வைத் தாங்கக் கூடியவையா என்பதனைக்கூட ஆராயாது அனுமதித்துள்ளது. இவைதான் மிக மோசமான உயிரிழப்புகளுக்கும் பொருட்சேதத்திற்கும் காரணம்' என மகாராஷ்டிராவைத் தாக்கிய நில நடுக்கத்தை ஆராய நியமிக்கப்பட்ட பி.கே. ராவ் கமிட்டி தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது. இக்கமிட்டி ஒரு மாதத்திற்கு முன்பாகவே தனது அறிக்கையைக் கொடுத்த பின்னும் அரசு இதனை வெளியிடுவது பற்றி இன்னும் வாயே திறக்கவில்லை. இது போல் 1987-ல் கொடுக்கப்பட்ட அறிக்கையைக்கூட இன்னும் வெளியிடாது இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

'அனைவருக்கும் கல்வி' மாநாட்டை அம்பலப்படுத்தும் தட்டியுடன் குழந்தைத் தொழிலாளர்களின் எதிர்ப்பு ஊர்வலம்.



www.padippakam.com

# ராமதாசை மூக்கறுத்த 'பண்ருட்டி' விவகாரம்

**ராமதாசின் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதமும் சாதிய விசுவாசமும் ''பண்ருட்டியார்'' விவகாரத்தின் மூலமும் நிரூபணமாகியுள்ளது**

கோஷ்டிப் பூசல் புயலில் தி.மு.க.வையும் முந்திக் கொண்டு பாட்டாளி மக்கள் கட்சி 'அதிகாரப்பூர்வமாக' இரண்டாக உடைந்து விட்டது. கட்சியின் கூட்டங்களுக்கு வராதது; அரசியல் விசயங்களில் தாமாக, கட்சியை மதிக்காமல் பேட்டி கொடுப்பது - அறிக்கை விடுவது ஆகிய குற்றச்சாட்டுக்களைக் கூறி பொதுக்குழுவரை கூட்டி பண்ருட்டி ராமச்சந்திரன் மற்றும் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தியையும் கட்சியில் இருந்து நீக்கியுள்ளார் ராமதாஸ். இதற்குப் போட்டியாக பண்ருட்டியில் பொதுக்குழு என ஒரு கூட்டத்தைக் கூட்டி, ராமதாஸ், தீரன், தலித் எழில்மலை முதலானோரை நீக்கிவிட்டு ராமச்சந்திரனை தலைவராகவும், கிருஷ்ணமூர்த்தியை பொதுச்செயலாளராகவும் தேர்ந்தெடுத்து, தாமே பா.ம.க. என எதிர்கோஷ்டியினர் அறிவித்துள்ளனர்.

''விவாகரத்து செய்துகொண்டு பிரிபவர்கள்கூட நல்ல நண்பராய்ப் பிரிவோம் என்று பண்பாடு கூறும்போது, தமிழர்களுக்குள்ளே பிணக்குகள் வந்து பிரிகிறபோது குறைந்தது இலாவணி பாடாமலாவது இருக்கக் கூடாதா? பதவி, பணம் இரண்டுக்காகவும் ஒரு மனிதனை மதிப்பதும் தவறு; மிதிப்பதும் அதைவிட பெருந்தவறு'' என்று ''இனி'' மாத இதழில் ''சிறுத்தையே வெளியில் வா'' என்ற கட்டுரைத் தொடரில் 'எழுதுகிறார்' ராமதாஸ். ஆனால் ''நீதான் (ராமதாஸ்) கொஞ்சம் வாயை மூடிக்கொண்டிருக்கக் கூடாதா'', ''நீ என்ன அவ்வளவு பெரிய தலைவனா'' எனத் தாக்கும் ராமச்சந்திரன் கோஷ்டிக்கு எதிராக லாவணி பாடுகிறார். நக்கீரன் பேட்டியில் ராமதாஸ், ''ராமச்சந்திரன், குடிலன் புத்தியைக் காட்டிவிட்டார்'' என்கிறார். மேலும் ராமச்சந்திரனை ''அரசியல் வேசி, துரோகி, அரசியல் ஒட்டுண்ணி'' என்று தீரன் போன்றவர்கள் வசைபாடுகிறார்களே, இது என்ன பண்பாடு?

புலிகள் ஆதரவு, தீவிரத்தன்மையுள்ள போராட்டங்கள் மூலம் பா.ம.க.விற்குரிய அரசியல் 'இமேஜை'க் கெடுத்ததாக ராமதாசு கோஷ்டிமீது குற்றம் சுமத்துகிறது பண்ருட்டியார் கோஷ்டி. மேலும் பா.ம.க.வின் செயற்குழு, பொதுக்குழு முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை; ராமதாசு நினைப்பவருக்கு பதவி தருவது, நீக்குவதுதான் உள்ளது; எனவே எங்களை நீக்கியது செல்லாது; நாங்கள்தான் பா.ம.க. என்கிறார்கள்.

இவர்களை எள்ளி நகையாடும் ராமதாஸ் கோஷ்டி, செயற்குழு, பொதுக்குழுவில் பெரும்பான்மை தமக்குத்தான் இருப்பதாகக் கூறுகிறது. ஆனால், இடைத் தேர்தல் கூட்டு பற்றிய முடிவு எடுத்ததில் ராமச்சந்திரன் கோஷ்டிக்குத்தான் செயற்குழு பொதுக்குழுவில் பெரும்பான்மை ஆதரவு இருந்தது என்கிற முரணான, உண்மை தகவலும் வருகிறது. ஏனெனில் தேர்தல்கூட்டு தொடர்பான கருத்து மாறுபாடுதான் பிளவுக்கு இரு தரப்பினராலும் பிரதான காரணமாக முன்னிறுத்தப்படுகிறது; இப்பிரச்சினையிலிருந்துதான் பண்ருட்டி கோஷ்டி கட்சியை மதிக்கவில்லை என்கிற குற்றச்சாட்டும் பனிப்போரும் கட்சிக்குள் உக்கிரமடைந்தது. அல்லது இப்பிரச்சினைக்குப் பின் கொள்கைப் போர் நடத்தி ராமதாசு, செயற்குழு, பொதுக்குழு நபர்களை வென்றெடுத்து தன்பக்கம் இழுத்துவிட்டாரா என்பதை ராமதாசோ, அவரது ''புகழ் பரப்பு செயலாளர்'' பிரபஞ்சனோ தான் விளக்க வேண்டும்.

> ''பா.ம.க.விற்கு கிடைத்த அரிய பொக்கிஷம் பண்ருட்டியார்''; பிழைப்புவாதியை 'கொள்கை'வாதியாக மாற்ற முனைந்து ஏமாந்ததாக வெட்கமின்றி கூறுகிறார் ராமதாசு



இப்படி நாய்ச்சண்டை 'கொள்கைப்பூர்வ கட்சி'யான பா.ம.க.வில் நடக்கலாமா? ஆனால், நாம் எதிர்பார்த்த ஒன்றும் சுட்டிக் காட்டியவைகளுமே நடந்துள்ளன. புதிய ஜனநாயகம் 1-15 ஆகஸ்டு '89 மற்றும் 16-31 மே '91 இதழ்களில் பா.ம.க.வின் கொள்கை - முற்போக்கு சவடால்களையும் உருவான விதம், பின்னணியோடு வன்னிய சாதிக் கட்சிதான் என்பதையும் அம்பலப்படுத்தினோம். தொடர்ந்து பல இதழ்களில் நடப்பு ஆதாரங்களோடு அம்பலப்படுத்தி கட்டுரைகள் வெளியிட்டோம். பா.ம.க.விலும் இதனுடன் புகழுடிப்படையில் உறவாடிய போலிக் கம்யூனிஸ்டு அமைப்புகள், ''புதிய இடது'' — பேராசிரியர் சார்ந்த அமைப்புகள் மற்றும் தமிழின அமைப்புகளிலும் உள்ள நேர்மையான அணிகளின் சிந்தனைக்காக மீண்டும் இன்றைய நிலைமையோடு பொருத்தி நினைவுகூற கடமைப்பட்டுள்ளோம்.

ராஜீவ் மற்றும் எம்.ஜி.ஆருக்கு விசுவாசமான புரோக்கராக, ஆலோசகராக இருந்து ஈழ விவகாரத்தில் எதிராக செயல்பட்டவர்தான் பண்ருட்டி ராமச்சந்திரன்; தனது ஈழத் துரோகத்தை ஒத்துக் கொள்ளவும் இல்லை; தனது காங்கிரசு விசுவாசத்தையும் கைவிட்டுவிடவில்லை; ஆனால், வன்னியர் என்ற ஒரே காரணத்திற்காக தம்முடன் சேர்த்துக் கொண்டு ''முற்போக்கு கட்சி, கொள்கைப்பூர்வ கூட்டணி'' என்று பா.ம.க. பித்தலாட்டம் செய்கிறது - என்று எழுதினோம். இதே ''பண்ருட்டியாரை''ச் சுட்டிக்காட்டி, பா.ம.க. புலிகள் ஆதரவு, தன்னுரிமை நிலைப்பாடுகளில் ஊன்றி நிற்க முடியாது என்றும் குறிப்பிட்டோம். இதற்கு நேற்று வரை பா.ம.க. தனது ''தினப்புரட்சி'' மூலம் கொடுத்த பதில், ''பண்பட்ட பண்ருட்டியார் கொள்கைக்காகத்தான் பா.ம.க.விற்கு வந்தார்; ஐ.நா. சபையிலேயே வாதிட்டவர்; அறிவு - நிர்வாகத் திறமையுடையவர்'' என்பதேயாகும். இதைக்கூட ஏராளமான வசவுகள், எழுதமுடியாத வார்த்தைகளால் தலைமை முதல் அணிகள் வரை தாக்கி எழுதியவற்றின் ஊடாகத்தான் பெற முடிந்தது. ஆனால், இன்று ராமதாஸ் என்ன சொல்கிறார்?

ராமச்சந்திரன் ஒரு ''அழிவு சக்தி'', ''குடிலன்'', ''கோப்பு பார்க்காத அமைச்சர்'' என்றெல்லாம் எங்களுக்குத் தெரியும்; அவர் பொதுத் தேர்த



படிப்பகம்

வில் கடைசி நாளில் வந்து பா.ம.க.வில் எதற்காக சேர்ந்தார் என்பதும் தெரியும்; எவ்வளவோ எதிர்ப்புகளுக்கு இடையில் அவருக்கு இடம் கொடுத்தோம்; கடைசியில் குடிலன் புத்தியைக் காட்டிவிட்டார்; ஒதுங்க வந்த வீட்டையே அபகரிக்கிறார் - என்று கூறுகிறார் ராமதாஸ். மேலும் நேரெதிர் கருத்து இருந்தாலும் ஒருவரையொருவர் மாற்றி விடலாம் என நம்பி, முயன்று ஏமாந்ததாக ராமச்சந்திரனும், ராமதாசும் கூறுகின்றனர். மணலென்று தெரிந்தும் கயிறாகத் திரிக்க முயன்றேன் என்று தனது முட்டாள்தனத்தை வெட்கமின்றி கூறிக்கொள்கிறார், ராமதாசு. எல்லாம் தெரிந்தும் ராமச்சந்திரனை சேர்த்துக் கொண்டதற்கு வன்னியர் என்கிற காரணத்தைத் தவிர வேறு என்ன இருக்கிறது? இதைத்தானே ராமதாஸ் மறைமுகமாக ஒத்துக் கொள்கிறார்?! தி.மு.க.வில் 'சீட்' கிடைக்காமல் ஓடிவந்த நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி மற்றும் நந்தகோபால், பெருமாள், சிவதானமணி முதலான கட்சிமாறிகளையும் வன்னியர் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் இணைத்துக் கொண்டார்கள்.

பண்ருட்டி ராமச்சந்திரன் போன்றவர்களால்தான் பா.ம.க. ''காங்கிரசோடு உறவு'' எனத் தடம் புரண்டு போனது; ராமதாசிற்கு அவப்பெயர் தேடித்தந்தது; ராமச்சந்திரன் களையெடுக்கப்பட்டதால் பா.ம.க.விற்கு 'யானை பலம்' கிடைத்துள்ளது என்றும், பா.ம.க.வுடன் 'கூட்டு சமைக்கிற' அமைப்பினரும் இதையே நம்பி தனிப்பட்ட ராமதாசு 'கொள்கைவாதி' தான் என்றும் கூறுகிறார்கள். ஆனால், ராமச்சந்திரன் பிளவு விவகாரத்திலும் ராமதாசின் 'கொள்கைச் சவடால்' அம்பலப்பட்டு போனதையும் பா.ம.க.விற்கு 'யானை பலம்' இல்லை என்பதையும் காணத் தவறுகிறார்கள்.

ராமதாசின் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதமும் சாதிய வீசுவாசமும் தொடக்கத்திலிருந்து இருப்பதும் இன்றும் மாறாததும்தான். வன்னிய சங்கத்தின் தலைவராக இருந்த ராமதாசு, ராஜீவ் - மூப்பனாருடன் ரகசிய உடன்பாடு கண்டு திராவிடக் கட்சிகளை எதிர்த்தும், தேர்தல் புறக்கணிப்பில் காங்கிரசுக்கு மட்டும் ஆதரவாக நடந்து கொண்டும் விசுவாசமாக இருந்தார். ஆனால் காங்கிரசு அப்போதைய கவர்னர் அலக்சாண்டர் மூலம் வன்னியர்களுக்கு எதிரான முடிவை அறிவித்ததும், ''காங்கிரசு துரோகமிழைத்துவிட்டது; தமிழகத்தில் காங்கிரசிற்கு சமாதி கட்டுவதே எங்களது கொள்கை'' என்று குமுறினார், ராமதாசு. வன்னியர் பிரச்சினையில்

ராமதாசின் தனிநபர் புகழோ வெறும் தோற்றம்தான்! மக்களுடனோ, கட்சி அணிகளுடனோ ராமதாசு ஐக்கியப்பட்ட தலைமையாக இல்லை என அவரது 'புகழ் பரப்புச் செயலாளர்' பிரபஞ்சனே வாக்குமூலம் தருகிறார்.



எம்.ஜி.ஆரின் அனுசரணை, கருணாநிதியின் எதிர்ப்பு - அடக்குமுறை காரணமாக கருணாநிதியைவிட எம்.ஜி.ஆரை உயர்த்திப் பிடித்தவர்தான் ராமதாசு. வன்னியப் பிரச்சினையில் எல்லாக் கட்சிகளும் துரோகமிழைத்ததும் நம்பிக்கை வைக்க வேறு கட்சியில்லாததால் (அன்றைக்கு ஜெயா செல்வாக்கிழந்து இருந்தார்) தனிக் கட்சி தொடங்கி அரசியலில் நுழைந்தால்தான் வன்னியர்கள் சலுகையைப் பெற முடியும் என்பதாலேயே பா.ம.க.வை உருவாக்கினார், ராமதாசு.

பா.ம.க. தடை என்ற பிரச்சினை வந்தபோதுகூட மூப்பனார் மூலம் நரசிம்மராவுடன் பேரம் நடத்தியதாகக் கூறும் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தியை அன்றைக்கே கட்சிவிரோத நடவடிக்கையென வெளியேற்றாமல், வேடிக்கைப் பார்த்தாரே ராமதாஸ், ஏன்? ராணிப்பேட்டை, பழநி இடைத் தேர்தலில் காங்கிரசுடன் கைகோர்க்க கட்சி முடிவெடுத்ததில் ராமதாசும் உடன்பட்டு வக்காலத்து வாங்கிப் பேசினார். பா.ம.க. - காங்கிரசு உறவுக்காக புலி ஆதரவு - தன்னுரிமை நிலைப்பாட்டில் எதிராகப் பேசி பிதற்றினார். தானே எதிர்க்க வேண்டியிருந்தும் எதிர்க்காமல், எதிர்ப்புகளை மட்டுப்படுத்தி அல்லது மீறி ராமச்சந்திரனை கட்சியில் சேர்த்ததாகக் கூறுகிறாரே, அந்த சந்தர்ப்பவாதமும் சாதிய விசுவாசமும் தான் அனைத்திற்கும் அடிப்படை.

பா.ம.க.வின் விரைவான வளர்ச்சியையும், திடீர் அரசியல் செல்வாக்கையும் கண்டு ஆட்சியைப் பிடித்துவிடும் என்ற 'வாசனை'யறிந்து வந்த 'பக்கா' அரசியல்வாதிகளை கட்சிக்குள் அனுமதித்ததுதான் ராமதாசின் தவறு என்கிறார் பிரபஞ்சன். ஆட்சியைப் பிடித்தால் தமது சாதியினர் பயனடைய முடியும் என்று ராமதாஸ் போன்ற தலைவர்களால் ஊட்டப்பட்ட கருத்தடிப்படையில் வன்னியர்களில் கணிசமான அளவு ஆதரவு தந்த காரணத்தினாலேயே அந்த வளர்ச்சியும் செல்வாக்கும் பா.ம.க.விற்கு கிடைத்தது என்பதும் இன்னொரு உண்மை. அப்படி ஆதரித்த வன்னியர்களோ, ''தாழ்த்தப்பட்டவர் ஒற்றுமை, புலிகள் ஆதரவு, தன்னுரிமை தீர்மானம்'' என்றெல்லாம் சவடாலடித்தபோது அவர்களில் கணிசமானோர் வெறுப்படைந்து இன்று ''பண்ருட்டியார்'' பக்கம் திரண்டுள்ளனர் என்பதும் உண்மை.

முன்பு வன்னிய சாதி தலைவர்களான மாணிக்க வேலர், ராமசாமி படையாச்சி ஆகியோர் ராஜாஜிக்கு விலைபோய் வன்னியருக்கு துரோகமிழைத்தனர். தொடக்கத்தில் இவர்களைப் போலவே ராமதாசு செயல்பட்ட போதும் வன்னியர்கள் நம்பிக்கையிழந்தே இருந்தனர். இதை உணர்ந்த ராமதாசு வித்தியாசமான செயல்பாடு, தீவிர நடவடிக்கைகளைக் காட்டி வன்னியர்களிடையே நம்பிக்கைப் பெற்றார்; அவர்களை கணிசமாக திரட்டுவதிலும் வெற்றி பெற்றார். எல்லா கட்சிகளும் வன்னியர்களுக்கு துரோகமிழைத்ததால் எதிர்த்து தனித்து செயல்படவும் அரசியலில் நுழையவும் தள்ளியது. மேலும் தமிழக அரசியல் பிழைப்புவாத கட்சிகள் எல்லாம் மக்களிடையே நம்பிக்கையிழந்து மாற்று கட்சியை மக்கள் எதிர்பார்த்திருந்த ஒரு வெற்றிடமும் இருந்தது. இவற்றை ராமதாசின் முற்போக்கு - கொள்கை சவடால்கள், 'தீவிர நடவடிக்கைகள்' ஈடு செய்ததால்தான் பா.ம.க. திடீர் செல்வாக்கடைய முடிந்தது; குறிப்பாக வன்னியர்களிடையே செல்வாக்கு பெற்றது. ஆனால் இந்த வெற்று சவடால்களும் 'தீவிர நடவடிக்கைகளும்' பிசுபிசுத்துப் போனதோடு வன்னியர், தாழ்த்தப்பட்டவர் ஒற்றுமை மேல்மட்ட அளவில் செயற்கையாகவும் ஒட்டுப் பொறுக்கவும் மட்டுமே ஒட்டவைக்கப்பட்டதால் தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமல்ல, வன்னியர்களும் ஒதுங்கிப் போகத்தான் வழிவகுத்தது. இத்தருணத்தை ''பண்ருட்டியார்'' கோஷ்டி பயன்படுத்தி ஆதாயமடையத் துடிக்கிறது. ஆக ராமதாசும் வன்னியர்களுக்கு துரோகமிழைத்து வருகிறார் என்பது

www.padippakam.com

தான் நடைமுறை யதார்த்தம். உழைக்கும் மக்கள் வர்க்கரீதியாக அல்லாமல் சாதிரீதியாக திரளும் வரை இத்தகைய தலைவர்கள் ஆதாயமடைவதும் துரோக மிழைப்பதும் தொடர்கதையாகத்தான் இருக்கும்.

ராமதாசின் தனி நபர் புகழோ வெறும் தோற்றம்தான்! மக்களுடனோ, கட்சி அணிகளுடனோ ராமதாசு ஐக்கியப்பட்ட தலைமையாக இல்லை என அவரது 'புகழ் பரப்புச் செயலாளர்' பிரபஞ்சன் வாக்குமூலம் தருகிறார். மக்களும்(?) கட்சிக்காரர்களும் ''எல்லாம் டாக்டர்'' என ராமதாசை நாடி வந்தே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு செல்கிறார்களே ஒழிய, ''தேர்தல் கூட்டு'' போன்ற விவகாரங்களில் அவர் காட்டும் அரசியல் வழியை ஏற்றுக் கொள்வதில்லை என்கிறார், பிரபஞ்சன். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, ராஜீவ் போன்றவர்களின் செயற்கையாக உருவாக்கப்பட்ட புகழினால்தான் மக்களை ஏமாற்றவும் அவர்களை பண்பாட்டு ரீதியாக சீரழிக்கவும் இழிவுபடுத்தவும் முடிந்தது. பிரபஞ்சன் முதலான 'முற்போக்கு' வகையறாக்களும் ராமதாசிற்கு அத்தகைய செயற்கையான புகழை வளர்ப்பதில் தான் உதவி செய்கின்றனர். 'திண்டிவனப் பெரியார்', 'தமிழினப் போராளி', 'மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்' என்று புகழ்வது; அவர் மூஞ்சியையே எதிலும் அச்சிடுவது; பெயரை எதற்கும் முன்னிறுத்துவது; கட்-அவுட் வைப்பது; காலில் விழுவது என கட்சிக்காரர்களை பழக்கிவரும் ராமதாசு, பிற பிழைப்புவாத தலைவர்களிலிருந்து எவ்விதத்திலும் மாறுபட்டு விடவில்லை.

பா.ம.க.வின் பிளவால் பிழைப்புவாதியான பண்ருட்டி ராமச்சந்திரன் கோஷ்டியினர் சந்தி சிரித்துப்போக அவர்களிடம் ஏற்கனவே ஒன்றுமில்லை; எல்லாவற்றையும் விற்றவர்கள்தான்! ஆனால், முற்போக்கு சவடால், 'கொள்கை' முழக்கமிட்ட ராமதாசு கோஷ்டியினருக்கு இப்பிளவு பெருத்த அவமானத்தை ஏற்படுத்தி மூக்கறுத்துள்ளது. மேலும் பா.ம.க., தி.மு.க., காங்கிரசு பிளவுகள் - கோஷ்டி பூசலால் ஜெயலலிதாவை ''படுத்துக் கொண்டே ஜெயிப்பேன்'' என எம்.ஜி.ஆரைப் போல கனவு காண வைத்துவிட்டார்கள். ஜெயா ஆட்சியின் கொடுமைகளால் அதிருப்தியுற்று, மாற்று தலைமை தேடிய தமிழக மக்கள் மத்தியில் எதிர்க் கட்சிகள் மேலும் அவநம்பிக்கையை உருவாக்கி ஜெயாவுக்கே தொடர் வாழ்வளித்துள்ளன.

● ராசு

# அதிகார போதையில் ஆடிய போலீசு

புதிய ஜனநாயகத்தின் தர்மபுரி, ஊற்றங்கரை முகவரும் விற்பனையாளரும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியைச் சேர்ந்தவருமான சி.என். சுப்பிரமணி என்பவர் எழுதிய கடிதம், போலீசின் அதிகார போதைக்கும் அடக்குமுறைக்கும் உதாரணமாக இருப்பதால் இங்கே சுருக்கிப் பிரசுரித்துள்ளோம்.

நான் 20.10.93 அன்று தருமபுரி பேருந்து நிலையத்தில் 'புதிய ஜனநாயகம்' பத்திரிக்கை வளர்ச்சி நிதியை பேருந்துகளில் ஏறி பேசி வசூலித்துக் கொண்டிருந்தேன். அப்போது அங்கிருந்த ஒரு போலீசு ''நக்சலைட்டுக்கு நிதி வசூலித்து கொடுக்கிறாயா'' என்று கேட்டு தடுத்து ''பஸ் நிலையத்தில் வசூல் செய்யக்கூடாது; இடத்தை காலி செய்'' என விரட்டினார். நான் வெளியே போகாமல் மீறி கூடியிருந்த மக்களிடம் பேசத் தொடங்கினேன். சமூகத்தில் நடக்கும் கொடுமைகளையும் அதில் அனைத்து ஓட்டுக் கட்சிகளையும் அம்பலப்படுத்தி, சமூகக் கொடுமைகளிலிருந்து விடுதலைக்கு நக்சல்பாரிகளின் அரசியல் பாதையும் ஆயுதந்தாங்கிய மக்கள் புரட்சியுமே தீர்வு என்பதையும் விளக்கிப் பேசி பத்திரிக்கையின் நிதி நெருக்கடியையும் கூறி நிதி வசூல் செய்தேன். சிலர் நிதியும் கொடுத்து ஆதரித்தனர். அதிகார போதை தலைக்கேறி ஆத்திரமான போலீசு என்னை கழுத்தைப் பிடித்து இழுத்துச் செல்ல முயன்றதை தவிர்த்து விட்டு, மீண்டும் மக்களிடத்தில் போலீசை அம்பலப்படுத்தி பேசினேன். அப்பொழுது கூடி நின்று கேட்டவர்களை போலீசு ஓடி ஓடி விரட்டினாலும் மக்கள் அகன்று விடாமல் தள்ளி, தள்ளி நின்று பேச்சைக் கேட்டனர்.

பிறகு என்னைக் கைது செய்வதாகக் கூறிய போலீசிடம் சட்ட ரீதியாகவே பேசி உடன் செல்ல மறுத்தேன். வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று என்னை பேருந்து நிலையத்தின் போலீசு அறைக்கு கொண்டு போனது, போலீசு. ''நக்சலைட்டை பிடித்துள்ளேன்; அவசரமாக வரவும்'' என போலீசு நிலையத்திற்கும் தகவல் கொடுத்தார் அவர். இழுத்து வந்த வழியிலும் அறைவாயிலிலும் நின்று தொடர்ந்து போலீசை அம்பலப் படுத்தி முழக்கமிடவே மக்கள் குழுமுவது அதிகமாகிவிட்டது. மக்களைக் கலைக்க அப்போலீசார் படாதபாடுபட்டு தோற்றுப்போனார். விற்பனைக்கிருந்த புத்தகம் மற்றும் உண்டியலையும் பிடுங்கிக் கொண்டு என்னைத் தாக்க முற்பட்டார். நான் எச்சரிக்கை செய்யவே பின்வாங்கினார். பிறகு போலீசு நிலையம் கொண்டு செல்லப்பட்ட நான் ஏ.எஸ்.பி-யால் விசாரிக்கப்பட்டேன். ''கியூ'' -உளவுப் பிரிவினரும் விசாரித்தனர். கிண்டலாகவும் நயவஞ்சகமாகவும் பேசி விசாரணை செய்ததற்கு ஏற்ப பதிலடி கொடுத்தேன்.

என்னை எதுவும் செய்யாமல் வைத்து நேரத்தைக் கடத்துவதைப் பார்த்து ''ஒன்று 'கேஸ்' போடுங்கள் அல்லது என்னை வெளியே விடுங் கள்'' என்று வாதாடினேன். பிறகு டி.எஸ்.பி.யிடம் தொலைபேசி மூலம் கேட்டுவிட்டு வழக்கு பதிவு செய்தனர். நீதிபதி வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். வழிநெடுக போலீசைப் பற்றி தாக்கி முழக்கமிட்டேன். ''எங்கள் மானத்தை ஏன் வாங்குகிறாய்'' என போலீசார் கெஞ்சினர். ''போலீசு அதிகாரிகளைத் தான் முக்கியமாக நாங்கள் தாக்குகிறோம்; உங்களைப் போன்ற கீழ்நிலைப் போலீசாரை அல்ல; என்று நான் விளக்கியதும் அவரவர்க்கு போலீசு அதிகாரிகளால் இழைக்கப்பட்ட கொடுமைகளை என்னிடம் கொட்டினர். நீதிபதியிடம் ''என்ன வழக்கு போட்டுள்ளார்கள்'' (151, 71A வழக்குகள்) என்று கேட்டு தெரிந்து கொண்டு பொய் வழக்கு என்று எதிர்ப்பு தெரிவித்து நடந்ததைக் கூறி சொந்த ஜாமீனில் விடும்படி கோரினேன். நீதிபதி மறுத்து, ''வக்கீலை வைத்து முயற்சி செய்யுங்கள்'' என்று கூறிவிட்டார்.

தர்மபுரி கிளைச் சிறையில் அதிகாரிகள், ''நக்சலைட்டு வழக்கா, இவர்கள் தொல்லை தாங்கமுடியாது; சேலத்திற்கு கொண்டு போங்கள்'' என்று மறுத்து விட்டனர். சேலத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போதும் முழக்கமிடவே பேருந்து நிலையத்தில் மக்கள் கூடி விட்டனர். பிறகு தனி வாகனம் ஏற்பாடு செய்து அழைத்துச் சென்றார்கள். வழியில் பட்டினிப் போட்டதைக் கண்டித்து ''எனக்கும் போலீசாருக்கும் உணவு வாங்கித்தர வேண் டும்'' என்று அதிகாரியிடம் போராடிப் பெற்றேன். சேலம் சிறையில் அடைக்கப்பட்ட பிறகும் சிறுசிறு தேவைகளைக் கூடப் போராடிப் பெற வேண்டி வந்தது; அதாவது சிறையதிகாரிகள் வார்த்தையில், தொல்லை கொடுக்க வேண்டி வந்தது. பிறகு தோழர்களால் பிணையில் விடுவிக்கப்பட்டேன்.


படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி பதில்



● *நாம் யாருக்காகப் போராடுகிறோமோ... அவர்களே நம்மைப் புரிந்து கொள்ளாமல் இழிவாகப் பேசும் நிலையை மாற்ற என்ன வழி?*

- தஞ்சை நெப்போலியன், மானாமதுரை.

★ நாம் வேறு யாருக்காகவோ போராடுகிறோம் என்று கருதுவதும் அணுகுவதுமே தவறானது. உழைக்கும் மக்கள் தமது நலன்களுக்காக அணிதிரண்டு போராட வேண்டும் என்பதற்காக முன்கை எடுக்கிறோம் என்பதுதான் சரியாகும். இதை அவர்களது அறிவு நிலை, உணர்வு நிலை, தயார்நிலை ஆகியவற்றுக்குப் பொருத்தமாகத் தொடங்கி வளர்ப்பதில் நாம் தவறு செய்துவிட்டால் அவர்கள் நிராகரித்துவிடுவார்கள். நமது முயற்சிகள் யதார்த்த நிலைக்குப் பொருத்தமற்றதாகவும், எதிரி அவர்களைத் திசை திருப்பிவிடும் அளவுக்கு செல்வாக்குச் செலுத்துவதாலும் கூட இது நடக்கும்.

● *பீகாரில் மாவோயிச கம்யூனிச மையம் (எம்.சி.சி.) ஜன் அத்லத் (மக்கள் நீதி மன்றம்) என்ற அமைப்பின் மூலம் தனியாக நீதி வழங்குகிறார்கள். கடும் குற்றங்களுக்கு மரணதண்டனையும் உண்டு. இத்தகைய நீதி வழங்கல் பற்றியும், எம்.சி.சி. பற்றியும் உங்கள் கருத்து என்ன?*

- எ. இஜ்ஜத், நாகர்கோவில்.

★ இத்தகைய மக்கள் நீதி மன்றங்கள் நமது நாட்டிற்கு மிகவும் அவசியமானவை. கர்நாடகாவில் நடந்த ஒரு கற்பழிப்பு வழக்கில் உச்சநீதி மன்றம் சமீபத்தில் வழங்கிய தீர்ப்பைப் பார்க்கும்போது மக்கள் நீதி மன்றங்களின் அவசியம் நன்கு தெரியும். பாலுணர்வு தூண்டுதலால் நிகழ்ந்துவிட்டதுதான் கற்பழிப்பு என்று விளக்கமளித்து ஒரு காமுகனுக்குரிய தண்டனையைக் குறைத்து சமீபத்தில் தீர்ப்பு வழங்கியது இந்திய உச்ச நீதி மன்றம். அயோத்தி பாபரி மசூதி வளாகத்தில் அடையாள கரசேவைதான் செய்யப்போகிறோம் என்று இந்துமதவெறி பாசிஸ்டுகள் அளித்த வாக்குறுதியை ஏற்று அங்கு அவர்கள் திரளவும், மசூதியை இடிக்க மறைமுகமாகவும் உதவியது உச்ச நீதி மன்றம். போபாலில் ஆயிரக்கணக்கான ஏழை இந்திய மக்கள் மடியவும், லட்சக்கணக்கானோர் படுகாயமுறவும், தலைமுறை தலைமுறையாக ஊனமுறவும் காரணமான விஷவாயு படுகொலை காரர்களை சொற்ப அபராதத்தோடு தப்பிவிடவும் அவர்கள் மீது கிரிமினல் குற்ற வழக்கு போட முடியாமல் தடுக்கவும் பாதுகாப்பும் கொடுத்தது உச்ச நீதி மன்றம். இப்படி உச்ச (அ)நீதி மன்றத்தின் யோக்கிதைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். உச்ச நீதிமன்றத்தின் யோக்கியதையே இதுதான் என்றால் மிச்சநீதி மன்றங்களைப் பற்றிக் கேட்க வேண்டாம். இந்தநிலையில் புரட்சியாளர்களின் வழிகாட்டுதல், தலைமையிலான மக்கள் நீதி மன்றங்கள் நடத்துவது பீகாரில் மட்டுமல்ல ; நாடு முழுவதும் அவசியமே. அரசியல், சித்தாந்த ரீதியில் சில கருத்து மாறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் பீகாரில் இவற்றை நடத்தும் எம்.சி.சி. ஒரு மார்க்சிய - லெனினியப் புரட்சிகர அமைப்புதான் என்றே கருதுகிறோம்.

● *ராஜீவ் காந்தி கொலை வழக்கில் அமெரிக்க அதிபரான ஜார்ஜ் புஷ்க்கும் சம்பந்தம் உண்டு என்று பேசிக்கொள்கிறார்களே, அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?*

- வி.சௌந்திரராசன், அரிகிருட்டிணபுரம்.

★ அப்படிச் சொல்வது உண்மையாக இருக்கும் என்று நாம் நம்பவில்லை. அமெரிக்காவின் அடிவருடியாகத்தான் ராஜீவ் காந்தி ஊழியஞ்செய்து வந்தார். அவரைக் கொலை செய்யும் அளவுக்கு அமெரிக்காவுக்கு அவசியம் ஏதும் இல்லை. தம்மை ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசபக்த தியாகிகள் என்று நாடகமாடி அரசியல் ஆதாயம் அடைவதை நேரு - இந்திரா - ராஜீவ் பரம்பரை வழக்கமாகக் கொண்டிருந்தது; தமக்கு நெருக்கடி வரும் போதெல்லாம் அமெரிக்க - சி.ஐ.ஏ. சதி என்கிற பூச்சாண்டி காட்டிவந்தது என்பதை அமெரிக்காவும் அறிந்திருந்தது; ஆனால் இது வெறும் அரசியல் பிரச்சாரம் என்றும் அது அறியும். அவசரநிலை ஆட்சிப் பிரகடனத்தின் போதும், போபார்ஸ் பீரங்கிபேர ஊழல் அம்பலமானபோதும் அப்படி செய்தார்கள் என்பது இரு உதாரணங்கள். இதேபோன்ற அரசியல் ஆதாயத்துக்காகவும், ஈழ ஆக்கிரமிப்பு யுத்தக் குற்றங்களுக்காகவே புலிகள் பலிவாங்கிவிட்டார்கள் என்பதை மறைத்து, புலிகள் கூலிப் படையினர் என்று முத்திரை குத்தி சிறுமைப் படுத்தவும் காங்கிரசு கயவாளிகள் ராஜீவ் கொலை அமெரிக்க - சி.ஐ.ஏ. சதி என்று கூறினார்கள். ராஜீவ் கொலையை விசாரிப்பதற்காக இரு விசாரணைக் கமிசன்கள் அமைக்கப்பட்டன. அதில் ஒன்று ராஜீவ் கொலை பின்னணி - சதியைப் பற்றி விசாரிப்பது என்கிறார்கள். ராஜீவ் கொலை அமெரிக்க, சர்வதேச சதி - என்று கூச்சல்போட்ட காங்கிரசுக் காரர்களும், அரசுமே அதுபற்றி கமிசன் முன்பு வந்து ஆதாரங்களைத் தரவோ, வாதிடவோ பயந்து பல மாதங்கள் ஒளிந்து கொண்டன. கமிசன் பலமுறை நோட்டிசு அனுப்பிய பிறகு எவ்வித உருப்படியான ஆதாரமோ, வாதமோ முன்வைக்காமல் மழுப்பிக் கொண்டே போகின்றன. கமிசனுக்கே என்ன விசாரிப்பது என்று தெரியவில்லை. கமிசனுக்கு வேலையே கிடையாது என்று காங்கிரசு அரசு வக்கீலே கூறுகிறார். ராஜீவ் கொலையின் பின்னணி - சதி பற்றி ஒருபுறம் கமிசன் விசாரணை நடத்திக் கொண்டே மறுபுறம் 27 பேரைப் பிடித்துக் கொலைக் குற்றம் சுமத்தி வழக்கு நடத்திக் கொண்டிருக்கிறது, அரசு. இந்தக் கேலிக் கூத்தை, பித்தலாட்டத்தைக் கேள்வி கேட்கும் துணிவு புரட்சியாளர்களைத் தவிர, புலிகளை ஆதரிக்கும் தமிழினக் குழுக்களுக்கும் கூட கிடையாது. ராஜீவ் கொலையைத் தொடர்ந்து வந்த நாட்களில் அடக்குமுறைக்கு அஞ்சியும், அரசியல் ரீதியில் நியாயப்படுத்தும் துணிவின்றியும் இக்குழுக்கள், ராஜீவ் கொலை அமெரிக்க - சி.ஐ.ஏ. சதி என்றும், சிவராஜன், தாணு, சுபா போன்றவர்கள் சி.ஐ.ஏ. கைக்கூலிகள் என்றும் கூடபேசின. இப்போது அவர்களைத் தியாகிகள் என்று இரகசியமாகப் போற்றுகின்றன.

www.padippakam.com



● *உங்களது கோவில் கருவறை நுழைவுப் போராட்டம் இந்துமத உயர்சாதி ஆதிக்க சக்திகளின் வேர்களில் விழுந்த சரியான அடி. தீண்டாமை என்பதைப் பொறுத்த வரை இந்து மதத்தை மட்டுமே தாக்குவது என்பது தீண்டாமைக்கெதிரான போரை முழுமையாக்காது. தமிழகத்தில் பல தேவாலயங்களில் மற்ற சாதிகளைச் சேர்ந்த*

## ● ராஜீவ் கொலையில் புஷ்ஷுக்கு தொடர்புண்டா?

## ● எம்.சி.சி.-யின் மக்கள் நீதிமன்றம் சரியா?

*கிறித்தவர்களோடு சேர்ந்து அமரத் தாழ்த்தப்பட்ட கிறித்துவர்களால் முடியவில்லை. இது குறித்து என்ன செய்யப்போகிறீர்கள்? அவர்களது உரிமையை அவர்களுக்கு வாங்கித்தர நீங்கள் போராட்டம் நடத்தினால் அது மதத்திற்கு எதிரான போராட்டமாக எப்படி அமையும்? மத நம்பிக்கையில் இருந்து அவர்களை விடுவிக்க நீங்கள் நினைக்கவில்லையா?*

- ஆ.வில்லியம் ஜான் போஸ்கோ, சென்னை-94.

★ கிறித்துவ மதத்தில், தாழ்த்தப்பட்ட கிறித்துவர்கள் மீது உயர் சாதி கிறித்துவர்களது சாதி ஆதிக்கம், தீண்டாமை ஆகியவை பற்றி வாசகர் எழுதியிருப்பது சரிதான். திருச்சியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மேல் சாதியினருக்கும் தனித்தனி கல்லறைகள் இருப்பதும், இரண்டையும் பிரிக்கும் சுவர் இருப்பதையும் அதை இடிக்கப்போன பாதிரியாரையே கைது செய்து வழக்கு போட்டதையும், நீதிமன்றத்தில் மேல் சாதிக்குச் சாதகமாகத்தீர்ப்பு வந்ததையும் பற்றி ஏற்கனவே படத்துடன் அம்பலப்படுத்தினோம். இதேபோல தஞ்சையில் ''பங்குத்தந்தைகள்'' எனப்படும் பாதிரியார்களே சாதி அடிப்படையில் மேல்சாதி ஆதிக்கம் செலுத்துவதையும் எழுதியுள்ளோம். கிறித்துவ மத நிறுவனங்களுக்குள்ளாகவே, பாதிரியார்கள் - கன்னிகாஸ்திரிகளுக்குள்ளே கூட இத்தகைய சாதி வேறுபாடுகள், ஆதிக்கங்கள் நிலவுகின்றன. எந்த சாதிகளைச் சேர்ந்தவர்கள் என்கிற அடிப்படையில் பாதிரியார்களும், எவ்வளவு ''வரதட்சினை'' கொண்டுவருகிறார்கள் என்கிற அடிப்படையில் கன்னிகாஸ்திரிகளும் உயர்ந்த பதவிகளைப் பெறுகிறார்கள். இவை எல்லாம் எதிர்த்துப் போராட வேண்டியவைதான். நமது அமைப்பின் சக்திக்கும், வளர்ச்சிக்கும் ஏற்ப அதைச் செய்வோம். ஆனால் பிற மதங்களில் நிலவும் சாதி ஆதிக்கத்துக்குக் கூட (இந்து) பார்ப்பன சனாதன வருணாசிரம அமைப்புதான் காரணம்; அதன் தொடர்ச்சி, தாக்கம்தான் காரணம் என்பதை மறந்து விடக்கூடாது. இது (இந்து) பார்ப்பன சனாதன அமைப்பின் வலிமையையும், அதை எதிர்த்துப் போராட வேண்டியதன் முதன்மையான அவசியத்தையும்தான் காட்டுகிறது.

● *சமுதாயக் கண்ணோட்டம் உள்ள அனைவரும் அரசியலில் பங்கு கொள்வதில்லை. அவர்கள் பங்கு கொள்ளும் வகையில் கல்வி, மருத்துவம் சார்ந்த சமுதாயப்பணி ஒன்று ஏன் துவங்கக் கூடாது?*

- சி.செல்வராஜ், நெய்வேலி

★ கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது அரசின் பணி; அதற்காகவும் தான் மக்கள் பணத்தை வரியாகவும் பல்வேறு வகைகளிலும் திரட்டுகின்றனர். ஆனால் அதன் பெரும் பகுதியை அதிகாரவர்க்கம், இராணுவம், போலீசு, மந்திரிகள் உட்பட அரசு அமைப்பின் அனைத்துப் பிரிவினரும்தான் தின்றுகொழுக்கின்றனர். அதே சமயம் கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படைப் பணிகளைப் புறக்கணித்து, தனியார் பொறுப்பில் விடுகின்றனர். ஐ.எம்.எப்., உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களும் மேலும் அதிக அளவில் இப்படிச் செய்யும்படி நிர்பந்திக்கின்றன. அவற்றின் கட்டளைகளையும் ஆட்சியாளர்கள் ஏற்றுச் செயல்படுத்துகின்றனர். அது மட்டுமல்ல கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படைப் பணிகளை கட்டுப்படுத்தும், இயக்கும் அதிகாரமும் அரசிடம் தான் உள்ளது. சாதி - மத நிறுவனங்கள், பெரும் தரகு அதிகார முதலாளிகள், நிலப் பிரபுக்களின் ஆதிக்கம், தேவைக்கான வழியில் அடிப்படைப் பணிகளைக் கூட அரசு இயக்குகிறது. அப்படி இருக்கும் போது, தனிநபர்கள், அமைப்புகள் தாமே கல்வி, மருத்துவம் போன்ற பணிகளை நிறைவேற்றிவிட முடியாது. சிறு சமூக சேவைகளை மட்டும், வரம்புக்கும், கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு செய்ய முடியும். எனவே அதைவிட முக்கியமாக அனைத்தையும் கட்டுப்படுத்தி இயக்கும் அரசியலில் - தேர்தல் அரசியலில் அல்ல; அரசு எந்திரத்தையே அடியோடு தூக்கி எறிந்து புதியதை நிறுவும் அரசியலில் - ஈடுபட வேண்டியதுதான் சமுதாயக் கண்ணோட்டம் உள்ள அனைவரின் பணி என்பதையே நாம் வலியுறுத்துகிறோம்.

## கள்ளச் சாராய வருமானத்தில் கொடி கட்டும் 'மார்க்சிஸ்டு'கள்

கம்யூனிசக் கொள்கைக்கு குழி பறிப்பது மட்டுமல்லாமல் பல புதிய அவதாரங்களை எடுத்தும் 'மார்க்சிஸ்டுகள்' சாதனை படைத்து வருகிறார்கள். தற்போது அவர்கள் கள்ளச் சாராயத் தொழிலிலும் 'கொடி கட்டி' பறக்கிறார்கள். நாகை காயிதே மில்லத் மாவட்டம் கீழையூர் ஒன்றியம் வாழைக்கரை, திருக்குவளை, திருவாய்மூர், திருவாசல், மகிழி, திருப்பூண்டி, மேலப்பிடாகை ஆகிய ஊர்களில் 'சி.பி.எம்.' கட்சியைச் சேர்ந்தவர்கள் சாராயம் விற்று வருகிறார்கள்.

கீழையூர், கீழை ஈசனூர் ஆகிய கிராமங்களில் 'சி.பி.எம்.' கட்சியினர் நன்கொடை பெற்றுக் கொண்டு சாராயம் விற்க தனது கட்சியினரை அனுமதித்தனர். அதிகம் நன்கொடை கேட்டதால் அவர்கள் அ.தி.மு.க. கட்சியில் சேர்ந்து விட்டனர். திருவாசலில் முன்னாள் 'சி.பி.எம்.' கிளைச் செயலாளர் வடிவேல், கள்ளுக்கடை எடுத்து நடத்துகிறார். சடையன் கொட்டகத்தில் 12 ஆயிரம் ரூபாயை ஊருக்கு என வாங்கிக் கொண்டு சி.பி.எம்.-ஐச் சேர்ந்தவர்கள் கள்ளு, சாரய வியாபாரம் செய்து வருகின்றனர். மணக்குடி கிராமத்தில் கிராமத்தினரே ஊர்க் கட்டுப்பாடு போட்டு சாராயத்தை ஒழித்துள்ளனர்; எனினும் குடிப்பழக்கம் உள்ளவர்கள் 'சி.பி.எம்.' கட்சியினரின் சாராய மழையில் நனைந்து மூழ்குகின்றனர். திருவாய்மூர் சி.பி.எம். கிளைச் செயலாளர் கொடிக் கம்பம் நட, சாராயம் விற்கும் கட்சி ஆதாரவாளரிடம் ரூ 200/- ஐ பெற்றுள்ளார்.

கட்சியிலோ, மக்கள் திரள் அமைப்பிலோ சாராயம் குடிப்பதோ, விற்பதோ தவறு எனக் கட்டுப்பாடு போட்டால் மக்கள் திரளமாட்டார்கள் என்பதுதான் அவர்களது நிலைப்பாடு!

(தகவல்: இருட்டு, தஞ்சை).

www.padippakam.com

# வி.வி.மு.-வின் டங்கல் எதிர்ப்பு பொதுமக்களின் அமோக வரவேற்பு

டங்கல் திட்டம் நிறைவேற்றத்தால் ஏகாதிபத்தியங்களின் உற்பத்தி பின்னிலமாக்கப்படும் இந்தியா, உள்நாட்டு பாரம்பரிய விவசாய உற்பத்தியையும், உரிமையையும் இழந்து நிற்பதுதான் நடக்கும். நமது சொத்தாக விளங்கும் பல பழமையான தாவர - பயிர் வகைகள் ஏகாதிபத்தியங்களின் நலனுக்கான வியாபார பொருளாக்கப்படுவதோடு அழிந்தும் போகும். ஒவ்வொரு போகத்திற்கும் அந்நிய நிறுவனங்களிடம் விதை நெல்லுக்காக கையேந்தி நிற்க வேண்டும். எனவே விவசாயிகள் இத்திட்டத்திற்கு எதிராகவும் இதை நடைமுறைப்படுத்தும் ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் வீறு கொண்டு எழ வேண்டும் - என்ற பிரச்சாரத்தைக் கிராமங்களில் புரட்சியாளர்கள் பரவலாக செய்து வருகின்றனர்.

டங்கல் திட்டத்தை அம்பலப்படுத்தி உசிலை வட்டம் விவசாயிகள் விடுதலை முன்னணி, சுற்றுப் பகுதியில் 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் தெருமுனை பிரச்சார இயக்கம் மேற்கொண்டது. திடியன், வாலாங்காகுளம், அம்பட்டையன்பட்டி, உச்சப்பட்டி, மேட்டுப்பட்டி, திருமங்கலம், சின்ன வாகைக்குளம், பெரிய வாகைக் குளம், காங்கேயநத்தம், முண்டுவேலம்பட்டி, மலைப்பட்டி, உசிலம்பட்டி ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட இப்பிரச்சார இயக்கம் சிறந்த வரவேற்பைப் பெற்றது. திருச்சி-மக்கள் கலை இலக்கியக் கழகம், கலைக்குழு தோழர்களின் போர்முழக்க நிகழ்ச்சியுடன் தொடங்கி, தோழர் சீனிவாசன் உரை நிகழ்த்த, இந்நிகழ்ச்சி டங்கல் திட்டத்தை எளிமையாக விவசாயிகளுக்குப் புரியவைத்தது. மேலும் பகுதி பிரச்சினையான ஆரியப்பட்டி சமூக விரோதி இளகி போன்ற ஆதிக்க சக்திகளை எதிர்க்க வேண்டியதன் அவசியமும் விளக்கப்பட்டது. மக்கள் கூடி நின்று ஆர்வமுடன் கேட்டதோடு "நமது அமைப்பு" என்ற உணர்வுடன், தாராளமாக நிதியுதவி செய்ததையும் பார்க்க முடிந்தது. நிகழ்ச்சிக்கு வந்திருந்த 15-க்கும் மேற்பட்ட தோழர்களை விவசாயிகள் தத்தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவு கொடுத்தும் ஆதரித்தனர். இவ்வாறு 15-11-93 முதல் 26-11-93 வரை பிரச்சார சுற்றுப்பயணம் மேற்கொண்டது நல்ல பயனளித்துள்ளது. இறுதி நிகழ்ச்சியாக உசிலையில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டம், பலத்த மழையின் காரணமாக இயலாமற் போகவே, கூடியிருந்த மக்களிடம் முறையாக அறிவிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது.



# கலவையில் விவசாயி கொலை போலீசு நாய்களின் வெறிச்செயல்.

அரசின் மனித உரிமைக் கமிஷன் பற்றிய மசோதா நாடாளுமன்றத்தில் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆடு நனைவதாக ஓநாய் ஊளையிடுவது போன்றது இது என்று ஏற்கனவே அம்பலப்படுத்தியுள்ளோம். போலீசின் கொலைகளை - அத்துமீறல்களை நியாயப்படுத்துவதாக அல்லது பூசிமெழுகுவதாகத்தான் இதன் செயல்பாடு அமையும். ஆனால் ஒட்டு மொத்த போலீசு துறையே மக்கள் விரோதத் தன்மையில் உள்ளது என்பதை கடந்த நவம்பர் '93 இதழில் தனிக்கட்டுரையாக எழுதியிருந்தோம். தமிழகத்தில் அதிகரித்து வரும் கொட்டடிக் கொலைகள் - கற்பழிப்புகள் பற்றியும் இதற்கு ஜெயா ஊக்கமளித்துப் போலீசைப் பாராட்டி பரிசு வழங்குவதையும் அம்பலப்படுத்தினோம். அதற்குப் பிறகும் ஜெயா போலீசை ஊக்குவிப்பதும் குறையவில்லை; கொட்டடிக் கொலைகளும் தொடர்கின்றன. இதில் வட ஆற்காடு மாவட்டம் கலவை பள்ளக்காலனியைச் சேர்ந்த நடேசன் என்ற விவசாயி கொலை முக்கியமான ஒன்று.


கலவை போலீசு, மணி என்பவர் குடும்பத் தகராறு காரணமாக தனது சித்தப்பா நடேசன் மீது கொடுத்த புகாருக்காக விசாரணை என்கிற பெயரில் நடேசனை 12-11-93 அன்று இழுத்துச் சென்றது. போலீசு நிலையத்தில் அவரது மனைவி எள்ளம்மாள் முன்னிலையிலேயே பலமாகத் தாக்கியுள்ளனர். அவரது மனைவியை 300 ரூபாய் பணம் கொண்டு வந்து கொடுத்தால் விட்டுவிடுவோம் என விரட்டியடித்தனர். அந்த அப்பாவிப் பெண்ணும் பணத்தைப் புரட்டிக் கொண்டு ஊர்ப் பெரியவர் ஒருவருடன் போலீசு நிலையம் வந்து பார்த்தபோது நடேசன் போலீசு மிருகங்களால் தாக்கப்பட்டு நிர்வாணமாக குற்றுயிராகக் கிடந்தார். எழுந்து வரும்போதே மயங்கி விழவே மருத்துவரிடம் தூக்கிக் கொண்டு காண்பிப்பதற்குள் நடேசனின் உயிர் பிரிந்தது. இதைக் கேள்விப்பட்ட சுற்றுவட்டார மக்கள் திரண்டு, போலீசு நிலையத்தை முற்றுகையிடவே போலீசார் எல்லோரும் தப்பி ஓடிவிட்டனர். மக்கள் ஆத்திரத்திற்கு போலீசு நிலையமும் போலீசு குடியிருப்புகளும் இலக்காகின.

பிரேதத்தை அடக்கம் செய்ய மிரட்டிய டி.எஸ்.பி. போஜ் மற்றும் போலீசுக்கு எதிராக மக்கள் உறுதியுடன் போராடிய தன் விளைவாகத் தாசில்தார் தலையிட்டுப் பிரேத பரிசோதனை நடந்தது. பிறகு போலீசு கும்பல் வந்து "எங்களிடமே விளையாடுகிறீர்களா?" என மிரட்டி ஊருக்குள் புகுந்து தாக்கவே, ஆண்கள் எல்லோரும் தலை மறைவாகிவிட்டனர். அடக்கம் செய்யக்கூட ஆள் இல்லாமல் போய்விட்டார்கள். 150 பேர் மீது போட்ட பொய் வழக்கையும் திரும்பப் பெறுவதாக ஒத்துக் கொண்ட போலீசு, பிரேத அடக்கத்திற்குப்பின் 43 பேர் மீது 13 பிரிவுகளில் பொய் வழக்கு போட்டது. சிறையில் மிருகத்தனமாக அவர்கள் தாக்கப்பட்டனர். இவர்கள் பிணை முறையீடும் நிராகரிக்கப்பட்டது. உறவினர்களும் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. 15 நாளுக்குப் பின்தான் நடக்கமுடியாத அளவிற்குப் பலர் சித்திரவதை செய்யப்பட்டது தெரிந்தது.

இப்பிரச்சினையில் குடியரசு கட்சியினர் தலையிட்டு வழக்கும் நடத்தி வருகின்றனர். சம்பவத்தன்று குடிபோதையிலிருந்த 5 போலீசார் உட்பட எவர்மீதும் நடவடிக்கை இல்லை; சாட்சி இருந்தால் நியாயமாக நடவடிக்கை எடுப்பதாக ஓநாய் பாசத்தோடு கூறுகிறார், ஆர்.டி.ஓ. ஆனால் போலீசு தாக்குதலுக்கு அஞ்சி, பலர் பகுதிக்கு திரும்பவே இல்லை என்பதுதான் உண்மையாக உள்ளது.

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ

www.padippakam.com
Regd. No TN MS(S) 344



# இதுதான் இன்றைய இந்தியா

அருகிலுள்ள படத்தில் அருவி போல் கொட்டி கடலை நோக்கி ஓடுவது என்னவாக இருக்கும்? அது பால் என நாம் அறியும்பொழுது அதிர்ந்து தான் போகிறோம். கெட்டுப் போயிருக்கலாம்; அதனால் ஏதோ ஒரு நாள் கடலில் கொட்டியிருக்கலாம்' என நம்மை சமாதானப்படுத்திக் கொண்டுவிட முடியாது. இப்படி பம்பாயில் மட்டும் தினமும் கடலில் கொட்டி வீணாக்கப்படும் பாலின் அளவு 7 லட்சம் லிட்டர். ஒரு பருக்கை சோற்றைக் கீழே சிந்தினால்கூட பதறிப்போகும் சூழலில் வாழும் நமக்கு இச் செய்தி வயிறைப் பற்றி எரியச் செய்யும். 'சேமித்து வைக்க உரிய உபகரணங்கள் இல்லை; கொழுப்பை எடுத்து விட்டுத்தான் கடலில் கொட்டுகிறோம்' எனக் காரணங்களை அழகாக அடுக்குகிறார்கள் அதிகாரிகள். ஆனால் அவர்களின் அபார மூளையில் இதைத் தடுத்து நிறுத்த உருப்படியான யோசனை எதுவும் இதுவரை தோன்றவில்லை!

இதோ வயிறும் தலையும் பெருத்து, கையும் காலும் சூம்பிப் போய் நோயின் கொடுமை தாங்காது அழும் இச்சிறுவனைப் பாருங்கள். ஒன்றல்ல; இரண்டல்ல. இவனைப் போல் ஆயிரத்துக்கும் அதிகமான மழலைகள் 'எந்த நிமிடம் என்ன நேருமோ' என்ற சாவின் விளிம்பில் உள்ளனர். கடந்த ஆகஸ்டிலிருந்து அக்டோபருக்குள் நிமோனியாவிலும் வாந்தி பேதியிலும் இறந்து போன குழந்தைகளின் எண்ணிக்கை மட்டும் ஐநூறைத் தொட்டுவிட்டது. இதில் 48 குழந்தைகள் பிறந்து மூன்று மாதங்கூட முழுமையாக முடியவில்லை. நடப்பதும் வேறு எங்கோ அல்ல; அதே மகாராஷ்டிரா மாநிலத்தின் விதர்பா பகுதியிலுள்ள 600-க்கும் அதிகமான கிராமங்களின் அவல நிலையிது. திடீரென்று பரவிய தொற்று நோயுமல்ல இது. சத்தான உணவின்மைதான் நோய்களின் படையெடுப்புக்கு முக்கிய காரணம். கடந்த முப்பது ஆண்டுகளாகவே இது தான் அந்த ஆதிவாசி மக்களின் சாபக்கேடான வாழ்க்கை. 180 குழந்தைகள் இறந்தபின்தான் அரசு எந்திரம் எட்டிப் பார்த்தது. பிழைக்க வேலையும் நோயுற்ற குழந்தைகளுக்குச் சத்தான உணவும் கூடுதலான மருத்துவ வசதியும் கேட்ட அம்மக்களுக்கு கிடைத்ததோ நிர்வாகச் சீர்திருத்தம் என்ற அறிவிப்புதான்.





ஒரிஸ்ஸாவில் தொடரும் பட்டினிச் சாவுகளும், மத்திய பிரதேசத்தின் மலைவாழ் மக்கள் , காட்டு கிழங்குகளைத் தின்று உயிர்வாழ்வதும் இன்றைய யதார்த்தமாக உள்ளது. பூகம்பம் பாதித்த பகுதிகளிலும் உணவுப் பொருள் கிடைக்காது மக்கள் திண்டாடி தவித்தனர். உற்பத்தி மற்றும் இயற்கை வளம் இருந்தும் சொந்த நாட்டு மக்களின் வாழ்வில் சிறிதும் அக்கறை காட்டாத இந்த வக்கிர எண்ணங்கொண்ட அரசை நாம் ஆழ் கடலினுள் நெட்டித் தள்ளப் போவது எப்போது?

படிப்பகம்